
விஜயமங்கலம்



ஆசிரியர்

ஆ. முருகராஜ்

பதிப்பாசிரியர்

முனைவர் **தி. ஸ்ரீ. ஸ்ரீதர்,** இஆப.,

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

2009

விஜயமங்கலம்

ஆசிரியர்

ஆ. முருகராஜ்

பதிப்பாசிரியர்

முனைவர் **தி. ஸ்ரீ. ஸ்ரீதர்,** இஆப.,

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை - 600 008

2009

BIBLIOGRAPHICAL DATA

Title	:	**VIJAYAMANGALAM**
Editor	:	**Principal Secretary &Commissioner**
Copy right	:	**T.N. State Dept. of Archaeology**
Subject	:	**History**
Language	:	**Tamil**
Edition	:	**First**
Publication No	:	**211/2009**
No. of Pages	:	**V + 135**
Type Point	:	**11pt**
Paper used	:	**80 GSM Maplitho**
Printer	:	**The Chennai Printers Industrial Cooperative Society Ltd.** 6, Pycrofts Road, Triplicane, Chennai - 600 005 Ph: 28446287/89
Publisher	:	**State Dept. of Archaeology** Tamil Valarchi Valaagam Halls Road, Egmore Chennai - 600 008.
Price	:	**Rs.** 89

முனைவர் தி.ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப.,
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தொல்லியல் துறை,
தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை,
சென்னை - 600 008.

பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை நமது பண்பாட்டுச் சின்னங்களைப் பேணிக் காக்கும் பணியினையும் மற்றும் நம் பண்பாட்டுக் கூறுகளை உலகிற்கு எடுத்தியம்பும் வகையிலும் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக இத்துறையில் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் மூலம் தொல்லியல், தமிழ், வரலாறு மற்றும் சமஸ்கிருதம் ஆகிய பாடப்பிரிவுகளில் முதுகலைப் பட்டம் பயின்ற மாணவர்களுக்கு ஓராண்டு பயிற்சி அளித்து முதுநிலை பட்டயம் வழங்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சியின் இறுதியில் ஒவ்வொரு மாணவரும் ஆய்வேடு சமர்ப்பித்து வருகின்றனர். அவ்வாய்வேட்டில் ஊரினை தேர்வு செய்து கொண்டு அங்குள்ள கோயில்கள் அவற்றில் காணப்படும் கல்வெட்டு, கலை, கட்டடக்கலை மற்றும் வரலாற்று சிறப்புகளை தொகுத்தளிக்கின்றனர். அவ்வாய்வேட்டினை துறை மூலமாக நூலாக வெளியிடும் பணியினை மேற்கொண்டு வருகிறது.

இந்நூலில் 1977-78 ஆம் ஆண்டு கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவரான ஆ. முருகராஜ் 'விஜயமங்கலம்' என்ற ஊரினைப் பற்றிய பல செய்திகளைத் தொகுத்து தந்துள்ளார். இந்நூலில் கொங்கு நாட்டைப் பற்றிய செய்திகளும் கொங்கு நாட்டை ஆட்சிபுரிந்த அரசுகளைப் பற்றியும் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக 'விஜயமங்கலம்' என்ற இவ்வூர் கொங்குநாட்டின் வரலாற்றில் சிறப்பு பெற்றிருந்ததை கல்வெட்டுகள் மற்றும் இலக்கியச் சான்றுகள் மூலம் விவரித்துள்ளது சிறப்பாகும்.

கொங்கு மண்டலத்தில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெறவுள்ள நிலையில் கொங்கு நாட்டைச் சேர்ந்த இந்நூல் வருவது சாலப்பொருத்தமாகும்.

இந்நூலில் கொங்குச் சோழர்கள் என்ற பகுதியினை இணைத்திட உதவிபுரிந்த முனைவர் அர. பூங்குன்றன், கல்வெட்டறிஞர், பதிப்பு பணியில் ஈடுபட்ட இத்துறை கல்வெட்டாய்வாளர்கள் திரு. கி.சு. சம்பத், திரு. இரா. சிவானந்தம் அவர்களுக்கும் எனது பாராட்டுதல்கள். மற்றும் இந்நூலிற்கு அட்டை வடிவமைப்பு மற்றும் D.T.P. செய்தளித்த திருமதி. கோ. கீதா மற்றும் அச்சுப்பிரிவு பணியாளர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுதல்கள்.

இந்நூல் வெளியிட நிதி உதவி அளித்திட்ட தமிழ்நாடு அரசுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் ஆய்வறிஞர்கள், ஆய்வு மாணவர்கள் மற்றும் பள்ளி, கல்லூரி, மாணவ, மாணவியர்கள் மற்றும் அனைத்துத் தரப்பினரும் படித்து பயன்பெற விழைகிறேன்

தி.ஸ்ரீ. ஸ்ரீதர்

21-12-2009

சென்னை.

பொருளடக்கம்

	பதிப்புரை		
	முன்னுரை	—	1
1.	கொங்குநாடு	—	5
2.	பாண்டியர் கால கொங்கு	—	11
3.	கொங்கு நாட்டில் சேரர்	—	14
4.	சோழர்களும் கொங்கு சோழர்களும்	—	15
5.	பிற்காலப் பாண்டியர்கள்	—	23
6.	கொங்குப் பாண்டியர்கள்	—	25
7.	போசளர்	—	27
8.	விஜயநகர் அரசும் நாயக்கர் வம்சமும்	—	29
9.	நாட்டுப் பிரிவுகள்	—	31
10.	விஜயமங்கலம்	—	34
11.	விஜயமங்கலத்தைச் சுற்றியுள்ள சமணத் தலங்கள்	—	36
12.	கோயில்கள்	—	53
13.	சிற்பங்கள்	—	65
14.	செப்புத் திருமேனிகள்	—	86
15.	கல்வெட்டுச் செய்திகள்	—	91
16.	கல்வெட்டுகளில் மன்னர்கள்	—	94
17.	கோயிலும் சமயமும்	—	104
18.	இலக்கியத்தில் விஜயமங்கலம்	—	112
19.	வழிபாடும் விழாக்களும்	—	115
20.	விஜயமங்கலம் கிராமமும் மக்களும்	—	119
21.	துணை நின்ற நூல்கள்	—	122
22.	நிழற்படங்கள்	—	124

முன்னுரை

பெயர்க் காரணம்

தமிழ் நாட்டின் முப்பெரும் பிரிவுகளான சேர, சோழ, பாண்டிய நாடுகள் அந்தந்த குல மன்னர்கள் ஆண்ட நாடாதலால் அப்பெயர்கள் பெற்றன. ஆனால் கொங்கு நாட்டிற்கு அப்பெயர் வழங்கக் காரணம் குறித்து பலரும் பல கருத்துகளைக் கூறுகின்றனர். மலைவளம் மிகுந்த நாட்டில் தேன் வளமும் மல்கியிருத்தல் இயல்பு. கொங்கு (தேன்) மிகுந்த நாடு என்பதே கொங்கு நாடு என்ற சொற்றொடரின் பொருளாகும் என்கின்றனர் சிலர். சேர நாட்டின் கீழைப் பகுதி மலைகளாலும் உயர்நிலை மட்டத்தாலும் குவிந்திருப்பதனாலேயே கொங்கு நாடெனப்பட்டது. கும்-குமி-குவி. கும்-குங்கு. குங்கு-கொங்கு-குவிந்த பொருள் அல்லது இடம் என்று பொருள் விளக்கம் தருகின்றனர் சிலர். 'கொங்கு விளைந்தால் எங்கும் விளையும்' என்ற பழமொழியின்படி பயனற்ற நிலம் என்று கொண்டு 'கொன்' என்ற அடிப்படையில் வந்த பெயர் என்பர் மற்றும் சிலர். மைசூர் நாட்டிலுள்ள தலைக்காட்டைத் தலைநகரமாகக் கொண்டு அரசாண்ட மேலைக் கங்க வம்சத்து முதல் மன்னனான கொங்குணிவர்மனின் பெயரால் கொங்கு நாட்டிற்கு அப்பெயர் வந்திருக்கலாம் என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர். அவர்கள் தங்கள் கருத்துக்கு சோழன் ஆண்ட நாடு சோழநாடு எனவும், பாண்டியன் ஆண்ட நாடு பாண்டியநாடு எனவும் பெயர் பெற்றது போலக் கொங்குணி அரசர்கள் (மேலைக்கங்கர்கள்) ஆண்ட நாடு கொங்கு நாடு எனப் பெயர் பெற்றது என்று உதாரணம் காட்டுகின்றனர். ஆனால் இதுவரை 'கொங்கு நாடு' என்ற பெயர் எப்படி வந்தது என்று யாரும் உறுதியான கருத்தைக் கூறவில்லை.

கொங்கு நாடு தனி நாடே

தமிழகம் சேர மண்டலம், சோழ மண்டலம், பாண்டிய மண்டலம், தொண்டை மண்டலம், கொங்கு மண்டலம் என ஐந்து பெரும் பிரிவுகளாக பிரிந்திருந்தது. இதனை,

"தமிழ் மண்டலம் ஐந்தும் தாவிய
ஞானம் உமிழ்வது போல உலகந்திரிவர்"

என வரும் திருமூலர் பெருமொழி வலியுறுத்தும். கொங்கு நாடு தனி நாடே என்பதை இதன் மூலம் அறியலாம். கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படும் சிலப்பதிகாரம் கண்ணகியைக் கடவுளாகக் கொண்டு விழா கொண்டாடும்போது, பாண்டிய, சேர, சோழ அரசர்களோடு கொங்கு நாட்டு அரசரும் கொண்டாடியதாகச் சொல்கிறது. புறநானூறும், "கொங்கு புறம் பெற்ற கொற்ற வேந்தே" என்று கொங்கு நாட்டைப் பற்றிக் குறிக்கின்றது. தென் இந்தியாவில் பழங்காலத்திலே தமிழகத்தில் இருந்த பிரிவுகளில் கொங்கு நாடும் ஒன்று என்று திரு. கே. வி. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் கூறுகின்றார். துடிசைப் புராணமுடையார்,

"பூமகட்கும் அற்புத நெடுந்திறலணிப் புனிதக்
கோமகட்கும் நெட்டிதழ் விரி பங்கயக் கோவின்
மாமகட்கும் இன்னமு துறழ், கவிவலர் வழுத்து
நாமகட்கும் ஓர் உறையுளாங் கொங்கு நன்னாடு"

என கூறியிருப்பதாலும், கொங்கு நாடு ஒரு தனி நாடாக இருந்து தன்னகத்தே பழமையும் பெருமையும் பீடும் கொண்டதாகச் சரித்திரக் காலத்திற்கு முற்பட்டிருந்தே இன்று வரை சிறந்து விளங்கி வருகின்றது.

எல்லைகள்

தமிழ் நாட்டிலுள்ள சேர, சோழ, பாண்டிய நாடுகளின் எல்லைகளைத் தனிப்பாடல்கள் கூறியுள்ளதைப் போல, கொங்கு நாட்டின் எல்லைகளையும் தனிப்பாடல்கள் குறிக்கின்றன. இத்தனிப் பாடல்களைப் பாடியவர்கள் யாரென்று தெரியவில்லை. தனிப்பாடல் கூறும் எல்லைகள்:

"வடக்குத் தலைமலையாம் வைகாவூர் தெற்கு
குடக்குவெள் ளிப்பொருப்புக் குன்று - கிழக்கு
கழித்தண் டலைசூழும் காவிரிசூழ் நாடா
குழித்தண் டலையளவும் கொங்கு".

கொங்கு மண்டல சதகம் பதிப்பு:

"வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்கு
குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்று - கிழக்கும்
களித்தண் டலைமேவு காவிரிசூழ் நாட்டுக்
குளித்தண் டலையளவு கொங்கு."

செந்தமிழ்:

"வடக்குப் பெரும்பாலை வையாறு தெற்கு
குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்று - தடக்கீழ்
கழித்தண் டலையளவு காவிரிசூழ் நாடா
குழித்தண் டலையளவு கொங்கு".

இப்பாடல்களில் கொங்கு நாட்டின் வடக்கெல்லையானது தலைமலை என்றும், பெரும்பாலை என்றும் இரண்டு விதமாகக் குறிக்கப்பட்டுள்ளன.

கொங்கு மண்டலச் சதகத்தில்,

"மதிற்கரை கீட்டிசை தெற்குப் பழனி மதிகுடக்குக்
கதித்துள வெள்ளை மலைபெரும் பாலை கவின்வடக்கு
விதித்துள நான்கெல்லை சூழவள முற்று மேவிவின்னோர்
மதித்திட வாழ்வு தழைத்திடு நீள்கொங்கு மண்டலமே"

என்று வடக்கெல்லை பெரும்பாலை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழக அரசின் கையெழுத்துப் பிரதிச் சாலையில் கொங்கு நாட்டு பெரிய பட்டக்காரர் வேணா உடையாக் கவுண்டர் வரலாற்றைக் கூறும் கைப்பிரதி கொங்கு நாட்டு எல்லையைக் குறிக்கின்றது.

"வடபுறம் மறம் சோகரமலை
மது கரைக்கு மேற்கு
வராஹ கிரிக்கு வடக்கு
வெள்ளி மலைக்குக் கிழக்கு"

இதில் கூறப்பட்டுள்ள வடக்கு எல்லையான மறம்சோகர மலை எது என்று தெரியவில்லை. இதுவரை கண்ட குறிப்புகளிலிருந்து கொங்கு நாட்டு எல்லைகளைக் குறிக்கலாம்.

வடக்கு எல்லை - மைசூர் பீடபூமிக்கும், கோவை, சேலம் இவைகளின் சமவெளிக்கும் மத்தியில் உள்ள மலைத் தொடர் களாகிய தலை மலை, பிளிகிரிரங்கன் மலை, மாதேசுவரன் மலை, தொட்டூர் மலை முதலிய மலைத் தொடர்கள் எனலாம்.

தெற்கு எல்லை - வராக மலைத்தொடரும் அதற்கடுத்து மேற்கே இருக்கும் ஆனைமலைத் தொடரும் ஆகும்.

மேற்கு எல்லை - வெள்ளி மலைத் தொடரும், நீலகிரி மலையும் அடங்கும்.

கிழக்கு எல்லை - சேர்வராயன் மலை, கல்வராய மலை, பச்சை மலை, கொல்லி மலை முதலியன.

இவை கொங்கு நாட்டின் எல்லைகளாகக் காணப்பட்டன. கொங்கு நாடு நான்கு பக்கங்களிலும் மலைகளால் சூழப்பட்ட ஒரு சமநிலமாக உள்ளது. அதன் நடுவில் காவிரி நதியானது தென்கிழக்காக ஓடி சோழ நாட்டிற்குச் செல்கிறது. கொங்கு நாட்டின் மேற்கில் சேர நாடும், தெற்கில் பாண்டிய நாடும், கிழக்கில் சோழ நாடும், கோ நாடும், வடக்கில் அதியமான் நாடும் இருந்தன.

கொங்கு மண்டல சதகம் கொங்கு நாட்டைப் பற்றிக் கூறுமிடத்து,

“பொற்பு மிகுகொங்கு நாடுசெழிந்திடப் பூமியெங்கும்
நற்பய னுற்றுச் சுகித்திடு மென்ன நனூற்று பழஞ்
சொற்பெற வெல்லா வளமும் பொருந்திச் சுரபியொடு
வற்சக மோங்கி வளர்வதன் றோகொங்கு மண்டலமே”

பொலிவு மிகுந்த ‘கொங்கு நாடு செழித்தால் இப்புவியிலுள்ள எந்த நாடும் நல்ல பலனைப் பெற்றுச் சுகமடையுமென்று’ கூறும் சொல்லுக்கேற்ப கொங்கு நாடு பழமையானதும், தனக்கென்று ஒரு தனித்தன்மையைக் கொண்ட தனி நாடும் ஆகும்.

⌘⌘⌘

கொங்கு நாடு

தொல்பழங்காலம்

வரலாற்று அறிஞர்கள் காலத்தை வரலாற்றுக் காலம் என்றும் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்றும் இரு பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். எழுத்துச் சான்றுகள் கிடைக்கப்பெறும் காலம் வரலாற்றுக் காலமாகும். முற்பட்ட காலத்தை வரலாற்று அறிஞர்கள் கற்காலம், உலோகக் காலம், இரும்புக் காலம் எனப் பிரித்துள்ளனர்.

கற்காலம்:

கொங்கு நாட்டில் சேர்வராயன் மலை, கல்வராயன் மலை, கொல்லி மலை முதலிய மலைகளில் கற்காலத்தைச் சார்ந்த தொல்பொருட்கள் கிடைத்துள்ளன. சேலம் மாவட்டம் மோகனூரில் புதிய கற்காலக் கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இரும்புக் காலம் அல்லது சங்க காலம் :

இரும்பின் உபயோகத்தை அறிந்து அதனால் கருவிகளைச் செய்து பயன்படுத்திய காலத்தை வரலாற்று அறிஞர்கள் இரும்புக் காலம் என்கின்றனர். இக்காலத்தில் மக்கள் உபயோகித்த பல சின்னங்கள் கொங்கு நாட்டில் கிடைக்கின்றன. எகிப்து நாட்டில் உள்ள பிரமிடுகளில் சேலத்து எ.ஃ.கு இருந்ததாக அறிஞர்கள் கூறுகின்றனர். விஜயமங்கலத்துக்கு அருகிலுள்ள பெருந்துறை, நல்லாம்பட்டி என்ற ஊர்களிலும், கணியம்பூண்டி, நாட்டுக்கல் பாளையம், ஆனைமலை முதலிய ஊர்களிலும் ஈமக்குழிகள் காணப்படுகின்றன. இவைகள் கல்வட்டம் (Cairn circle), கல்லறை (Dolmenoid cist), தாழி (Urn), நடுகல் (Herostone) போன்ற அமைப்புகளையுடையதாகும். ஈமக்குழிகள், ஈமத்தாழிகளிலிருந்து இரும்பினாலான கருவிகள், செப்புப் பாத்திரங்கள், வெண்கலப் பொருட்கள், சுடுமண்ணால் ஆகிய ஆண், பெண் உருவங்கள், காதணிகள், பெரில், கார்ணிலியன் ஜாஸ்பர், அகேட், குவார்ட்ஸ் போன்ற வண்ணக் கற்களாலாகிய மணிகளும் கிடைத்துள்ளன. இரும்புக் காலத்திய மக்கள் திராவிடர்களே என்பதற்கு

ஆதிச்சநல்லூரில் கிடைத்த மண்டை ஓடுகளை ஆராய்ந்து கூறியுள்ளனர். ஈமத் தாழிகள் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் காணக் கிடைக்கின்றன. புறநானூற்றில்,

"தேவர் உலகம் எய்தினன் ஆதலின்
அன்னோற் கவிக்கும் கண்ணகன் தாழி" என்றும்,
"இடுகவென்றோ - சுடுகவென்றா
படுகுழிப்படுக . . ." என்றும் குறிக்கின்றது.

மணிமேகலை இறந்தவர்களை அப்புறப்படுத்துபவரைப் பற்றி,

"சுடுவோர் இடுவோர் தொடுகுழி படுப்போர்
தாழ்வயின் அடைப்போர் தாழியில் கவிப்போர்"

என்று குறிக்கிறது. குலோத்துங்கன் சோழனுலா, விக்கிரம சோழனுலா, தக்கயாகப்பரணி முதலிய பிற்கால இலக்கியங்களும், அவற்றை 'கற்கிடை' என ஈமத்தாழிகளைக் குறிப்பிடுகின்றன. தமிழகத்தில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களைக் கொண்டு இரும்புக் காலம் கி.மு. 1000 முதல் கி.பி. 500 வரை ஆகும்.

சங்க காலம்

கொங்கு நாட்டைச் சேர அரசர்கள் கைப்பற்றுவதற்கு முன்பு, கொங்கு நாட்டில் பல சிற்றரசர்கள் பரம்பரையாக ஆண்டு வந்தனர். இச்சிற்றரசர்களைப் பற்றி நாம் சங்க இலக்கியங்களின் துணையுடன்தான் அறிய இயலும். கொங்கு நாட்டை ஆண்ட சிற்றரசர்களிலே தகடூரை ஆண்ட அதியன்தான் மிகச் சிறப்புப் பெற்றவன். புறநானூறு முப்பது பாடல்கள் இவனைப் புகழ்கின்றன. அதியமான் அரசர்களில் நெடுமிடல் அஞ்சி, அதியமான் நெடுமான் அஞ்சி, இவன் மகன் பொருட்டெழினி ஆகிய மூவர் மட்டுந்தான் சங்க கால இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றனர். ஆனால் அதியமான் பரம்பரையினர் கி.பி 8-ஆம் நூற்றாண்டு வரை குறுநில மன்னராக கொங்கு நாட்டில் ஆட்சி செய்து வந்ததற்குச் சான்றுகள் கிடைக்கின்றன. அதியமான் அரசர்கள் தம் பெயரோடு 'விண்ணன்' என்ற பெயரைத் தலைமுறையாக தரித்து வந்தனர். சங்க இலக்கியங்களுள் ஒன்றான அகநானூறு 301 ஆம் பாடல் அதியன் விண்ணத்தனார் என்பவரால் பாடப்பட்டது. தருமபுரி மாவட்டம் இருளப்பட்டி என்னுமிடத்தில் கிடைத்த நடுகல் ஒன்றில்

விசையமங்கலம் ஆண்ட விண்ணமேரேனாதி' என வருகின்றது. இந்நடுகல் கி.பி. 5 அல்லது 6ம் நூற்றாண்டைச் சார்ந்தது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள விஜயமங்கலம் கொங்கு நாட்டு 24 பிரிவுகளில ஒன்றான குறுப்பு நாட்டில் உள்ளது. இக்குறுப்பு நாட்டை அதியமான் மரபினர் இடைக்காலத்தில் ஆட்சி செய்ததாக "அளவில் அரணக் குறும்பில் அதியர்கோன்" என்று பெரிய புராணம் கூறுகிறது. இன்று நாமக்கல் என்று அழைக்கப்படும் ஆரைக்கல் முன்பு அதியமான் அரசர்களின் கீழிருந்தது. சங்க காலத்து நெடுமானஞ்சி, எழினி ஆகிய அரசர்களுக்குப் பிறகு கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் சோமன் என்னும் அதியேந்திரன் புகழ்மிக்கவனாய் ஆட்சி புரிந்திருக்கிறான் இச்சான்றுகளினால் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு வரை அதியமான் பரம்பரையினர் இருந்தனர் என்பது தெரியவருகின்றது.

அதியமான் அரசர்களை அடுத்து கொங்கு நாட்டில் சங்க காலத்தில் ஓரி என்பவன் கொல்லிமலைப் பகுதியையும், கழுவுள் என்பவன் காமூர் பகுதியையும், குமணன் என்பவன் முதிரம் என்ற ஊரிலும் ஆட்சி செய்து வந்தனர். பெருஞ்சித்தரனார் குமணனைப் பற்றி,

"அரிது பெறு பொலங்கலம் எளிதினின்வீசி
நட்டோர் நட்ட நல்லிசைக் குமணன்
மட்டார் மறுகின் முதிரத் தோனே" எனப் பாடியுள்ளார்.

கொங்கர்:

சங்க இலக்கியங்கள் கொங்கர் என்ற ஒரு இனத்தவரையும் குறிக்கின்றன. இவர்கள் கால்நடைச் செல்வங்களை வளர்த்தனர் என்பதையே சங்க இலக்கியங்கள் பெரும்பாலானவைக் குறிக்கின்றன. "கொங்கர் ஆபரந்தன்ன" எனவும், "கொங்கர் படுமணி யாயம் நீர்க்கு நிமிர்ந்து செல்லும்" எனவும் அகநானூறு குறிக்கின்றது. பதிற்றுப்பத்து, "ஆகெழு கொங்கர்" என்றும், சிலப்பதிகாரம், "கொங்கர் செங்களம் வேட்டு" என்றும் கொங்கர்களைப் பற்றிக் குறிக்கின்றன. கொங்கர்களின் பூர்விக நாடு கொண்கான நாடு என்பதேயாகும் என்று திரு. இராமமூர்த்தி கூறுகிறார். கொண்கானங்கிழான் என்பவன் புலவர் மோசிகீரனார் புறநானூற்றில் பாடப் பெற்றவன் குறுந்தொகையில் தோழி கூற்றாக வரும் பரணர் பாட்டு அருமையானது. பசும்பூண் பாண்டியனுக்கும் கொங்கர் கோமானுக்கும் வாகை என்ற இடத்தில் போர் நடந்தது. இப்போரில்

பாண்டியனது தளபதியான அதிகன் யானையில் இருந்தபடியே போர் செய்த போது, யானையும் அதிகனும் கொல்லப்பட்டனர். அப்போது கொங்கர் பெரும் ஆரவாரம் செய்தனர். இந்த ஆரவாரத்தை விட, தலைவன் களவிலே தலைவியோடு புணர்ந்த புணர்ச்சி பற்றிய வதந்தி பெரிதாகப் பரவி விட்டதாகத் தோழி சொல்கிறாள்.

"மயங்குமலர்க் கோதை குழைய மகிழ்நன்
முயங்கிய நாடஅச்சில்வே அலரே
கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்
பசும்பூண் பாண்டியன் வினைவில் அதிகன்
களிறொடு பட்ட நான்றை
ஒளிறுவாண் கொங்கர் ஆர்ப்பினும் பெரிதே"

இப்பாட்டினால் கொங்கர் என்பார் கொண்கான நாட்டைச் சேர்ந்தவர்கள் என அறியலாம். கொங்கு நாட்டு பொள்ளாச்சி வட்டத்திலுள்ள ஆனைமலைக் கல்வெட்டு 'வீரகேரள வளநாட்டு நன்னனூர்' என்று கூறும் ஆனைமலை என்னும் ஊர் நன்னனூர் எனக் குறிப்பதின் மூலம் கொங்கர்களின் ஆதிக்கம் இதுவரை பரவியிருந்ததா என்ற ஐயப்பாடு எழுகிறது. கொங்கு நாட்டில் குடியேறிய இக்கொங்கர்கள் ஆரம்பக் கால திராவிடக் குடியேறிகளே என்று திரு. பி. டி. சீனிவாசன் அவர்களும், ஜே. டி. கார்மலியஸ் என்பவரும் எழுதியுள்ளனர்.

சேரர் ஆதிக்கம்:

கி.பி. முதல் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாலக்காட்டுக் கணவாய் வழியாகக் கொங்கு நாட்டிற்கு வந்த சேரர்கள் கொங்கு நாட்டின் தென் பகுதியில் சில ஊர்களைக் கைப்பற்றினர். உதியஞ் சேரலாதன் என்பவனே சேரர்களின் துவக்க வரலாற்றிலிருந்து தெரிந்த முதல் அரசன் ஆவான். இவனின் இரண்டாம் மகன் பல்யானைச் செல்கெழுகுட்டுவன். இவன் கொங்கு நாட்டைக் கைப்பற்றியதை பதிற்றுப்பத்து,

"ஆ கெழு கொங்கர் நாடகப்படுத்த
வேல்கெழுதானை வெருவரு தோன்றல்"

என்று கூறுகிறது. இவன் காலம் முதற்கொண்டு கணைக்கால் இரும்பொறை காலம் வரை (சுமார் கி.பி. 210) கொங்கு நாடு சேரர் ஆட்சியிலிருந்தது.

முன் இடைக்காலம் :

'கொங்கு தேச ராசாக்கள்' என்ற பெயருடைய கையெழுத்துப் பிரதி ஒன்று தமிழக அரசு கையெழுத்துப் பிரதிச் சாலையில் உள்ளது. அதில் கொங்கு தேசத்தை ஆண்ட அரச பரம்பரையைப் பற்றிச் சொல்லி இருக்கிறது. இந்நூலை எழுதியவர் யாரென்று தெரியவில்லை. இந்நூல் கொங்கு நாட்டில் முதலில் ரெட்டி குலத்தில் தோன்றிய ஏழு அரசர்கள் ஆட்சி புரிந்ததைக் குறிக்கின்றது. இவர்கள் ஸ்கந்தபுரத்தை தலைநகராகக் கொண்டு அரசாண்டனர். ஸ்கந்தபுரம் எங்குள்ளது என்பதில் அறிஞர்களிடம் பலகருத்து வேறுபாடுகள் உள்ளன. புலவர் குழந்தை நீலமலையின் அடிவாரத்தில் பவானி ஆற்றங்கரையில் அமைந்துள்ள டணாய்க்கன் கோட்டையாக இருக்கலாம் என்கின்றது. திரு. மு. ஆரோக்கியசாமி காங்கேயம் கந்தபுரம் என ஆகின்றது என்கின்றார். தாராபுரத்திற்கு அருகிலுள்ள கொங்கூரே கந்தபுரம் என திரு. செ. இராசு அவர்கள் கருதுகின்றார். அவர் கொங்கூர் = கொங்கு + ஊர் என்ற சொற்களின் கூட்டாகும். கொங்கு என்றால் மணம். அதன் வடசொல் ஸ்கந்தம், எனவே ஸ்கந்தம் + புரம் = ஸ்கந்தபுரம் ஆயிற்று என்று பொருள் கொள்கின்றார். ஸ்ரீவீரராஜ சக்கரவர்த்தி என்பவன் ரெட்டி குலத்தில் முதல் அரசன் ஆவான். இக்குலத்தின் கடைசி அரசனும் ஏழாவது மன்னனும் ஆன திருவிக்கிரமதேவ சக்கரவர்த்தியைத் தவிர மற்ற அனைவரும் சமண மதத்தைச் சேர்ந்தவர்கள். கடைசி அரசன், சங்கர தேவர் என்பவரால் சமண மதத்திலிருந்து சைவ மதத்திற்கு மாற்றப்பட்டான். இவர்களின் காலம் கி.பி. 250 முதல் கி.பி. 405 வரை என்று டாக்டர் ஆரோக்கியசாமி அவர்கள் கருதுகின்றார். இந்த ராசாக்களில் கடைசி அரசனின் காலம் கி.பி. 4-ம் நூற்றாண்டு என்றுள்ளது.

கங்கர் வம்சம் :

ரெட்ட குலம் அல்லது ரெட்டி குலத்திற்குப் பின்னர் கொங்கு நாட்டை ஆண்டவர்கள் கங்க குலத்தைச் சேர்ந்தவர்கள். சிம்மநந்தி ஆசிரியர் என்ற சமணப் பெரியார் பேரூர் என்ற இடத்தில் இரு கங்க இளவரசர்களைச் சந்தித்தார் என்றும், அவர்களில் ஒருவனான மாதவ கொங்குணிவர்மன் என்பவனைக் கொண்டு கங்கப் பேரரசை நிறுவினார் என்றும் பல செப்பேடுகளும், நூல்களும் கூறுகின்றன. கங்க அரசு

நிறுவப்பட்டபோதே கங்கர்களுக்கும் சமண சமயத்திற்குமிடையே ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தியது போலாகும் என்கிறார் செல்போர் (Salefore). முதல் அரசன் கொங்கணீவர்மன் ஆவான். கொங்கு தேச ராசாக்களில் இவன் சக ஆண்டு 101-ல் (கி.பி. 179) பட்டமேறினான் என்று குறிக்கின்றது. கொங்கு நாட்டை கங்க குலத்தைச் சேர்ந்த இருபது அரசர்கள் ஆட்சி செய்தனர். இவர்களில் குறிப்பிடத்தக்கவன் துர்வினீதன். இவன் காலத்தில் கொங்கு நாட்டில் சமண மதம் சிறப்புடன் விளங்கியது. இதற்கு சான்றாக குணாட்டியர் என்பவர் பைசாச மொழியில் எழுதிய பிருகத்கதா என்ற சமண நூலை வடமொழியில் மொழி பெயர்த்துள்ளதைக் குறிக்கலாம். இவன் கி.பி. 482-ல் பட்டாபிஷேகம் பெற்றதாகச் செந்தமிழ் என்ற நூலில் குறிக்கப்பட்டுள்ளது. இராஜமல்ல தேவராயன் என்பவன் கங்க குலத்தின் கடைசி அரசன். கொங்கு தேச ராசாக்கள் இவனுடைய காலம் கி. பி. 894 என்றும் இவனுக்குப் பிறகு கொங்கு தேசம் சோழர் வம்சத்திற்கு சேர்ந்து விட்டதாகவும் கூறுகிறது.

⌘⌘⌘

பாண்டியர் கால கொங்கு

அரிகேசரி பராங்குச மாறவர்மன் :

கி.பி. 710 - 765. இவன் பல்லவ மன்னன் நந்திவர்மனின் சம காலத்தவன். இவன் மழகொங்கு நாட்டைக் கைப்பற்றி அந்நாட்டு மன்னன் தனக்குக் கப்பஞ் செலுத்தி வருமாறு செய்தனன் என்றும், கங்க அரசன் மகள் பூசுந்தரியை மணம் செய்து கொண்டான் என்றும் வேள்விக்குடிச் செப்பேடு கூறுகின்றது. இவன் கொங்கு நாட்டிற்கு படையெடுத்துச் சென்றபோது திருப்பாண்டிக் கொடு முடிக்குச் சென்று சிவபெருமானை வணங்க, நவமணித்திரளும் பொற்குவியலும் மனமகிழ்ந்து கொடுத்தான் என்பதை வேள்விக்குடிச் செப்பேட்டால் அறியலாம். இதனால் இவனது சிவபக்தியின் மாட்சியினை உணரலாம்.

ஜடில பராந்தக நெடுஞ்சடையன் :

வேள்விக்குடிச் செப்பேடு இவனுடையதே. தற்சமயம் இங்கிலாந்திலுள்ள இலண்டன் பொருட்காட்சிசாலையில் உள்ளது. ஸ்ரீவரமங்கலச் செப்பேடு, காவிரியாற்றின் வடகரையிலுள்ள ஆயிரவேலி, அயிரூர், புகழியூர் என்ற இடங்களில் அதியமானைப் போரிற் புறங்கண்டனன் என்றும், தோல்வி எய்திய கொங்கர் கோமானைக் களிறொடும் பிடித்துக் கொணர்ந்து மதுரையில் சிறை வைத்து, கொங்கு நாட்டை அடிமைப் படுத்தினான் என்றும் கூறுகின்றது. இப்போரில் தோல்வியுற்ற கொங்கர் கோமான் என்னும் அதியமான் நாமக்கல்லில் ஆட்சி புரிந்தவன். இவன் அதியமான் நெடுமானஞ்சியின் வழித்தோன்றலாக இருக்கலாம். கொங்கு மன்னனும் அதியமானும் வெவ்வேறு அரசர்கள் என்று திரு. சாஸ்திரியார் கருதுகின்றார். 'பரம வைஷ்ணவன் தானாகி நின்றிலங்கு, மணிநீண்முடி நிலமன்னவன்' என ஸ்ரீவரமங்கலச் செப்பேடு புகழ்வதால் இவன் வைணவப் பற்று மிகுதியாக உடையவன் என்று தெரிகிறது. மேலும் இவன் காலத்தில் வைணவ சமயக் குரவருள் ஒருவராகிய பெரியாழ்வார் பாண்டிய நாட்டிலே வாழ்ந்து வந்தார். ஸ்ரீவரமங்கலச் செப்பேடு, அவன் கொங்கு நாட்டைக் கைப்பற்றிய பிறகு அங்குள்ள காஞ்சிவாய்ப் பேரூருக்குச் சென்று, அவ்வூரில்

திருமாலுக்குக் குன்ற மன்னதொரு கோயில் எடுப்பித்தான் என்று குறிக்கின்றது. தற்சமயம் இத்தகைய திருமால் கோயில் பேரூரில் இல்லை.

வரகுணன் :

இவன் இரண்டாம் இராஜசிம்மனின் மகன். இவன் பல்லவ வேந்தன் நந்திவர்மன் (கி.பி. 795 - 846) என்பவனை கொங்கு நாட்டுக் கருவூரில் வெற்றி கொண்ட செய்தியை, பராந்தக பாண்டியனுடைய ஏழாவது ஆண்டில் வெளியிடப்பட்ட தளவாய்ப்புரச் செப்பேட்டால் அறியலாம். கொங்கு நாட்டில் பாண்டியர் ஆதிக்கம் இருந்த காரணத்தினால் கொங்கு நாட்டிலிருந்து இவனால் பல்லவனை எதிர்க்க முடிந்தது.

ஸ்ரீமார ஸ்ரீவல்லபன் :

முதலாம் வரகுணனின் மகனான இவன் கி.பி. 835-ல் ஆட்சிக்கு வந்தான். புதுக்கோட்டை மாவட்டம் சித்தன்னவாசல் சமணர் குகைக் கோயிலிலுள்ள ஒரு கல்வெட்டு பார் முழுவதையும் ஆண்டவன் என்பதையும், அவனிபசேகரன் என்ற பட்டத்தையும் கொண்டவன் என்பதைத் தெரிவிக்கின்றது. இவன் ஆட்சிக் காலத்தில் பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மனை நான்கு முறைகள் எதிர்த்தான். அவை ஆனூர்ப் போர், தெள்ளாற்றுப் போர், குடமூக்குப் போர், அரிசிற்கரைப் போர் என்பன. ஆனூர் கொங்கு நாட்டில் நொய்யல் ஆற்றைச் சார்ந்துள்ளது. அங்கு பல்லவ மன்னனுக்கும் ஸ்ரீமாறஸ்ரீவல்லபனுக்கும் நடந்த போரில், பல்லவ மன்னன் தோல்வியுற்றான் என தளவாய்புரச் செப்பேடு, "காடவனைக் கடலானூர்ப் பீடழியப் பின்னின்றும்" என குறிப்பதிலிருந்து அறியலாம்.

இரண்டாம் வரகுணப் பாண்டியன் :

இவன் ஸ்ரீமாறஸ்ரீவல்லபனின் முதல் மகனாவான். இவன் எப்பொழுது ஆட்சிக்கு வந்தான் என்பதைச் சரியாகக் கூற ஐவர் மலை கல்வெட்டு (இந்த இடம் கொங்கு நாட்டு பழனி வட்டத்தில் உள்ளது.) வரகுணனின் எட்டாம் ஆட்சியாண்டு சகம் 792 எனக் குறித்துள்ளது. அக்கல்வெட்டு கி.பி. 870-ல் அங்கு செதுக்கப்பட்டுள்ளது எனவே இவன் கி.பி. 862-ல் ஆட்சிக்கு வந்தான் என்பதை அறியலாம்.

பராந்தகப் பாண்டியன் :

ஸ்ரீமாறஸ்ரீவல்லபனின் இரண்டாவது மகன். இவன் கி.பி. 880-ல் பட்டத்திற்கு வந்தான். தளவாய்புரச் செப்பேடு இம்மன்னனின் ஏழாவது ஆட்சியாண்டில் வெளியிடப்பட்டது. அச்செப்பேட்டில், "கொங்கினின்று தேனூரளவும் குடகொங்கருடல் மடிய வெங்கதிர் வேல் வலங்கொண்டும்" என்று குறிக்கப்படுவதால் பாண்டியற்கு திரை செலுத்தி வந்த கொங்கு நாட்டரசன் முரண்பட்டதால் இவன் கொங்கு நாட்டு மீது படையெடுத்ததற்கும் காரணமாகும் எனலாம்.

⌘⌘⌘

கொங்கு நாட்டில் சேரர்

கோயம்புத்தூர் மாவட்டம் வெள்ளலூரில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இரு கல்வெட்டுகள் உள்ளன. அக்கல்வெட்டுகளில் சேர அரசர்களான கோக்கண்டன் வீரநாராயணன், கோக்கண்டன் ரவி என்ற பெயர்கள் உள்ளன. இவ்விரு கல்வெட்டுகளிலிருந்தும் கோயம்புத்தூரும் அதன் சுற்றுப்புறங்களும் சேரர் ஆட்சியிலிருந்தன எனத் தெரிய வருகின்றது. இவர்களுடைய பட்டங்கள் 'சந்திர சூரிய வம்சத்தின் இரத்தினங்கள்' என்று உள்ளதால், இவர்கள் தாய் பாண்டிய குலத்தைச் சேர்ந்தவர்கள் என்று அறியலாம். நாமக்கல் பட்டயங்கள் சேரர்கள் சூரிய வம்சத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறுகின்றது. பேரூரில் கண்டன்ரவியின் மகனான ரவிகண்டனின் சிதைவுற்ற கல்வெட்டு ஒன்றுள்ளது. அதில் வேதங்கள், பாரதம் முதலானவைகள் சொல்ல நிவந்தம் கொடுத்தது குறிக்கப்பட்டுள்ளது. கண்டன் என்ற பெயரை சேரர்கள் தங்களுடைய பெயர்களுடன் சேர்த்து வந்தனர் என்பதை இக்கல்வெட்டின் மூலம் உணரலாம். மேலும், வெள்ளலூர்க் கல்வெட்டில் கோவை நகரும் சுற்றியுள்ள இடங்களும் 'வீரகேரள நல்லூர்' என அழைக்கப்பட்டது. இவைகளிலிருந்து 9-ஆம் நூற்றாண்டில் கொங்கு நாட்டில் சேரர் வலிமை இருந்தது தெரிய வருகின்றது.

⌘⌘⌘

சோழர்களும்
கொங்குச் சோழர்களும்

கொங்கு நாட்டின் அரசியல் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து சோழர்கள் ஆதிக்கத்தில் வந்தது. சோழர்களில் முதலாம் ஆதித்தன் (887-907) கொங்கு நாட்டு வேட ராஜாக்களை வென்று தளவன்புரத்தில் (தலைக்காடு) முடிசூடிக் கொண்டான் என்று கொங்கு தேச ராஜாக்கள் கூறும். அண்மையில் கண்டு பிடிக்கப்பெற்ற திருத்தணி - வேளஞ்சேரி செப்பேடுகள் அவ்வரலாற்றினை உறுதிப்படுத்தும். முப்பது ஆண்டுகளுக்கு முன் கோவை நகருக்கருகில் இராசகேசரிப்பெருவழி என்றொரு பெருவழி கண்டுபிடிக்கப் பெற்றது. இப்பெருவழி பற்றிய கல்வெட்டு வட்டெழுத்திலும், தமிழ் எழுத்திலும் பொறிக்கப் பெற்றுள்ளது. வட்டெழுத்தில் ஒரு வெண்பா பாடல் பொறிக்கப் பெற்றிருப்பதைப் பார்க்கலாம்.

“திருநிழலு மன்னு யிருஞ்சிறந் தமைப்ப
ஒருநிழல் வெண்டிங்கள் போலோங்கி - ஒரு நிழல்போல்
வாழியர் கோச்சோழன் வளங்காவிரி நாடன்
கோழியர் கோக்கண்டன் குலவு.”

இக்கல்வெட்டுக்கருகில் ஆயிரம் ஆண்டுகட்குமுன் போடப்பெற்ற பெருவழியும் உள்ளது. இப்பெருவழி கண்டராதித்தன் காலத்தைச் சேர்ந்ததென்றும், முதலாம் இராஜராஜன் காலத்தைச் சேர்ந்ததென்றும், கருத்துகள் உள்ளன. இவையிரண்டும் வரலாற்றுப் போக்கிற்கு மாறானவை. கோக்கண்டன் என்ற பெயர் சோழர் மரபில் முதலாம் ஆதித்தனையும், இரண்டாம் இராசராசனையும் குறித்து வந்தது. கல்வெட்டு எழுத்து வடிவம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. அதனால் இக்கல்வெட்டில் கூறப்பெறும் கோக்கண்டன் இரண்டாம் இராசராசனாக இருக்க முடியாது. மேலும் தஞ்சை மாவட்டம் தில்லைதானம் என்ற ஊரில் கிடைக்கும் கல்வெட்டில் ‘ஸ்வஸ்திஸ்ரீ பல்யானைக் கோக்கண்டனாயின தொண்டை நாடு பாவிய இராசகேசரியாலும் சேரமான்

கோத்தானுரவியாலும் என்று தொடங்குவதைப் பார்க்கலாம். இக்கல்வெட்டில் பல்யானைக் கோக்கண்டன் என்ற அடைமொழி தொண்டைநாடு பாவிய இராசகேசரிக்குக் கூறப்பெறுகின்றது. சோழ அரசர்களில் தொண்டைநாடு பாவிய இராசகேசரி முதலாம் ஆதித்தன் மட்டுமே. ஆகையால் கோக்கண்டன் என்று பெருவழிக் கல்வெட்டில் கூறப்பெறுவது முதலாம் ஆதித்தனையே ஆகும். சங்க காலந்தொட்டு வழக்கத்திலிருந்த இப்பெருவழி முதலாம் ஆதித்தன் காலத்தில் புதுப்பிக்கப்பெற்று இராசகேசரிப்பெருவழி என்று பெயர் மாற்றப் பெற்றிருக்க வேண்டும்.

முதலாம் ஆதித்தனுடைய மகன் முதலாம் பராந்தகன் கி.பி. 907 முதல் ஆண்டான். இவன் கொங்குநாட்டைவென்றதாக செப்பேடுகளும், கல்வெட்டுகளும் பேசுகின்றன. இவனுக்கு வீரசோழன் என்ற பட்டப்பெயரும் உண்டு. இந்தப் பெயரால் கொங்கு நாட்டின் ஒரு பகுதி வீரசோழ மண்டலம் என்று அழைக்கப் பெற்றது. ஈரோட்டில் முதல் பராந்தகன் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. இம்மன்னனின் ஆட்சியின் பிற்பகுதியில் அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டன. அதனால் தொண்டை நாட்டை பாணர்களிடமிருந்து வாங்கி பிரதுவிகங்கர் ஒப்படைத்தான். அதுபோலவே கொங்குப் பகுதியை கொடும்பாளூர் இருக்கு வேளிர்வசம் ஒப்படைத்தான். இருக்குவேளிர் சுயாட்சி பெற்ற சிற்றரசர்களாக ஆண்டனர் கொங்குசோழர்களின் முற்காலக் கல்வெட்டுகள் (கி.பி. 10-11 - ஆம் நூற்றாண்டு) வட்டெழுத்திலும், பிற்காலக் கல்வெட்டுகள் தமிழ் எழுத்திலும் பொறிக்கப்பட்டுள்ளன.

கோனாட்டரசர்களில் வீரசோழப் பெருமானடிகள், வீரசோழ கலிமூர்க்கன், கலிமூர்க்க விக்கிரமசோழன் என்ற மன்னர்கள் முதல் மூன்று மன்னர்கள் ஆவர். இவர்களில் முதல் மன்னன் வீரசோழன் கி.பி. 947-ல் ஆட்சியைத் தொடங்கியிருக்க வேண்டும். இவனே கொங்குச் சோழர்களில் முதல் மன்னன் என்று கே. வி. சுப்ரமணிய அய்யர் கருதுவது ஆலத்தூர் கல்வெட்டால் உறுதிப்படுகின்றது. ஆலத்தூர் கல்வெட்டு "ஸ்வஸ்திஸ்ரீ வீரசோழப் பெருமான் அடிகளுக்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு முப்பத்தைந்தாவது" என்று குறிப்பிடும். இவன் கலிமூர்க்கன் என்பவனின் தந்தை ஆவான். இவனுடைய ஆட்சி பராந்தகனின் பிற்பகுதியில் தொடங்குகின்றது.

அதனால் பராந்தகனுக்குரிய வீரசோழன் என்ற சிறப்புப்பட்டத்தைத் தன் பெயராகக் கொண்டு ஆண்டான். இவன் கல்வெட்டுகள் வள்ளியெறிச்சில் என்ற ஊரிலும் கிடைக்கின்றன. ஆலத்தூரில் ஒரு கல்வெட்டு கிடைத்துள்ளது. வேறெங்கும் அவன் கல்வெட்டுகள் கிடைக்கவில்லை.

கலிமூர்க்கன் (கி.பி. 985-1004) :

இவன் கல்வெட்டுகளில் வீரசோழ கலிமூர்க்கன் என்று அழைக்கப் பெறுகின்றான். இவனுடைய கல்வெட்டுகள் பிரமியம், கொடுவாய் ஆகிய ஊர்களில் பொறிக்கப் பெற்றுள்ளன. இவன் இருபத்திநான்கு ஆண்டுகள் ஆட்சி செய்துள்ளான்.

முதலாம் விக்கிரம சோழன் (கி.பி. 1004-46) :

இவன் கலிமூர்க்கனின் மகன். கொங்குச் சோழர்களில் நீண்ட காலம் ஆண்டவர்களில் இவனும் ஒருவன். பிரமியத்தில் இவனுடைய மெய்க்கீர்த்தி ஒன்றுள்ளது. இவன் மகளை முதலாம் இராசேந்திர சோழனுக்கு மணம் முடித்திருந்தான். இந்த மகள் இறந்ததன் நினைவாக பிரமியம் கோயிலுக்குக் கொடையளித்துள்ளான். இவனுடைய கல்வெட்டுகள் பிரமியம், வள்ளியெறிச்சில், அன்னூர், திங்களூர் ஆகிய ஊர்களில் கிடைக்கின்றன. திங்களூர் கல்வெட்டு சக ஆண்டுடன் கிடைப்பதால் வரலாற்றாண்டை உறுதிப் படுத்த முடிகின்றது. இவன் காலத்தில் வாழ்ந்த இவனுடைய உத்தரமந்திரி நானாதேசி நாட்டுச் செட்டி வீரசங்காத சுற்றிய தேவன் என்பவன் விஜயமங்கலத்திலும் ஆலத்தூரிலும் தன் பெயரால் சமணப் பள்ளிகளை உருவாக்கினான். பிரமியம் என்ற ஊர் அவன் பேரால் வீரசங்காத சதுர்வேதிமங்கலம் என்று அழைக்கப்பெற்றது. அதனால் விக்கிரமசோழன் அனைத்து மதங்களுக்கும் ஆதரவளித்தான் என்பது உறுதிப்படுகின்றது. இவன் ஆட்சி அமைதியும் வளமும் கொண்டதாக விளங்கியது.

விக்கிரமசோழ அபிமான சோழன் (கி.பி. 1047-1085) :

இவன் கல்வெட்டு ஒன்று அன்னூர் சிவன் கோயிலில் உள்ளது. பெயர் மட்டும் பொறிக்கப் பெற்றுள்ளது. செய்தி ஏதும் இல்லை. அண்மையில் நடுவச்சேரியில் கண்டுபிடிக்கப் பெற்ற கல்வெட்டு ஒன்று விக்கிரமசோழனின் மெய்க்கீர்த்தியுடனும் இவன் பெயருடனும் கிடைத்துள்ளது.

பராக்கிரமசோழன் :

கோபிச்செட்டிப்பாளையம் அருகில் கண்டுபிடிக்கப்பெற்ற கல்வெட்டு ஒன்று பராக்கிரம சோழன் என்று தொடங்குகின்றது. இக்கல்வெட்டில் விக்கிரமசோழனின் மெய்க்கீர்த்தியும் உள்ளது. இந்தப் பராக்கிரம சோழன் கொங்குச் சோழரில் முதலாம் விக்கிரம சோழனே ஆவான் என்று கூறுவர். இக்கல்வெட்டு அவனுடைய ஆறாவது ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பெற்றுள்ளது.

அபிமான சோழ ராஜாதிராஜன் (கி.பி. 1085-1100) :

இம்மன்னனுடைய கல்வெட்டுகள் பிரமியம், திருமுருகன்பூண்டி ஆகிய ஊர்களில் கிடைக்கின்றன. திருமுருகன்பூண்டிக் கல்வெட்டு பிராமணர்களுக்கும் தேவரடியார்களுக்கும் அளித்த உரிமையைப் பற்றியது.

உத்தமச்சோழன் (கி.பி. 1100-1118) :

இம்மன்னனுடைய கல்வெட்டு விஜயமங்கலத்தில் ஒன்று கிடைத்துள்ளன. இவன் காலம் முதல் விஜயமங்கலத்தில் கொங்குச் சோழர் கல்வெட்டுகள் கிடைக்கின்றன.

இவனுடைய கல்வெட்டு பிரமியம், அகிலாண்டபுரம், விஜயமங்கலம், பட்டாலி ஆகிய ஊர்களில் கிடைக்கின்றன. இவன் காலத்தில் கொங்குச் சோழர்களுக்கும், வீரகேரளர்களுக்குமிடையில் பூசல்கள் மிகுந்துவிட்டன. அதனால் காரைத்தொழு என்ற ஊரில் இவன் ஒரு கோட்டையைக் கட்டிப் படையையும் நிறுத்திவைத்தான். வீரகேரளர்களும் இவன் கோட்டைக்கருகில் வஞ்சகர் வஞ்சகன் கோட்டை என்ற பெயரில் ஒரு கோட்டையைக் கட்டியிருந்தார்கள்.

ராஜாதிராஜ வீரசோழன் (கி.பி. 1118-1138) :

இம்மன்னனுடைய கல்வெட்டு விஜயமங்கலம், பிரமியம் ஆகிய ஊர்களில் கிடைக்கின்றன.

உத்தமசோழ வீரநாராயணன் (கி.பி. 1138-1149) :

இவனுடைய கல்வெட்டுகள் பல கிடைத்துள்ளன. வீரகேரளர்களிலும் ஒரு வீரநாராயணன் இருந்துள்ளான். இருமன்னர்கள்

கல்வெட்டுகளையும் பிரித்தறிவது கடினமாக உள்ளது. இவனுடைய கல்வெட்டுகள் கோயில்பாளையம், பெருந்தமலையூர் ஆகிய ஊர்களில் கிடைக்கின்றன.

முதலாம் குலோத்துங்கன் (கி.பி. 1149-1168) :

கொங்குச் சோழர்கள் பாண்டியன் தாயாதிச் சண்டையில் ஈடுபட்டு தங்கள் அரசியல் செல்வாக்கை உயர்த்திக் கொண்டார்கள். இந்த சிறப்பு இவன் காலத்தில்தான் நடைபெற்றது. குலோத்துங்கன் தன் மைத்துனன் குலசேகர பாண்டியனுக்காக மதுரைக்குப் படையுடன் சென்றான். எதிர்த்து நின்ற வீரபாண்டியனுக்காக இலங்கை அரசனின் படை வந்தது. இலங்கைப் படையைத் தோற்கடித்து குலசேகரனை அரியணையில் ஏற்றினான். இவன் போருக்குச் செல்லும் முன் யாத்திரை தானம் செய்தான் என்று கருவூருக்கருகில் உள்ள நெருவூர்க் கல்வெட்டு கூறும்.

மூன்றாம் வீரசோழன் (கி.பி. 1168-1196) :

வீரசோழன் இரு கொங்கும் ஒன்றாக ஆண்டவன் என்று கூறிக் கொள்கிறான். இவன் பாண்டியன் தாயாதிச் சண்டையில் பங்கேற்றவன். இவன் மூன்றாம் ஆட்சி ஆண்டில் கொங்கு நாட்டுக் கோயில்களுக்கு வரி நீக்கும் ஆணையை வழங்கினான். அக்கல்வெட்டு வாசகம் கோனேரின்மை கொண்டான் என்று தொடங்குகின்றது. திரிபுவனவீரதேவன் என்று முடிகின்றது. மத்திய அரசு கல்வெட்டுத் துறையினர் இக்கல்வெட்டு வாசகத்தை வீரராசேந்திரனுக்குரியது என்று கருதினர். அவர்களைப் பின்பற்றி மு. ஆரோக்கியசாமி அவர்களும் வீரராசேந்திரன் கல்வெட்டு என்றே முடிவு செய்தார். ஆனால் வி. மாணிக்கம் அவர்கள் இக்கல்வெட்டு மூன்றாம் வீரசோழனுடையது என்று முடிவு கட்டினார். திரிபுவனவீரதேவன் என்ற விருதுப் பெயர் மூன்றாம் வீரசோழனுக்குரியது என்ற அடிப்படையில் இம்முடிவுக்கு வந்தார். இந்தப் பின்னணியில் ஒரே வாசகம் கொண்ட ஏழு கல்வெட்டுகளை ஆய்வு செய்ய வேண்டும். பாரியூர், திங்களூர், விஜயமங்கலம், கூகலூர், பட்டிலூர், மொடக்கூர், குன்றத்தூர் ஆகிய ஊர்களில் இக்கல்வெட்டுகள் பொறிக்கப் பெற்றுள்ளன.

அந்தக் கல்வெட்டில் வடகொங்கில் இருபது நாடுகளும், ஏழு சிவாலயங்களும் குறிக்கப்பெறுகின்றன. இந்நாடுகளிலும் ஏழு சிவாலயங்களிலும் வாங்கப்பெற்ற வரிகள் (ஒட்டச்சு) இனி செலுத்த

வேண்டியதில்லை என்றும், அந்த வரித் தொகையை கோயில் வழிபாட்டிற்குப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் ஆணையில் குறிப்பிட்டுள்ளான். இதுபோன்ற மற்றொரு கல்வெட்டு வாசகம் தென்கொங்கில் துடியலூர், சிறக்கெறிச்சில், அமரபயங்கரபுரம், கூடலூர், இடிகரை, கோயில்பாளையம் ஆகிய ஊர்களில் பொறிக்கப்பெற்றுள்ளது. இவை அனைத்தும் ஒரே வாசகம் கொண்டவை. இக்கல்வெட்டுகளும் வாயறைக்காநாட்டு கோயில்கள் மேல் கூறப்பெற்ற ஊர்களில் உள்ள சிவன் கோயில்கள் ஆகியவற்றில் பூசை நடைபெறாமல் நின்று போயிற்று என்று சிவப்பிராமணக் காணியாளர்கள் வேண்டிக் கொண்டமையால் அக்கோயில் வரிகளை நீக்கியுள்ளான். காவிடிக்கால் நாடு, நல்லூர்க்கால் நாடு ஆகிய நாடுகளில் உள்ள சிவப்பிராமணர்களுக்கும் இந்த ஆணை பிறப்பிக்கப்பெற்றுள்ளது. அதனால் வீரசோழன் ஆட்சி பொறுப்பேற்ற மூன்றாம் ஆண்டிலேயே கோயில்களுக்குள்ள குறைகளைக் களைந்து கொடை அளித்துள்ளான் எனலாம். இம்மன்னன் இரு கொங்கையும் ஒன்றாக ஆண்டவன் என்ற வகையில் கோயில்களுக்குக் கொடை அளித்துள்ளான். இது ஒருங்கினைந்திய மன்னர்கள் அனைவர்க்கும் பொதுவான இயல்பு.

மூன்றாம் வீரசோழன் ஆட்சியில் கொங்கு நாட்டில் பல மத்வதானங்களும், பிரமதேயங்களும் அளிக்கப்பெற்றன. மேலும் பல கோயில்கள் கட்டப்பெற்றன. அவ்வரசன் காலத்தில் காடழித்து வேளாண் நிலமாக மாற்றும் பணி விரிவடைந்தது.

இம்மன்னனுடைய பிறந்த நட்சத்திரமும் சூரிய கிரஹணமும் ஒரே நாளில் வந்தமையால் பிரம்மஹத்தி தோஷம் வந்து விட்டது என்றும் அந்த தோஷத்தைப் போக்க சிவலிங்கத்தைப் பிரதிட்டை செய்து கோயில் கட்ட வேண்டும் என்றும் பிராமணர்கள் அறிவுரை கூறுகின்றனர். அதன் பின்னணியில் கொழுமத்தில் வீரசோழீஸ்வரம் என்ற கோயிலைக் கட்டினான்.

இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி. 1196- 1207) :

இம்மன்னனுடைய கல்வெட்டுகள் அன்னூர். விஜயமங்கலம், அவினாசி ஆகிய ஊர்களில் பொறிக்கப் பெற்றுள்ளன. இவனுடைய ஆட்சி ஆண்டும் சக ஆண்டும் சேர்ந்து வருவதால் இவன் வரலாற்றாளர்

எளிதில் முடிவு செய்ய முடியும். அதன்படி இவன் கி.பி. 1196-ல் ஆட்சிக்கு வந்தான் என்பதும் இவன் முன்னர் கூறப்பெற்ற குலோத்துங்கனிலும் வேறுபட்டவன் என்பதும் உறுதிப்படுகின்றது. அதனால் இவனை இரண்டாம் குலோத்துங்கன் என்று அழைக்கலாம். அன்னூரில் கிடைக்கும் கல்வெட்டு ஒன்று கோயில் நிருவாகத்தில் அந்நாளைய அரசு மிகுந்த கவனம் செலுத்தியது என்பதை வலியுறுத்துகின்றது.

வீரராசேந்திரன் (கி.பி. 1207-1256) :

இம்மன்னன் இரு கொங்குமொன்றாக ஆட்சி செய்தவன் என்று தன்னைக் கூறிக்கொள்கிறான். இவனுடைய ஆட்சியில் இருபத்தைந்தாம் ஆண்டிற்குப்பின் பெரிய வடுகன் கலகம் என்றொரு கலகம் குறிக்கப் பெறுகின்றது. இது போசளமன்னன் வீரசோமேசுவரனின் படையெடுப்பைக் குறிக்கும். தென்கொங்கிலும், வடகொங்கிலும் இவனுடைய இருபத்தைந்தாம் ஆண்டு முதல் 40-ஆம் ஆண்டு வரை கல்வெட்டுகள் கிடைக்கவில்லை. அதுமட்டுமின்றி வீரசோமேசுவரன் கல்வெட்டுகள் இக்காலகட்டத்தில் கிடைக்கின்றன. அதனால் கொங்கு அரசியலி போசளத் தலையீடு மிகுதியும் இருந்தது எனலாம். கொ ச் சோழர்களிலேயே இவனுடைய கல்வெட்டுகள் முன்னூறுக்கும் மேல் கிடைக்கின்றன.

வீரராசேந்திரன் ஆட்சிக் காலம் மிக நீண்டது. அதனால் பல அரிய சாதனைகள் இவன் காலத்தில் நிகழ்ந்தன. பல பகுதியில் காடழிக்கப் பெற்று வேளாண் நிலமாக மாற்றப் பெற்றது. பல கோயில்கள் கட்டப்பெற்றன. ஏரிகளும், குளங்களும் வெட்டப்பெற்றன. நீர்ப்பாசனம் முறைப்படுத்தப் பெற்றது. அதற்குச் சிறந்த சான்று பேரூர் கல்வெட்டே ஆகும். இவன் கல்வெட்டுகள் வடகொங்கு தென் கொங்கு என்று அழைக்கப்பெற்ற இருகொங்கிலும் பரவலாகக் கிடைக்கின்றன. மேலும் வடகொங்கில் வடபரிசார நாடு என்ற பகுதி இருந்தது. ஆனால் அந்நாட்டின் மேற்கெல்லை இவன் காலத்தில் மேற்குத் தொடர்ச்சிமலை வரை விரிவானது. அதற்கு முன் கவயன்புத்தூர் வரை பரவி நின்றது. இது இம்மன்னன் முயற்சியின் விளைவாகும்.

இரண்டாம் விக்கிரம சோழன் (கி.பி. 1256 - 63) :

இம்மன்னன் கல்வெட்டுகள் ஏழாம் ஆட்சி ஆண்டு வரை கிடைக்கின்றன. விஜயமங்கலத்தில் கிடைக்கும் கல்வெட்டுகள் குறிப்பிடத்தக்கவை. இவன் காலத்தில் அவ்வூர் நாகேஸ்வரசுவாமி கோயில் மண்டபங்கள் புதுப்பிக்கப்பெற்றன. ஏற்கெனவே அம்மண்டபத்தில் இரண்டாம் குலோத்துங்கன் கல்வெட்டுகளும் வீரராசேந்திரன் கல்வெட்டுகளும் பொறிக்கப்பெற்றிருந்தன. விக்கிரம சோழன் காலத்தில் மண்டபம் புதுப்பிக்கப்பெற்ற போது பழைய கல்வெட்டுகளை மறுபடியும் பொறித்தனர். அதனால் இவ்விருமன்னர்கள் காலத்துக்குப்பின் இவன் ஏழு ஆண்டுகள் ஆட்சி செய்துள்ளான். ஏழாம் ஆட்சி ஆண்டு வரை பொறிக்கப்பெற்ற இரண்டு விக்கிரமசோழர்களின் (இரண்டாம் விக்கிரம சோழன், மூன்றாம் விக்கிரம சோழன்) கல்வெட்டுகளை வேறுபடுத்திக் காட்ட முடியவில்லை. எட்டாம் ஆட்சியாண்டிலிருந்து தெளிவாகவே மூன்றாம் விக்கிரம சோழன் கல்வெட்டு என்று கொள்ளலாம். இவன் வடகொங்கு தென்கொங்கு இரண்டையும் ஒன்றாக ஆட்சிபுரிந்தவன்.

ஒரு ராஜகேசரி (கி.பி. 1263 - 73) :

இந்தப் பெயரோடு எந்த மன்னனும் ஆட்சி செய்யவில்லை. ஆனால் கொங்கு வரலாற்றாசிரியர்கள் இரண்டாம் விக்கிரமசோழனும், மூன்றாம் விக்கிரம சோழனும் பரகேசரி என்ற பட்டத்தைத் தரித்திருந்ததால் இவ்விருவர்க்குமிடையில் ஒரு இராசகேசரி பட்டம் தரித்தவன் ஆட்சிபுரிந்திருக்க வேண்டும் என்ற அடிப்படையில் இராசகேசரி என்ற பட்டத்துடன் ஒரு அரசன் ஆண்டிருக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். இந்தவகையில் இராசகேசரி வீரபாண்டியன் என்ற பாண்டிய மன்னன் கொங்கு நாட்டுக் கல்வெட்டுகளில் கூறப்பெறுகிறான். அவன் கி.பி. 1265 முதல் 1285 வரை ஆட்சி செய்துள்ளான். அவன் தான் இந்த இராசகேசரி என்பது பற்றி ஆய்வு செய்ய வேண்டும்.

மூன்றாம் விக்கிரமசோழன் (கி.பி. 1273 - 1305) :

இவன் கொங்குச் சோழர்களில் இறுதி மன்னன். இவன் காலத்தில் சில குறுநில மன்னர்கள் கிளர்ந்தெழுந்தார்கள். அவர்களை அடக்கி ஆட்சியை நடத்தினான். இவன் ஆட்சி சிறப்பாக நடந்தது. இவனுக்குப் பின் வாரிசு இல்லாமையால் கொங்கு நாடு பாண்டியர்கள் ஆட்சியில் சென்றது.

⌘⌘⌘

பிற்காலப் பாண்டியர்கள்

கி.பி. 12-ஆம் நூற்றாண்டு முதல் பிற்காலப் பாண்டியர்கள் வலிமை பெற்று தங்கள் ஆட்சியை நிலைநிறுத்தினர்.

சடையவர்மன் குலசேகரப் பாண்டியன் :

இவன் கி.பி. 1162-ல் பட்டத்திற்கு வந்தான். இவனுடைய மெய்க்கீர்த்தி 'பூதல மடந்தை' எனத் தொடங்கும். இவனுக்கும் இவன் தாயதித்தினராகிய பராக்கிரம பாண்டியனுக்கும் வாரிசுரிமைப் போர் ஏற்பட்டது. இலங்கை அரசன் பராக்கிரமபாகு பராக்கிரம பாண்டியனுக்கு உதவினான். குலசேகரப் பாண்டியன் இலங்கைப் படையை எதிர்த்து தோல்வி அடைந்ததால், இவன் கொங்கு நாட்டிலிருந்த தன் மாமனின் படைகளையும் சேர்த்துக் கொண்டு எதிரிகளை எதிர்த்தான். இச்செய்கையிலிருந்து கொங்கு நாட்டிற்கும் பிற்காலப் பாண்டியருக்கும் இருந்த உறவுமுறையினை அறியலாம்.

முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் :

(கி.பி. 1216-1235) இவன் மகத நாட்டையும் கொங்கு மன்னர்களின் கொங்கு நாட்டையும் கைப்பற்றி தன் ஆட்சிக்குக் கீழ் கொண்டு வந்தான். மகத நாடு எனப்படுவது சேலம் மாவட்டத்தின் கீழ்ப் பகுதியும் தென்னார்க்காடு மாவட்டத்தின் மேற்பகுதியும் கொண்டது. அந்நாட்டை ஆண்டவர்கள் வாணகோவரையர் அல்லது வாணாதிராசர் என்று அழைக்கப்பட்ட குறுநிலமன்னர் ஆவர் என்று திரு. சதாசிவ பண்டாரத்தா குறிப்பிடுகின்றார்.

சடையவர்மன் வீரபாண்டியன் :

முதலாம் சடையவர்மன் காலத்தில் இருந்த பிற பாண்டிய மன்னர்களுள் சடையவர்மன் வீரபாண்டியன் என்பவனும் ஒருவன் என்று திரு. நீலகண்ட சாஸ்திரியார் சொல்கின்றார். இவன் கி.பி. 1281 வரை அரசாட்சி செய்து வந்தான். இவனது மெய்க்கீர்த்தி "கொங்கீழங் கொண்டு கொடுவடுகு கோடழித்து" என்று கூறுவதால் கொங்கு நாட்டை இவன் வெற்றி கொண்டான் எனக் கூறலாம்.

முதலாம் மாறவர்மன் குலசேகரப் பாண்டியன் :

(கி.பி. 1268-1311) திருநெல்வேலி மாவட்டம், சேரன் மாதேவியிலுள்ள இவனுடைய இருபதாம் ஆட்சியாண்டு கல்வெட்டு இவன் இரு கொங்கு நாடுகளையும் கைக்கொண்டான் எனக் குறிக்கின்றது.

சடையவர்மன் சுந்தரபாண்டியன் :

இவன் கி.பி. 1276 முதல் கி.பி. 1293 வரை கொங்கு நாட்டில் அரசப் பிரதிநிதியாகயிருந்து ஆட்சி செய்தான். இவன் தலைநகரமான கருவூர் கொங்கு நாட்டிலுள்ளது.

இவ்வாறு பாண்டியர்களின் ஆதிக்கமும், நட்பும், உறவும், செல்வாக்கும் கொங்கு நாட்டில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு வரை இருந்து வந்ததை மேற்கூறியச் சான்றுகளால் நாம் அறியலாம்.

⌘⌘⌘

கொங்குப் பாண்டியர்கள்

கொங்குச் சோழர் என்ற ஒரு வம்சம் கொங்கு நாட்டை ஆட்சிச் செய்ததைப் போலவே, கொங்குப் பாண்டியர்களும் கொங்கு நாட்டில் அரசாட்சி செய்து வந்தனர். முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் வீரபாண்டியன் என்பவனை கொங்கு நாட்டிற்கு பிரதிநிதியாக கி.பி. 1265-இல் அனுப்பினான். இவனுக்குப் பின்னர் வேறு சில பாண்டியப் பிரதிநிதிகளும். கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை ஆண்டனர். கொங்குப் பாண்டியர்கள் என ஐந்து மன்னர்கள் குறிக்கப்பட்டனர்.

வீரபாண்டியன் : (கி.பி. 1265-1285)

இவன்தான் முதல் கொங்குப் பாண்டியனாக ஆட்சி செய்கின்றான். இவனுக்கு முன்னால் வேறொரு கொங்குப் பாண்டியன் ஆட்சி செய்தானா என்பதற்கு இதுவரைச் சான்றுகள் கிடைக்கவில்லை. இவன் 20 ஆண்டுகள் ஆட்சி செய்துள்ளான். கொங்கு மண்டலத்து விஜயமங்கலத்திலுள்ள கரியமாணிக்கப் பெருமாள் கோயிலில் உள்ள இவனுடைய கல்வெட்டில் சக வருடம் 1202 குறிப்பிடப்பட்டு, 15-ஆவது ஆட்சியாண்டு எனச் சொல்வதால், இவன் கி.பி. 1265-இல் பட்டத்திற்கு வந்தான் என அறியலாம். இவனுடைய 20-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஈரோட்டிலுள்ள தொண்டீசுவரர் ஆலயத்திலிருப்பதால் கி.பி. 1285 வரை ஆட்சி செய்துள்ளான். கல்வெட்டுகளில் இவனுடைய விருதுப் பெயர்கள் காணப்படுகின்றன. 'திரிபுவனச்சக்கரவர்த்தி,' 'கோனேரிமை கொண்டான்', 'கோராசகேசரி வர்மன்' முதலியன இவனுடைய விருதுப் பெயர்களாகும். ஒரு மன்னனே 'இராசகேசரிவர்மன்' எனச் சோழரின் பட்டப்பெயரையும் பாண்டியரின் பட்டப்பெயரையும் சேர்த்து வைத்துக் கொண்டது குறிப்பிடத்தக்கதாகும். இவன் விஜயமங்கலத்திலுள்ள பாழடைந்த ஏரியைச் சரிப்படுத்தி அதற்கு வீரபாண்டிய பேரேரி எனப் பெயரிட்டான்.

சுந்தரபாண்டியன் :

இவன் கொங்குப் பாண்டியருள் இரண்டாவதாகக் கூறப்படக் கூடியவன். இவனுடைய கல்வெட்டுகள் வீரபாண்டியனுக்கு அடுத்தபடியாக அதிகமாகக் காணப்படுகின்றன. 31-ஆவது ஆட்சியாண்டு வரை இவனது கல்வெட்டுகள் உள்ளன. ஆனால் ஒரு கல்வெட்டு 37ம் ஆட்சியாண்டைக் குறிப்பிடுகின்றது. அக்கல்வெட்டு அவனுடையதா என்பது சந்தேகமாக உள்ளது என வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

⌘⌘⌘

போசளர்

கொங்கு நாடு என்றுமே ஒரு நிலையான அரசின் கீழிருந்ததில்லை. கொங்கு நாட்டில் பல அரசர்கள் பல நேரங்களில் படையெடுத்து வந்து கொங்கு நாட்டைப் பிடித்தனர். அப்படி படையெடுத்தவர்களில் போசளரும் சேருவர்.

போசள அரசன் புஜபல வீரகங்க விஷ்ணுவர்த்தனன் (கி.பி. 1115-37) என்பவன் நீலகிரியையும், மலபாரையும் கைப்பற்றினான் என்று திரு. கே. வி. சுப்ரமணிய அய்யர் கூறுகின்றார். கோவை மாவட்டம் கொள்ளேகலம் வட்டத்திலுள்ள முடிகொண்டம் என்ற இடத்தில் விஷ்ணுவர்த்தனின் இரு கல்வெட்டுகள் உள்ளன. ஆனால் இவைகளில் ஆண்டுகள் குறிக்கப்படவில்லை அவைகளில் விருதுப் பெயர்களும், வெற்றிகளும் உள்ளன.

இரண்டாம் வீரவல்லாளனின் (கி.பி. 1173-1220) மூன்று கல்வெட்டுகளும் முடிகொண்டத்தில் உள்ளன. அவைகளில் ஒன்றில் இந்த நாடு முடிகொண்ட சோழ மண்டலத்தில் கங்கை கொண்ட சோழ வளநாட்டில் படிநாடு என்ற பெயருடையதென்றும், ஊரின் பெயர் முடிகொண்ட சோழபுரம் அல்லது தேசி உய்யக் கொண்ட பட்டணம் என்றும், கோயில் பெயர் தேசிப்பெருமாள் கோயில் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. இவனுடைய மற்ற இரு கல்வெட்டுகள் கி.பி. 1190, கி.பி. 1203 ஆகிய காலங்களைச் சேர்ந்தவை. பிறகு வந்த இரண்டாம் நரசிம்மனின் கல்வெட்டுகள் அதியமான்கோட்டையிலும், முடிகொண்டத்திலும் உள்ளன. வீரசோமேஸ்வரன், இரண்டாம் நரசிம்மனின் மகன். இவன் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனை எதிர்த்ததை, 'பாண்டிய குலசமுத்தரணன்' என்ற பெயரால் அறியலாம் இவனுடைய கல்வெட்டுகள் சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்களில் கிடைப்பதால் இவனது செல்வாக்கு கொங்கு நாட்டில் பரவியிருந்ததை அறியலாம். அதியமான்கோட்டை கல்வெட்டினால் இவன் கி.பி. 1232-ல் ஆட்சிக்கு வந்ததையும், இவனது 27, 29-ஆவது ஆட்சியாண்டுகளை முறையே திருவானைக்காவல், திருவாசி முதலிய

இடங்களில் கிடைத்துள்ள கல்வெட்டுகள் குறிப்பதால் இவன் கி.பி. 1261 வரை ஆட்சி செய்தான் என்பதை அறியலாம். இவனுக்குப் பிறகு போசளர் அரசாட்சி மூன்றாம் வீரநரசிம்மன், வீரராமநாதன் என்ற இரு அரசர்களின் கீழ்வந்தது. வீரராமநாதனும் 'பாண்டியகுல சமுத்தரணன்', 'சோழராஜ்ய பிரதிஷ்டாசாரிய' என விருதுப் பெயர்களைக் கொண்டுள்ளான்.

வீரராமநாதனுக்குப் பிறகு விஸ்வநாதன் என்பவன் ஆட்சிக்கு வந்தான். இவனுடைய கல்வெட்டுகள் கொங்கு நாட்டில் சேலம் மாவட்டத்தில் கிடைத்துள்ளன. இக்கல்வெட்டுகளில் அரசனுடைய படைத்தலைவன் மதுராந்தக வீரநொளம்ப ராஜநாராயண வைரவன் பொன்னம்பல கூத்தன் என்று குறிக்கப்பட்டுள்ளது.

போசளரின் கடைசி அரசனான மூன்றாம் வீரவல்லாளனின் கல்வெட்டுகள் அதிகமாக கொங்கு நாட்டில் கிடைக்கின்றன. இவனுடைய கல்வெட்டுகளில் கி.பி. 1292-ஆவது ஆண்டைக் குறிப்பதுதான் பழமையானது. விஜயமங்கலத்திலுள்ள கல்வெட்டு ஒன்றில் ஆமுருக்கு இராகுத்தராயநல்லூர் எனப் பெயர் கொடுக்கப்பட்டது குறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் சகம் 1245 என உள்ளது.

இவனுடைய காலத்தில்தான், 14-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மாலீக்கபூர் தென்னிந்தியாவின் மீது படையெடுத்தான். மீண்டும் மறுமுறை கி.பி. 1326 - 27-இல் மாலீக்கபூர் படையெடுத்தான். இப்படையெடுப்பைப் பற்றி விஜயமங்கலத்திலுள்ள சக வருடம் 1249 பிரபவ என குறிப்பிட்ட கல்வெட்டு (கி.பி. 1327), மன்னரின் சொத்துக்களையும் நாட்டையும் காக்க குறுப்பு நாட்டு மக்கள் கொடை கொடுத்தனர் என்று குறிக்கின்றது. மாலீக்கபூர் தென்னாடு முழுவதும் கொள்ளையடித்து திரும்பியபின், வல்லாளன் கி.பி. 1342-3 வரை ஆண்டான் என்பதை கோவை மாவட்டம் வெள்ளலூர் என்ற இடத்தில் உள்ள இவனுடைய கடைசியாண்டுக் கல்வெட்டைக் கொண்டு கூறலாம்.

போசளரின் ஆட்சியில் கி.பி. 14-ஆம் நூற்றாண்டுவரை இருந்து வந்த கொங்குநாடு பிறகு புதிதாக ஏற்பட்ட விஜயநகரப் பேரரசின் கீழ் சென்றது.

⌘⌘⌘

விஜயநகர அரசும் நாயக்கர் வம்சமும்

கி.பி. 1344-இல் முதலாம் புக்கன் என்பவன் விஜயநகர அரசனாக வருகின்றான். இவன் இறந்ததும் கி.பி. 1376-இல் இரண்டாம் ஹரிஹரராயன் ஆட்சிக்கு வருகின்றான். கொங்கு நாட்டில் இவனுடைய கல்வெட்டுகள் இரண்டு கிடைக்கின்றன. அவற்றில் ஒன்றில் சக ஆண்டு 1308 (கி.பி. 1386) குறிக்கப்பட்டுள்ளது. அதில் இவன் 'மகாமண்டலேஸ்வர வீரஹரியப்ப உடையார்' என்று அழைக்கப்படுகின்றான்.

இவன் மகன் இரண்டாம் புக்கன் என்பவனின் சக ஆண்டு 1321 (கி.பி. 1399) குறிக்கப்பட்ட கல்வெட்டு கொங்கு நாட்டு தீர்த்த மலையில் காணப்படுகிறது. இவனுக்குப் பிறகு வந்த முதலாம் தேவராயனின் கல்வெட்டுகள் தீர்த்தமலை, கடகத்தூர், கொளிஞ்சிவாடி முதலிய இடங்களில் உள்ளன.

கிருஷ்ணராயன், அச்சுதன், சதாசிவன்வேங்கடபதி, உம்மத்தூர் தலைவர்கள் ஆட்சியில் கொங்கு நாடு குறிப்பாக கோயம்புத்தூர் மாவட்டத்தின் பெரும் பகுதி அவர்களின் கீழிருந்தது. தணாயகன் கோட்டை, சர்க்கார்பெரியபாளையம், அவிநாசி, ஈரோடு முதலியவற்றில் கிடைத்துள்ள கல்வெட்டுகளில் வீரநஞ்சராய உடையாரும் அவன் மகன் வீரசிக்கராயனும் கி.பி. 1527 வரை கொங்கு நாட்டை ஆட்சி செய்ததாகக் குறிக்கின்றன.

இவர்களுக்குப் பிறகு வந்த நாயக்கர்களின் செல்வாக்கும் கொங்கு நாட்டில் நிலவின.

கிருஷ்ண தேவராயன் (கி.பி. 1509-1529) கொங்கு நாட்டையும், மதுரையையும், தஞ்சையையும் கைப்பற்றினான். கொங்கு நாடு மதுரை நாட்டின் ஒரு பிரிவாக மாறியது. விஜயநகர அரசர்களால் மதுரையை ஆட்சி செய்ய அனுப்பப்பட்ட நாயக்கர்கள் கொங்கு நாட்டையும் கி.பி. 1530 முதல் 1700 வரை ஆண்டனர்.

விஸ்வநாத நாயக்கன் :

(கி.பி. 1529-1564) இவனுடைய ஆட்சி தற்போதைய மாவட்டங்களான மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சி, கோயம்புத்தூர், சேலம் முதலிய மாவட்டங்களில் பரவி இருந்தது. அரியநாதன் என்பவனின் உதவியுடன் இவன் தன் நாட்டை திருத்தி அமைத்ததற்கு 'பாளையம் முறை' என அழைக்கப்பட்டது. ஒவ்வொரு பாளையத்துக்கும் ஒவ்வொரு தலைவனை நியமித்தான். அவர்களுக்குப் 'பாளையக்காரர்' என்று பெயர்.

முத்துகிருஷ்ணப்ப நாயக்கன் காலத்தில் (கி.பி.1601-1609) போர்ச்சுக்கீசிய நாட்டிலிருந்து வந்த ராபர்ட் டி நோபிலி (Robert De Nobili) என்பவர் கொங்கு நாட்டில் சேந்தமங்கலம் இராமச்சந்திர நாயக்கனுடனும், சேலம் சேலப்தி (Selapte) நாயக்கனுடனும் நட்புறவு கொண்டார்.

திருமலை நாயக்கர் காலத்தில் (கி.பி. 1623- 1659) மைசூர் அரசன் கொங்கு நாட்டின் சில பகுதிகளைக் கைப்பற்றினான்.

சொக்கநாத நாயக்கன் காலத்தில் (கி.பி. 1659-1682) மைசூர் அரசு கொங்கு நாட்டின் பல பகுதிகளைப் பிடித்துக் கொண்டது. கோவை, சேலம் மாவட்டங்களிலுள்ள கி.பி. 1670-ஆம் ஆண்டையுடைய கல்வெட்டுக்கள் தேவராய உடையாரைப் பற்றியும், சொக்கதேவராயனைப் பற்றியும் குறிக்கின்றன.

⌘⌘⌘

நாட்டுப் பிரிவுகள்

கொங்கு நாடு பொதுவாக வடகொங்கு என்றும் தென்கொங்கு என்றும் இரு பெரும் பிரிவுகளாக இருந்தது. சில இலக்கியங்களின் மூலம் மற்றொரு பிரிவும் இருந்ததை அறியலாம். "மீ கொங்கிற் காஞ்சிவாய்ப் பேரூர்" என்று சுந்தரமூர்த்தி நாயனார் புராணத்தினால் மேல்கொங்கு என்ற ஒரு பிரிவு இருந்ததை அறியலாம். ஆனால் மேல்கொங்கு என்பதைப் போல கீழ்கொங்கு என்ற ஒரு பிரிவு இருந்ததாக நமக்குச் சான்றுகள் கிடைக்கவில்லை.

கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் மழகொங்கம் என்ற ஒரு பிரிவு இருந்ததை பாண்டியன் நெடுஞ்சடையனின் வேள்விக்குடிச் செப்பேட்டினால் அறியலாம். அதில் நெடுஞ்சடையனுக்கு முன் ஆண்ட தேர்மாறன் என்பவன் மழகொங்கத்தை அடிமைப்படுத்தியதை, "பூவிரியும் பொழிற்சோலைக் காவிரியைக் கடந்திட்டழகமைந்த வார்சிலையின் மழகொங்கம் அடிப்படுத்து" என்று வரும் அடிகளால் அறியலாம்.

வடகொங்கு, தென்கொங்கு என்ற இருபிரிவுகள் மட்டும் தொடர்ந்து கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டுகளிலும் இருந்து வந்ததற்கு, வீரசோழன் (கி.பி. 1169-1196), வீரராசேந்திரன் (கி.பி. 1207-1255) என்ற கொங்குச் சோழ மன்னர்களின் கல்வெட்டுகளில் 'இரு கொங்கினையும் ஆண்டவர்கள்' என்று காணப்படுவதை சான்றாகக் கூறலாம்.

இவர்களுக்கு முன் ஆண்ட சோழர்களின் காலங்களில் கொங்கு நாடு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஏற்கெனவே கூறப்பெற்ற வடகொங்கு தென்கொங்கு ஆகியவற்றுடன் மூன்றாவது பிரிவும் இருந்தது. முதலாம் இராசராசன் காலத்தில் வீரசோழமண்டலம் என்றும், அது முதலாம் இராசேந்திரன், வீரராசேந்திரன் காலங்களில் அதிராசராச மண்டலம் என்றும், மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் சோழகேரள மண்டலம் என்றும் பெயரிடப்பட்டிருந்தது.

இப்பெரும் பிரிவுகளைத் தவிர கொங்கு நாடு சிறுசிறு உட்பிரிவுகளாக மொத்தம் 24 ஆக பிரிக்கப்பட்டிருந்தது. தொண்டை

மண்டலத்தில் 24 கோட்டங்கள் இருப்பதைப் போல, கொங்குநாடும் 24 உட்பிரிவுகளாக இருந்தது. இவ்விருபத்து நான்கு பிரிவுகளில் ஒன்றான குறுப்பு நாட்டின் பெயரை சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரத்தில் குறிப்பிடுவதால், அவர் காலத்திற்கு முன்பே இச்சிறு பிரிவுகள் பிரிக்கப்பட்டுள்ளன. 24 நாடுகளின் பெயர்கள்: 1) பூந்துறை நாடு, 2) தென்கரை நாடு, 3) காங்கேய நாடு, 4) பொன்கலூர் நாடு, 5) ஆறை நாடு, 6) வாரக்க நாடு, 7) திருவாவினன்குடி நாடு, 8) மண நாடு, 9) தலைய நாடு, 10) தட்டய நாடு, 11) பூவாணிய நாடு, 12) அரைய நாடு, 13) ஒகுவங்க நாடு, 14) வடகரை நாடு, 15) கிழங்கு நாடு, 16) நல்லுருக்க நாடு, 17) வாழவந்தி நாடு, 18) அண்ட நாடு, 19) வெங்கால நாடு, 20) காவடிக்க நாடு, 21) ஆனைமலை நாடு, 22) இராசிபுர நாடு, 23) காஞ்சிக்கோயில் நாடு, 24) குறுப்பு நாடு.

விஜயமங்கலம் குறுப்பு நாட்டில் தான் உள்ளது. குறுப்பு நாடு தற்காலத்தில் ஈரோடு வட்டத்தில் மேல் பாகத்தில் அமைந்துள்ளது.

குறுப்பு நாடு :

குறும்பு நாடு என்றும் பெயர் கொண்ட குறுப்பு நாடு 33 ஊர்களைக் கொண்ட ஒரு பிரிவாகும். இதனுள் அடங்கிய 33 ஊர்களாவன:

1. குருமந்தூர்.
2. கோசனம்
3. செவியூர்
4. அயிலூர்
5. கொளப்பலூர்
6. அலங்கயம்
7. முடச்சியூர்
8. களங்கயம்
9. ஆதியூர்-ஆதவூர்
10. சிவலூர்
11. குன்னத்தூர்
12. அழக்கொளி
13. தாளுன்றி
14. திங்களூர்
15. மூதூர்
16. நல்லூர் (குலோத்துங்க சோழ நல்லூர்)
17. திருப்பூர்
18. வாய்ப்பூர்
19. விஜயமங்கலம்
20. நிரம்பையூர்
21. கூடலூர்
22. சிறுக்கழிஞ்சி
23. செங்கைப்பள்ளி
24. மண்ணறை
25. சீனாபுரம்
26. பாலத்தொழு
27. வெள்ளரிவள்ளி
28. முகுந்தை-குரக்குத்தளி
29. கற்றான் காணி
30. கொடுமணல்
31. அமுக்கயம்
32. தக்களூர்
33. ஊற்றுக்குழி

குறும்பொறை என்று முன்னர் வழங்கி வந்த பகுதி சுருங்கி பிற்காலத்தில் 'குறுப்பு நாடு' என்ற பெயர் பெற்றுவிட்டது. குறும்பொறை என்ற சொல் தமிழ் இலக்கியங்களில் பல இடங்களில் பொதுப் பொருளில் கரடு, பொற்றை, பாலைநிலத்தூர் ஆகியவற்றைக் குறித்து நிற்கிறது. நல்லியக் கோடனைப் பாடுகின்ற நத்தத்தனார் சிறுபாணாற்றுப்படையில் கடையேழு வள்ளல்களைப் பற்றிப் பாடுகிறார். அதில் குறும்பொறை நாடு குறிப்பிடப்படுகிறது.

" . . . . . நளிசினை
நறும்போது கமலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க் கீந்த
காரிக்குதிரை காரியொடு மலைந்த
ஓரிக்குதிரை ஓரியும் என வாங்க"

முன்பு குறும்பர்கள் மிகுதியாக வாழ்ந்ததால் குறும்பு நாடு என பெயர்பெற்றது என்பர்.

⌘⌘⌘

விஜயமங்கலம்

குறுப்பு நாடு என்ற கொங்கு நாட்டின் இருபத்துநான்கு பிரிவுகளில் ஒன்றான அச்சிறு பிரிவு முப்பத்துமூன்று ஊர்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அவ்வூர்கள் அனைத்துக்குமே விஜயமங்கலம் தலைமை நகரமாக இருந்தது. 'சதா ஸ்வர்க்கலோகமான கோட்டைகளால் சூழ்ந்த நகரம்' எனக் கல்வெட்டால் புகழப்படுவது விஜயமங்கலம். கல்வெட்டுகளில் 'குறுப்பு நாட்டு விசையமங்கலம்' என்று ஊரின் பெயர் குறிக்கப்படுகின்றது. கி.பி. 5 - 6-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இருளப்பட்டியிலுள்ள கல்வெட்டில் காணப்படும் விஜயமங்கலம் என்ற பெயரே கல்வெட்டுகளில் முதன்முதலாக காணப்படுகின்றது.

மங்கலம் என்பது நன்மையானது என்று பொருள்படும். தமிழ்நாட்டில் மங்கலம் என்ற பெயர் தாங்கிய ஊர்கள் பலவுண்டு. சதுர்வேதிமங்கலம், திருத்தொண்டத்தொகைமங்கலம் என்ற பெயர்கள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. மங்கலம் என்பது மங்கை எனவும் குறுகி வழங்கும். திருவாசகம் பெற்ற மங்கை, தேவாரம் பெற்ற சாதித்தமங்கை, புள்ளமங்கை, விஜயமங்கை என்ற பெயர்கள் உண்டு. கொங்கு மண்டலச் சதகம் விஜயமங்கலத்தை 'மங்கை' என்று அழைக்கின்றது. விஜயமங்கை மாகாளியின் பெயரால் கட்டப்பட்டதால் விஜயமங்கை, விஜயமங்கலம் எனப் பெயர் பெற்றதாகச் சோழன் பூர்வ பட்டயம் கூறுகின்றது.

விஜயமங்கலம் முன்பு வணிகர்கள் தங்கிய இடமாக இருந்திருக்கிறது; என்பதற்கு அங்கு கிடைத்துள்ள காசுகளைக் கொண்டு ஊகித்தறியலாம்.

விஜயமங்கலம் சமணர்கள் ஒரு காலத்தில் மிகுதியாக வாழ்ந்த இடமாகும். இங்கு ஆதிநாதர் கோயிலும், சந்திரபிரப தீர்த்தங்கரர் கோயிலும் சேர்ந்த ஒரு பண்டைய ஜினாலயம் உள்ளது. சங்கப் புலவர்களில் ஐவர் தங்கள் கைகளில் ஏட்டுப் பிரதிகளுடன் வீற்றிருக்கும் சிலைகளும் அக்கோயிலில் காணப்படுகின்றன. இங்குள்ள சமணக்

கோயில் கொங்கு நாட்டுச் சமணத் தலங்களின் தலைமைப் பீடமாக இருந்ததை 'வீரசங்காதப் பெரும்பள்ளி ' எனக் கல்வெட்டுக் கூறுவதைக் கொண்டு அறியலாம் இக்கோயிலில் மைசூர் நாட்டு அமைச்சனின் தங்கை புளியம்மை சல்லேகனை விரதமிருந்து உயிர்நீத்ததைப் பார்க்கும் போது இக்கோயிலின் பெருமையை அறியலாம்.

பெரும்புலவர்கள்

விஜயமங்கலத்தில் தான் பெருங்கதையை இயற்றிய கொங்குவேளிர் என்பவர் வாழ்ந்தார். இவ்வூருக்கு அருகிலிருக்கும் சீனாபுரத்தில் நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவரும், நிரம்பையூரில் சிலப்பதிகார உரை ஆசிரியர் அடியார்க்கு நல்லார் என்பவரும் வாழ்ந்தனர். கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கொங்கு மண்டலச் சதகத்தை இயற்றிய கார்மேகக் கவிஞரும் விஜயமங்கலத்தில் வாழ்ந்தவரே. விஜயமங்கலத்தில் தமிழ்ச் சங்கம் இருந்தது என்று பலர் கருதுகின்றனர். விஜயமங்கலத்திலும், சுற்றுப்புறங்களிலும் புலவர் பெருமக்கள் பலர் வாழ்ந்துள்ளபடியால் தமிழ்ச்சங்கம் ஒன்று இருந்திருக்கும் என்று நாமும் உணரலாம்.

மேலும் விஜயமங்கலத்தில் நாகீஸ்வரமுடையார் என்று கல்வெட்டுகளில் அழைக்கப்படும் சிவன் கோயிலும், கரியமாணிக்கப் பெருமாள் என்று கல்வெட்டுகளில் காணப்படும் விஷ்ணு கோயிலும், தற்காலத்திய விஜயாபுரி அம்மன் கோயில், விநாயகர் கோயில், மாரியம்மன் கோயில் முதலியனவும் உள்ளன.

⌘⌘⌘

விஜயமங்கலத்தைச் சுற்றியுள்ள சமணத் தலங்கள்

விஜயமங்கலத்தைத் தலைமைப் பீடமாகக் கொண்டு பல சமணத் தலங்கள் விஜயமங்கலத்தைச் சுற்றிக் காணப்படுகின்றன.

ஐவர் மலை :

இங்கு பல இயற்கைக் குகைகளும், சமணச் சிற்பங்களும், கல்வெட்டுகளும் உள்ளன. பெருஞ்சேரல் இரும்பொறையைப் புகழும் அரிசில்கிழார்,

'கடவுள் அயிரையின் நிலைஇ
கேடு இலவாக பெரும! நின் புகழே!'

என்று பாடுகிறார்.

கொங்கு மண்டலச் சதகம்,

'கலைமுத்தமிழ் கொண்ட வைகாவூர் நாட்டிற் கனகமுகில்
தலையிற்றுயில் வளர்ந்தோக்கி யோங்கியித் தாரணியில்
நிலையிற் புகழ்கொண்டழியாத நன்னெறி நீதியைவர்
மலையிற் கல்வார மலர்பூப் பதுங்கொங்கு மண்டலமே'

என ஐவர் மலை கல்லார மலர்(செங்கழுநீர்ப்பூ) மலருகின்ற இடம் என்று சிறப்பித்துக் கூறுகிறது. இங்குள்ள பாண்டிய மன்னன் வரகுணன் கல்வெட்டு கி.பி. 870-ஐ சேர்ந்தது. இக்கல்வெட்டு ஐவர் மலையை திருவயிரை எனக் குறிப்பிடுகின்றது. மேலும் இக்கல்வெட்டு இங்குள்ள பார்சுவநாதர் சிற்பத்தையும் மற்றும் இயக்கிகளின் உருவங்களையும் குணவீரக் குரவடிகளின் சீடர் சாந்திவீரக்குரவர் என்பவர் புதுப்பித்ததாகக் கூறுகின்றது. மற்றும் அங்குள்ள கல்வெட்டுகள் அச்சணந்தி என்ற முனிவரையும், இந்திரசேனர், மல்லிசேனர் பெரியார், பார்சுவப் படாரர், என்ற குரவர்களையும், பெரும்பட்டியூர் பட்டினிக்குரத்தி அவர் மாணாக்கி புவ்வணந்தி குரத்தி போன்ற குரத்தியர்களையும் குறிக்கின்றன. இங்குள்ள பெயர்களில் அச்சணந்தி என்ற பெயர் தமிழ் நாட்டின் மற்ற பகுதிகளிலுள்ள கல்வெட்டுகளும் குறிக்கின்றன.

வெள்ளோடு :

இங்குள்ள பெரிய குளத்தின் கிழக்கே சிவாலயத்தின் வடக்கில், தெற்கு நோக்கியபடி ரிஷபநாதர் கோயில் இருக்கிறது. மேலும் இங்குள்ள இந்துக்கள் திருமணம் முடிந்ததும் சிவன் கோயிலுக்குச் சென்று, பிறகு அம்மணீஸ்வரம் என்று அழைக்கப்படும் ரிஷபநாதர் கோயிலுக்கும் சென்று வழிபடுகின்றனர்.

பூந்துறை :

இங்கு பார்சவநாதர் கோயிலுள்ளது. மைசூர் உடையார் காலத்தில் திருப்பணி செய்ததைக் குறிக்கும் கல்வெட்டு சிதைவுற்ற நிலையில் காணப்படுகின்றது.

திங்களூர் :

இவ்வூருக்கு சந்தரபுரி என்ற பெயருமுண்டு. ஊர்த் தொகை பாட்டில், 'பீடுபெறு திங்களூர்' என குறிக்கப்படுகின்றது. இங்குள்ள கோயில் தோட்டத்தில் கிழக்கு நோக்கியபடி ஒன்பதாம் தீர்த்தங்கரரான புஷ்பநாத தீர்த்தங்கரர் ஆலயம் உள்ளது. மூன்று மண்டபங்களையுடைய ஆலயமிது. அர்த்தமண்டபத்தில் பிரம்ம இயக்கன் சிலை உள்ளது. முன் மண்டபத்தில் சீதல தீர்த்தங்கரர் சிலை உள்ளது. இங்குள்ள கல்வெட்டுகளில் சந்திரபஸ்தி என்பதற்கு பதிலாக 'சந்திரவஸதி' என வருகின்றன. சக வருடம் 967 (கி.பி.1045) ஐ சார்ந்த ஒரு கல்வெட்டு முதல் கொங்குச் சோழன் கோணாட்டான் விக்ரமசோழதேவனின் 40-ஆம் ஆட்சி ஆண்டைக் குறிக்கின்றது. இக்கல்வெட்டில் முக மண்டபம் எடுத்த செய்தி வருகின்றது. மற்றொரு கல்வெட்டு பலி பீடத்தைச் சுற்றி வருகின்றது. மற்றொரு கல்வெட்டு வீரவல்லாள தேவனின் (கி.பி. 1340) காலத்தைச் சார்ந்தது.

செங்கப்பள்ளி :

முன்பு இவ்வூருக்கு செங்கற் பள்ளி எனப் பெயர். இங்கு சமணக் கோயில் இருந்து அழிந்துவிட்டது.

சீனாபுரம் :

இவ்வூருக்கு சனகபுரி, சனகாபுரம் என்பது பழம் பெயர்கள். சீனாபுரத்திலிருந்து வடமேற்கு ஒரு கல் தொலைவில் திங்களூர் செல்லும் வழியில் மமுட்டித்தோப்பு என்ற இடத்தில் முதல் தீர்த்தங்கரர் ஆதிநாதரின் கோயில் உள்ளது. 'முச்சக நிழற்றும் முழுமதி முக்குடை அச்சுதன்' என்று பவணந்தியார் குறிப்பிட்டது போல ஆதிநாதரின் அழகிய சிற்பம் உள்ளது.

நிரம்பை :

விஜயமங்கலத்திற்கும் சீனாபுரத்திற்கும் இடையிலிருந்து அழிந்துவிட்ட ஊர். சிலப்பதிகார உரை எழுதிய அடியார்க்கு நல்லார் அந்த ஊரைச் சார்ந்தவர். இவர் சமண மதத்தைச் சார்ந்தவர். இவருக்கு நிரைம்பையர் காவலன் என்ற பெயருமுண்டு. தற்போது அங்குள்ள குளத்திற்கு அடியார்க்கு நல்லார் எனப் பெயர் வழங்கப்படுகின்றது.

அரசண்ணா மலை :

விஜயமங்கலத்திற்கு தெற்கில் ஒரு சில கல் தொலைவில் இம்மலை உள்ளது. சுமார் 500 அடி உயரமிருக்கும். மலைமேல் நேமிநாதர் கோயிலும், இயக்கினி கோயிலும் இருந்தது. யக்ஷிக்கு சிறப்பு இருந்ததை 'அஞ்சி' என்று அழைக்கப்பட்டதால் அறியலாம். மலையின் அடிவாரத்தில் கொங்கம்பாளையம் என்ற சிறு கிராமம் ஒன்றுள்ளது. அக்கிராமத்தில் பெண்களுக்கு யக்ஷியின் நினைவாக 'அரசாத்தாள்' என்ற பெயர் இன்றுமுண்டு. அங்கிருந்த யக்ஷியின் சிற்பம் தற்போது விஜயமங்கலம் சமணக் கோயிலில் உள்ளது. அக்கோயில் தற்சமயம் இந்துக் கோயிலாகக் காணப்படுகின்றது. நேமிநாதர் கோயிலாக இருந்த அரசண்ணா மலை பின்னால் விநாயகர் கோயிலாக மாற்றப்பட்டது என்று திரு. ஆரோக்கியசாமி கருதுகின்றார். சென்ற நூற்றாண்டில் முருகதாசர் என்பவரால் முருகன் கோயிலாக மாற்றப்பட்டது என்று ஈரோடு திரு. செ. இராசு கூறுகின்றார். இம் மலையைப் பற்றிய அதிசய மலை விருத்தம் என்ற பாடல் ஒன்றும் உண்டு.

“வட்டமா மதிபரவு சென்னிமேல் படியில்வாழ்
வித்திருந்த பெருமாள் நல்ல
வினை கடிந்த முதல் ‘நேமீசுரர்’மலர் அடியிணையில்
மலிவுமுடி வைத்த தாயே
திட்டமா யிவரவர்கள் கேட்டபொன் கணக்கெலாம்
சிட்டெழுதி முன்வைத்து நல்
செம்பொற் கபாடம் திருத்தாள் திறக்குமாறு
தினமும் அப் படிவைக்கவே
இட்டமா கியமண முடிந்தவி யாலயம்
குடபூஜை செய்திருந்த
தன்னில்வைத் திப்பால் அவர்க்காக
அநேக அருள்செய்ய விலையோ
அட்டமா சித்திதரு கருநொச்சியும் புவியில்
ஆரு மறியாத சுனையும்
அளவிலா மகிமையும் ‘மங்கை’யம் பதியில் வாழ்
அதிசெயா மலை யம்மனே”

என்ற பாடலின் மூலம் முன்பு அரசண்ணா மலை சமணக் கோயிலாக இருந்ததை அறியலாம்.

விஜயமங்கலமும் சமணமும்

சமணர்கள் கொங்கு நாட்டில் தங்கள் சமயத்தை நிலை நிறுத்தும் முயற்சியில் அடைந்த வெற்றியைக் குறித்து “விஜயமங்கலம்’ என்ற பெயரில் இவ்வூரை அமைத்திருக்கலாம். விஜயமங்கலத்தை தமிழ் மங்கையென்றும், மங்கை மாநகரென்றும் புலவர்கள் பலர் போற்றியுள்ளனர். கொங்கு நாட்டுச் சமணத் தலங்களின் மிகச் சிறப்புடையது விஜயமங்கலம். இங்கு 10-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட சமணக் கோயில் உள்ளது. மேலும் இக்கோயிலின் கிழக்குப் பகுதியில் முடிவுறாமலிருக்கும் ஒரு சிறு கோயிலும் உள்ளது. இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகளில் மிகப் பழமையானது கங்க அரசர்களின் தளபதி சாமுண்டராயனின் தங்கை புளியம்மை என்பவளின் நிசீதிகையைக் குறிப்பது ஆகும். கொங்குச் சோழன் குலோத்துங்கன் காலத்தைச் சேர்ந்த கி.பி. 1163-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ‘வீரசங்காதப்

பெரும்பள்ளி' என்று குறிப்பிடுகின்றது. சமணத் தலங்களை பள்ளி என்று அழைப்பர். இக்கோயில் சமணத் தலங்களிலேயே பெரியதானபடியால் பெரும்பள்ளி என அழைக்கப்பட்டது போலும். இங்குள்ள ஒரு கல்வெட்டு, தீர்த்தங்கரரை 'அணியாத அழகியார்' என்று குறிப்பிடுகின்றது. விஜயமங்கலத்தில் உள்ள சமணக் கோயிலில் ஆதிநாதர் வரலாறு புடைப்புச் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் பண்டைய ஓவியங்களும் உள்ளன.

விஜயமங்கல சமணப் புலவர்கள்

விஜயமங்கலத்திலும், அதனருகில் உள்ள ஊர்களிலும் சமண மதத்தைச் சேர்ந்த புலவர்கள் சிலர் வாழ்ந்து, பல நல்ல அழகிய தமிழ் நூல்களைப் படைத்துள்ளனர். கொங்கு வேளிர் பெருங்கதை என்ற நூலையும், திருத்தக்கதேவர் சீவக சிந்தாமணியையும், குணவீர பண்டிதர் நேமிநாதர் வச்சணந்தி மாலை என்ற நூல்களையும், பவணந்தி அடிகள் நன்னூலையும், அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையையும், கார்மேகக் கவிஞர் (ஜினேந்திரர்) கொங்கு மண்டலச் சதகத்தையும் இயற்றியுள்ளனர்.

கொங்கு வேளிர் :

இவர் கொங்குவேள் என்றும், கொங்கவேள் என்றும் குறிப்பிடப்படுகிறார். அழுந்தூர்வேள், இருங்கோவேள், நாங்கூர்வேள், ஆய்வேள் போன்று அவர் கொங்கு நாட்டு வேளிர் தலைவர். இவரது இயற்பெயர் என்னவென்று தெரியவில்லை. வேளிர் என்பார் வேளான் வகுப்பைச் சேர்ந்த சிற்றரசர். கொங்கு நாட்டிலுள்ள விஜயமங்கலம் என்னும் ஊரே இவர் பிறந்த ஊராகும். இவருடைய காலம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு. இவர் விஜயமங்கலத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தார் என்பதைப் பெருங்கதைப் பாயிரத்தில்

"..... செந்தமிழ்ப்
பொங்கு மண்டலத்தும் கொங்கு மண்டலத்தில்
உறும்பல வளமார் குறும்பு நன்னாட்டில்
எப்பனு வலையும் தப்புதலின்றி
அங்கையா மலகமா அறிபெரியோர் செறி
மங்கைமா நகரின் மஞ்சையம் பரிமீத்
தங்குவேள் எனவாழ்கொங்கு வேளிர்"

என்பதின் மூலம் அறியலாம்.

பெருங்கதை :

குணாட்டியர் பைசாச மொழியில் இயற்றியதை, துர்விநீதன் என்ற கங்க மன்னன் வடமொழியில் எழுதிய 'பீரகத்கதா' என்ற காவியத்தை கொங்குவேளிர் அழகிய தமிழ் மொழியில் பெருங்கதையாக எழுதினார். உதயணன் என்ற அரசனின் வரலாற்றைக் கூறுவது பெருங்கதை. "இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்தின் . . . . . உதயணன் கதை" என்று அடியார்க்கு நல்லார் இந்நூலை பாராட்டி எழுதியிருப்பதைப் பார்க்கையில் கொங்குவேளிர் காலத்தில் இடைச் சங்க நூல்கள் இருந்தனவென்று தெரிகிறது. சிலப்பதிகாரத்தையும், மணிமேகலையையும் ஒட்டி ஆசிரியப்பாவில் இயற்றப்பட்ட காவியம் பெருங்கதை என்று உ. வே. சா. கூறியுள்ளார். விஜயமங்கலம் சமணக் கோயிலில் மேற்கு புறமாக சுவர் ஓரத்தில் கீழே கிடக்கும் தூணில் பழைய தேவநாகரி எழுத்தில் உள்ள கல்வெட்டு ஒன்று உள்ளது. இரு முனைகளிலும் இரு துளைகள் உள்ளன. ஒரு பக்கம் ஸ்வஸ்திகம் செதுக்கப்பட்டுள்ளது. "ஸ்ரீபிரகத்கதா லாவண்யரத் பிரதாபஹ" என்று காணப்படுகிறது. சிறப்பமைந்த பெருங்கதையின் அழகிலும் பெருமையிலும் மூழ்கியது என்று பொருள் கொள்கின்றனர். எனவே இக்கோயிலில் கொங்கு வேளிர் தம் பெருங்கதையை அரங்கேற்றியிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

தமிழ்ச் சங்கம் :

பல்லவ, பாண்டிய நாடுகளில் திருநாவுக்கரசராலும், சம்பந்த மூர்த்திகளாலும் ஏற்பட்ட சமய மாற்றங்களால் வெளியேறி சமணர்கள் கங்கர்கள் ஆண்டு கொண்டிருந்த கொங்கு நாட்டில் குடியேறினர். இக்குடியேற்றம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் நடைபெற்றிருக்க வேண்டும். இங்கு குடியேறிய சமணர்கள் விஜயமங்கலத்தில் ஒரு தமிழ்ச் சங்கத்தை ஏற்படுத்தினர். தற்போதும் இவ்வூரின் ஒரு பகுதியை சங்க வடம் என அழைக்கின்றனர். இப்பகுதியே தமிழ்ச் சங்கம் அமைந்த இடமாக இருக்கலாம். சங்க இடம் என்பதே சங்க வடம் என மருவி அழைக்கப்படுகிறது போலும். கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும் என்ற பழமொழிக்கேற்ப, சங்கத்தார் கேட்ட கேள்விகளுக்கு கொங்கு வேளிர் தம் அடிமைப் பெண்ணைக் கொண்டே பதில் கூறவைத்தார் என்று கொங்கு மண்டல சதகம்,

"நீதப் புகழுத யேந்திரன் காதை நிகழ்த்துதற்குக்
கோதற்ற மங்கையில் மூன்று பிறப்புற்ற கொள்கையன்றி
மேதக்க சொற்சங்கத் தார்வெல்க வேகொங்கு வேளடிமை
மாதைக்கொ டுத்தரஞ் சொன்னது வுங்கொங்கு மண்டலமே"

எனக் கூறுகின்றது. இப்பாடலில் வரும் 'மூன்று பிறப்பு'ப் பற்றி பலர் பல கருத்துக்களைக் கூறுகின்றனர். தன் மரணத்தை அறிந்த கொங்கு வேளிர் பெருங்கதையை எப்படியேனும் பூர்த்தி செய்ய வேண்டுமென்று கவலையுற்று இல்லறத்தினின்றும் நீங்கி வானப் . பிரத்தமும் பின் அதனின்றும் நீங்கித் துறவறமும் பூண்டு இந்நூலை பூர்த்தி செய்திருக்கலாமென்று தெரிய வருகின்றது.

திருத்தக்க தேவர் :

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சீவகசிந்தாமணியின் காலத்தை இன்னும் அறிஞர்களால் சரியாகக் கூறமுடியவில்லை. பழம் பாடலொன்று,

"வையம் புகழ்ந்து மணிமுடி சூட்டிய
பொய்யில் வான்கதை பொதித்த செந்தமிழ்ச்
சிந்தா மணியைத் தென்கடல் மாநிலம்
வந்தா தரிப்ப வன்யெரு வஞ்சிப்
பொய்யா மொழிபுகழ் மையறு காட்சித்
திருத்தகு மாமுனி."

என்று கூறுகிறது. திருத்தக்க தேவர் சோழர் குடியில் உதித்தவர் என்று உரையாசிரியர் நச்சினர்க்கினியர் குறிக்கின்றார். சிரவணபெலகோலாவில் உள்ள சந்திரகிரிக் கல்வெட்டு 'சிந்தாமணி யாச்சார்யர்' என்று குறிக்கின்றது. இவர் சிந்தாமணி நூலாசிரியர் திருத்தக்க தேவரென்றும், தமிழ்நாட்டைச் சார்ந்த அருங்கலான்வயம் என்ற பிரிவைச் சேர்ந்தவர் என்றும் கூறுகிறார்கள். திருத்தக்க தேவர்தான் முதலில் சீவகன் கதையை எழுதியவர். பின்னர்தான் வடமொழியில் சந்திரசூடாமணி, சீவந்திர நாடகம் சீவந்திர சம்பு என்ற நூல்கள் வந்தன. தீர்த்தங்கரரை 'அணியாது ஒளிதிகழும் ஆரணங்கு திருமூர்த்தி,' 'திகழ்கின்ற திருமூர்த்தி' என்று பாடல்கள் கூறுகின்றன. சிந்தாமணி ஆசிரியரும், 'முக்குடை மூர்த்தி', 'மூர்த்தி' என்று குறிக்கின்றார். திருமூர்த்தி மலைத் தீர்த்தங்கரரைத் திருமூர்த்தி என்பர்.

அங்குள்ள எத்துலட்டபன் நாயக்கன் (கி.பி. 1793) என்ற சிற்றரசனின் கல்வெட்டு அமண சமுத்திரன், அமணேஸ்வரர் என்று குறிக்கிறது. ஆனால் எத்துலட்டபன் நாயக்கன் காலத்திலேயே அங்குள்ள சமணச் சிற்பம் சிவன், விஷ்ணு, பிரமன் ஆகியோராகக் கருதப்பட்டன. மேலும் திருமூர்த்திமலை திரிமூர்த்திமலையாகி விட்டது. சீவகனின் ஆசிரியர் அச்சணந்தி முனிவர் என்பவர். கொங்கு நாட்டிலுள்ள ஐவர்மலை வட்டெழுத்துக் கல்வெட்டு பாண்டிய மன்னன் வரகுணனின் கி.பி. 870-ஆம் ஆண்டு கல்வெட்டாகும். அதில் 'அச்சணந்தி' என்ற முனிவர் குறிக்கப்படுகின்றார். சத்தியவாக்கி யாரயன் என்ற கங்க மன்னன் விஜயஸ்கந்தபுரத்திலிருந்து அரசாண்டான் என்று கொங்கு தேச ராசாக்கள்' மூலம் அறியலாம் சத்திய வாக்கியாரயன் என்பவன் தான் 'பொய்யாமொழி' ஆகும் என்று திரு. இராசு கூறுகின்றார். 'சீவகனார் புகழ் உரைக்கும் சிந்தாமணியைப் படிப்பதன் பாவத்தை நீக்க' என்று வேளாள புராணம் பாடப்பட்டதால், 'சீவகசிந்தாமணியை கொங்கு நாட்டில் பயின்றனர் என்பது உறுதியாகிறது. கங்க மன்னன் சத்தியவாக்கியராயன் (கி.பி. 9-ஆம் நூற்றாண்டு) என்ற மன்னன் காலத்தில் கொங்கு நாட்டில் திருமூர்த்தி மலையில் திருத்தக்க தேவர் வாழ்ந்தார் என்று கொள்ளலாம்.

குணவீரபண்டிதர் :

நேமிநாதம், வச்சணந்திமாலை (வெண்பா பாட்டியல்) ஆகிய இரு இலக்கண நூல்களை இயற்றியுள்ளார். நன்னூல் தோன்றியதற்கு முன் தொல்காப்பியம் கற்பவர் இந்நூலைக் கற்று வந்தனர் என்று திரு. கா. ர. கோவிந்தராச முதலியார் நேமிநாதத்திற்குக் குறிப்புரை எழுதும்போது குறிக்கின்றார். புலவர் சோம. இளவரசு என்பவர், பழங்காலத்தில் தொல்காப்பியமாகிய பெருநூலை கற்பதற்கு முன், இந்நூலை மாணவர்கள் கற்று வந்தனர். தொல்காப்பியக் கடலினை அளந்து காணும் முயற்சிக்கு நேமிநாதம் படகாகப் பயன்பட்டது. நன்னூல் இந்நூலுக்குப் பின்னர் தோன்றியது. நன்னூல் தோன்றியதும் இந்நூல் பயில்வார் தொகை மிகமிக அருகியே காணப்படுகிறது என்கிறார். அவர்களின் கருத்துக்களிலிருந்து நேமிநாதம் நன்னூலுக்கு காலத்தால் முற்பட்டது என்ற செய்தியை அறியலாம். இவருடைய காலத்தைப் பற்றி வச்சணந்தி மாலை பாயிர உரையில், 'இந்நூல்

யார் காலத்துச் செய்ததோ எனின் குருந்தவர் மணிமுடிக் கொற்றவர் கோமான் திருத்தரு மணிமுடித் திரிபுவனத் தேவன் என்னும் அரசன் காலத்திற் செய்ததென்றுணர்க' என்ற தொடர் காணப்படுகின்றது. இதனைக் கொண்டு பல அறிஞர்கள் மூன்றாம் குலோத்துங்கன் காலம் என்று கருதுகின்றனர். இவனுக்குத் திரிபுவன வீரதேவன் என்னும் ஒரு பட்டப்பெயர் இருந்தது. கும்பகோணத்தின் அருகே திரிபுவனத்தில் அவன் கட்டிய கோயில் திரிபுவன வீரேச்சுவரம் என்று அழைக்கப்படுகின்றது. ஆனால் இதனையே உறுதியாகக் கொள்ள முடியாது. இவனுக்கு முன் ஆண்ட சோழ அரசர்கள் பலர் திரிபுவனச்சக்கரவர்த்தி, திரிபுவனவீரதேவன் எனப் பட்டப்பெயர்கள் வைத்திருந்தனர். சேர மன்னர்களில் கோரவிகோதை (கி. பி. 848) என்பானும், வீரபாண்டியன், குலசேகரப் பாண்டியன் என்ற மன்னர்களும் திரிபுவனச்சக்கரவர்த்தி என்று அழைக்கப்பட்டனர். தமிழக மன்னர்கள் பலர் திரிபுவன தேவன் என்ற பட்டப் பெயரை வைத்திருப்பதைப் பார்க்கும்போது, வச்சணந்தி மலை பாயிரம் குறிப்பது மூன்றாம் குலோத்துங்கனை மட்டுமே என்பதை ஏற்றுக்கொள்வது என்பது இயலாத காரியமாக உள்ளது. குணவீரபண்டிதர் தொண்டை மண்டலத்தில் உள்ள செங்கல்பட்டிற்கு அருகிலுள்ள களத்தூர் என்ற இடத்தைச் சார்ந்தவர் என்று சிலர் கருதுகின்றனர் 'கற்றவர் புகழும் களந்தை என் பெரும்பதி', 'வளங்கெழில் மாடத்துக் களந்தை', 'பீடார் களந்தை' எனக் களந்தை சிறப்பிக்கப்படுகின்றது. திருப்பாமலையில் உள்ள அருகசரண அகவல் களந்தையை 'வளந்தமிழ் ஆர்த்த வானவர் வணங்கும் களந்தை' என்று கூறுகின்றது. தொண்டை நாட்டுக் களந்தையில் சமணக் கோயில் இருந்ததாக சமண ஊர்களின் அட்டவணையில் இல்லை. கொங்கு நாட்டில் ஒரு களந்தை உண்டு. கொங்கு நாடு 24 நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அதில் வாரக்க நாடும் ஒன்று. அந்நாட்டின் ஊர் வரிசையில் இரண்டாவதாகக் களந்தை காணப்படுகின்றது. மேலும் அருகசரண அகவல், கொங்கு நாட்டுச் சமணத் தலங்களைக் குறிக்கும்போது 'களந்தை' என்றும் குறிக்கின்றது. இங்கு ஒரு சமணக் கோயில் இருந்து அழிந்து விட்டது. சிதைவுற்ற தீர்த்தங்கரர் சிலைகளும், 'ஜைனரட்சை' என்று முடியும் தொடர் சிதைவுற்ற கல்லில் காணப்படுகின்றன.

கொங்கு நாட்டில் உள்ள ஐவர் மலையில் சமணச் சிற்பங்களும், 9-ஆம் நூற்றாண்டு வட்டெழுத்துக் கல்வெட்டுகளும் உள்ளன. பாண்டிய மன்னன் வரகுணனின் கி.பி. 870-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, "சகரயாண்டு எழுநூற்று தொண்ணூற்றிரண்டு போந்தன வரகுணற்கு யாண்டு எட்டு குணவீரக் குரவடிகள் . . . . . " என்று தொடர்ந்து செல்கிறது. இதில் 'குணவீர' என்ற பெயர் குறிக்கப்பட்டுள்ளது. நேமிநாதம், "தேனிமிர் பைம்பொழில் தென்மயிலாபுரி நீனிறக் கடவுள் தம் திருப்பெயரால்" செய்ததாகக் குறிக்கப்படுகின்றது. தளவாய்புரச் செப்பேட்டில் பாண்டியன் வரகுணனை 'மயிலையர்கோன்' என்று அழைக்கின்றது. இவைகளைக் கொண்டு பார்க்குபோது நேமிநாதம் கி.பி. 8 - 9-ஆம் நூற்றாண்டில் கொங்கு நாட்டில் குணவீர பண்டிதரால் இயற்றப்பட்டிருக்கும் என்று எண்ணலாம்.

பவணந்தி முனிவர் :

தமிழ் இலக்கண நூல்களுள் தொல்காப்பியத்திற்கு அடுத்த படியாக சிறப்புடையது நன்னூல் ஆகும். இதனை இயற்றியவர் பவணந்தி முனிவர் ஆவார்.

பவணந்தி - பெயர் விளக்கம் :

பவணந்தி என்ற பெயர், பவண + நந்தி என்பதன் கூட்டுப் பெயராகும், பவணம் = நாகலோகம் பவணன் > பவணேந்திரன் - இந்திரருள் ஒருவன். சமண முன்னோர்களின் (கணங்களின்) பெயராகும் மேக்நீள், இப்பெயரை விளக்கும் போது, பவ - உளதாகு (existence) என்றும், நந்த - மகிழ்ச்சி (joy) என்றும் பொருள் கொள்கிறார். இதனால் பவணந்தி என்ற பெயருக்கு 'உளதாகும் மகிழ்ச்சி' என்றும் பொருளாகிறது. பவணந்தி சமண மதத்தைச் சார்ந்தவர். நன்னூலில் உள்ள எழுத்ததிகார வாழ்த்தும், சொல்லதிகார வாழ்த்தும் அருகதேவனை நோக்கி இவரால் இயற்றப்பட்டது. மொழிக்கு முதற்காரணம் அனுத்திரளென்ற கோட்பாடும், உயிர்களை ஓரறிவுயிர் முதல் ஐயறிவுயிர் இறுதியாக அமைந்திருக்கும் முறையும் பிரயோக விவேகவுரையில் 'செயப்படு பொருளை வாக்கியங்கள் இங்கே குறிக்கப்பட ஆக்கல், அழித்தல், அடைதல் முதலாகச் சினேந்திரன் மதம் பற்றி நன்னூலார் பலவாகக் கூறுவார்', 'நன்னூலார் வாமனன்

சினேந்திரன் செய்த சந்த நூல் பற்றி என்றுள்ள வாக்கியங்கள் இங்கே குறிக்கப்பட வேண்டியவை. பவணந்தி முனிவர் துறவி என்பதை, 'பவணந்தியென்று நாமத் திருத்தவத்தோனே" என்பதாலும், 'பவணந்தி மாமுனி' என்று கொங்கு மண்டல சதகத்திலும், தொண்டை மண்டல சதகத்திலும் குறிக்கப்படுவதாலும் நாம் அறியலாம். மேலும் சமண மதத்தைச் சார்ந்தவர்களில் துறவிகள் 'நந்தி' என்றே அழைக்கப்பட்டதை அச்சணந்தி, வச்சணந்தி, புவ்வணந்தி என்று கல்வெட்டுச் சான்றுகளிலும், திருஞானசம்பந்தர், மானின் நேர்விழி மலராய் என்ற பதிகத்தின் ஆறாம்பாட்டில், "கனக நந்தியும் புட்ப நந்தியும் பவண நந்தியுங் குமணமா, கனக நந்தியும் குணக நந்தியும் திவண நந்தியம் மொழிகொளா - அனக நந்தியர் . . . . சினகர்" எனச் சமணத் துறவிகளைக் குறித்துள்ளார்.

ஆசிரியர் :

இவருடைய ஆசிரியர் சனகை என்னும் ஊரிலிருந்த சன்மதி முனிவரென்பதை,

"பொன்மதிற் சனகை சன்மதி முனியருள
பன்னருஞ் சிறப்பிதழ் பவணந்தி"

என்று சிறப்புப் பாயிரத்தாலும்,

"நன்னூர் சனகையிர் சன்மதி மாமுனி நந்த மைந்தன்
நன்னூ லுரைத்த பவணந்தி மாமுனி . . ."

என்று தொண்டை மண்டல சதகத்தினாலும் அறியலாம்.

பவணந்தி முனிவரின் காலம் :

கங்க குலத்தைச் சேர்ந்த சீயகங்கன் வேண்டிக் கொள்ள பவணந்தி முனிவர் நன்னூலை இயற்றினார் என்பதை, நன்னூல் சிறப்புப் பாயிரம்,

"அருங்கலை விநோதன் அமரா பரணன்
திருந்திய செங்கோல் சீயகங்கன்
மொழிந்த னனாக . . . . . "

என்று கூறுவதால் அறியலாம். எனவே சீயகங்கன் என்ற மன்னனின் காலம் எதுவென்று கண்டால், பவணந்தியார் காலத்தைக் கூறிவிடலாம். சீயகங்கன் என்ற பெயர், கி.பி. 846-இல் நந்திவர்மன் காலத்தில்

திருச்சானூரிலும், கி.பி. 1101-இல் முதல் குலோத்துங்கன் காலத்தில் திருக்காளத்தியிலும், கிபி. 1212-ஆம் ஆண்டின் திருவல்லத்திலும், கி.பி. 1222-இல் மூன்றாம் இராசராசன் காலத்தில் மேல்பாடியிலும் சீயகங்கன் என்ற பெயர் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இக் கல்வெட்டுகளில் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் (கி.பி. 1178 - 1218) வாழ்ந்த சீயகங்கன் மட்டும் அமராபரணன் சீயகங்கன் என்று குறிப்பதால், நன்னூல் சிறப்புப் பாயிரமும் அமராபரணன் சீயகங்கன் என்று குறிப்பதால் இச்சீயகங்கன் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்தவன் என்று தெரிகிறது. மேலும் மூன்றாம் குலோத்துங்கனின் மூன்றாம் ஆட்சியாண்டாகிய கி.பி. 1181-இல் சீயகங்கனைப் பற்றிய முதற் குறிப்பும், முப்பத்து நான்காவது ஆட்சியாண்டாகிய கி.பி. 1212 -இல் முடிவான குறிப்பும் உள்ளதால், சீயகங்கன் காலம் கி.பி. 1181 முதல் கி.பி. 1212 வரை கொள்ளல் தகும். எனவே இக்காலத்தில் தான் பவணந்தி முனிவரும் இருந்தார் என்று கூறலாம். "பிங்கல முதலா, நல்லோருரிச்சொலினயந்தனர் கொளலே" என்பது இந்நூற் சூத்திரமாதலால் பிங்கல நூலாசிரியர் காலத்திற்கு இவர் காலம் பிற்பட்டதென்று தெரிகின்றது.

நன்னூல் :

"முன்னோர் நூலின் வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்" என்பதனால், பவணந்தியார் தொல்காப்பியத்தில் மட்டுமன்றி அக்காலத்து வழங்கிய அகத்திய சூத்திரங்களிலும் அவிநயம் முதலிய இலக்கண நூல்களிலும் சைனேந்திரம் முதலிய வடமொழி வியாகரணங்களிலும் இருவகை வழக்குகளிலும் முன்பு வழங்கிப் பின்பு வீழ்ந்தொழிந்தவற்றை நீக்கி வழங்குவனவற்றைத் தழுவி மரபு வழுவின்றி நன்னூலை இயற்றினாரென்று தெரிகின்றது.

நன்னூலார் வாழ்ந்த இடம் :

பவணந்தியாரின் ஊர்ப் பெயர் சனகை என்று நன்னூற் பாயிரத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றது. இச்சனகை என்பதற்குச் சனநாதபுரம் என்று உரை கூறியுள்ளார் மயிலைநாதர். இச்சனகை என்ற ஊரைப் பற்றி கருத்து வேறுபாடுகள் அறிஞர்களிடம் நிலவுகின்றன. மைசூர் மாநிலம் நரசபுரம் தாலுக்காவிலுள்ள சனநாதபுரமே சனகை என்றும், தொண்டை நாட்டு, அரக்கோணம் வட்டத்திலுள்ள

சோழிங்கரையை அடுத்துள்ள சனகாபுரமே சனகை என்றும், கொங்கு நாட்டு, ஈரோடு வட்டத்திலுள்ள விஜயமங்கலத்துக்கு அடுத்துள்ள சீனாபுரமே சனகை என்றும் கருதுகின்றனர்.

மைசூர் மாநிலம் சனநாதபுரம் :

இங்குள்ள சனநாதபுரத்தின் பழைய பெயர் மாவிலங்கை என்பது, பிற்காலச் சோழர்கள் இராசராசனின் நினைவாக அவ்வூரை சனநாதபுரம் என்று அழைத்தனர். இராசராசனின் பட்டப் பெயர்களில் சனநாதன் என்பதும் ஒன்று. மேலும் கல்வெட்டு, 'கங்கபாடியான முடிகொண்ட சோழபுரத்து தென்கரை இடை நாட்டு மாவிலங்கையான சனநாதபுரம்' என்று குறிக்கின்றது. எனவே சனநாதபுரத்தில் பவணந்தியார் வாழ்ந்திருந்தால், அதன் பழம்பெயரான மாவிலங்கையை குறிக்காமல் இருந்திருக்க மாட்டார்.

தொண்டை நாட்டு சனகாபுரம் :

"தன்னூர் சனகையிற் சன்மதி மாமுனி தந்தமைந்தன்
நன்னூ லுரைத்த பவணந்தி மாமுனி நற்பதியும்
சின்னூ லுரைத்த குணவீர பண்டிதன் சேர்பதியும்
மன்னு புரத்திரு வன்னமின் னேதொண்டை
மண்டலமே"

என்று தொண்டை மண்டலச் சதகம் குறிக்கிறது. இவ்வூருக்கருகிலுள்ள வள்ளிமலை என்ற இடத்தில் "ஸ்வஸ்திஸ்ரீ பாணராயர் குருகளாய பவணந்தி பட்டாரகர் சிஷ்யரப்ப தேவசேன பட்டாரகர் பீரதிமா" என்று கல்வெட்டுத் தொடர் இருக்கின்றது. இதில் பவணந்தி என்ற பெயர் இருப்பதாலும், தொண்டை மண்டலச் சதகம் பாடியிருப்பதாலும் தொண்டை நாட்டுச் சனகாபுரமே சனகை என மருவி விட்டது என்றும், இங்கு தான் பவணந்தி முனிவர் வாழ்ந்தாரென்றும் கருதப்படுகின்றது. பாணராயர் என்ற எழுத்து வாணபுரத்தை கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 10-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ஆண்ட பாணராயர் விக்கரமாதித்தன் அல்லது பாணராயர் விஜயாதித்தன் என்ற இருவரில் ஒருவரைக் குறிப்பதாகவும் இருக்கலாம். மேலும் பட்டாரகர் என்பது சமணமத குருமார்களைக் குறிக்கின்றது என்பதற்கு விநயசேன

பட்டாரகர், கனகசேன பட்டாரகர் என்ற பெயர்களைத் தருமபுரி மல்லிகார்ஜுணன் கோயில் கல்வெட்டில் காணலாம். தமிழக அரசு சுவடி நூலகத்தில் தொண்டை நாட்டின் சமணக் கிராமங்களையெல்லாம் குறிக்கும் பட்டியல்கள் உள்ளன. சமணக் கோயில்கள் முன்பு இருந்து அழிந்து விட்டால் 'சிலம்' என்றும், சமணக் கோயில்கள் தமிழக அரசு சுவடி நூலகம், சென்னை நல்ல நிலையிலிருந்தால் 'பெலம்' என்றும், வேறு கோயில்களாக மாற்றப்பட்டிருந்தால் 'அன்னியன் குடியிருப்பு' என்றும், விற்பனையோ அல்லது ஒற்றியோ வைத்திருந்தால் 'அடைமானம்' என்றும் பட்டியலில் தெளிவாகக் காணப்படுகின்றது. இவ்வாறு குறிப்பிடும் பட்டியலில் தொண்டை நாட்டுச் சனகாபுரம் என்றோ அல்லது சனகை என்றோ குறிக்கும் பெயர் காணப்படவில்லை. இச்சான்றுகளினால் தொண்டை நாட்டுச் சனகாபுரம் பவணந்தியார் வாழ்ந்த இடமாகக் கூறுவதற்கில்லை.

கொங்கு நாட்டுச் சீனாபுரம் :

விஜயமங்கலத்துக்கருகிலுள்ள சீனாபுரத்திற்கு சனகாபுரம், சனகாபுரி என்பது பழம் பெயர்களாகும். சீனாபுரத்தில் மழுட்டித்தோப்பு என்ற இடத்தில் முதல் தீர்த்தங்கரர் ஆதிநாதரின் கோயிலுள்ளது. 'முச்சக நிழற்று முழுமதி முக்குடை அச்சுதன்' என்று நன்னூலார் குறிப்பது போல ஆதிநாதரின் அழகிய சிற்பம் அங்கே உள்ளது. 'அணியாத அழகியார்' என்று கல்வெட்டிலும் சிறப்புப் பெற்ற விஜயமங்கலத்துச் சந்திரபிரபா தீர்த்தங்கரரை 'அணிவன அணியா அழகா செய செய' என்று பாராட்டும் திருப்பாமாலை, சீனாபுரத்தையும் 'சனகாபுரியுறை அனகா போற்றி' என்று போற்றுகிறது. கொங்கு மண்டலச் சதகம்,

"கொங்கில் குறும்பில் தனி ஆதிநாத குருவிளங்கும்
மங்குல் பொழில் சனகா புரம்" என்று ஊரையும்
"கங்கக் குரிசில் உவக்க நன்னூலைக் கனிந்து புகல்
துங்கப் புலமைப் பவணந்தி மாமுனி" என்று புலவரையும்

போற்றுகிறது. மேலும் இச் சதகத்தின் பாடலான,

“சொல்காப் பியத்தின் குணதோடம் தேர்ந்து சொல்லுதற்கு
தொல்காப் பியங்கற்க நீண்ட அதனைச் சுருக்கியிசை
ஒல்காப் பெரும்பவ ணந்தியென் றோதென் றுபசரித்த
வல்கா வலன்சீய கங்கனும் தான்கொங்கு மண்டலமே”

என்பதின் மூலம் சீயகங்கன் கொங்கு நாட்டில் ஆட்சி புரிந்ததையும், பவணந்தியை நன்னூல் இயற்றுமாறு கேட்டுக்கொண்டதையும் நன்கு அறியலாம். கல்வெட்டுகளில் சீயகங்கனைப் பற்றிக் காண்பதாலும், சீயகங்கன் வேண்ட நன்னூலை பவணந்தியார் இயற்றினாரென்று நன்னூல் பாயிரத்திலும், கொங்கு மண்டலச் சதகத்திலும் அறிவதால் கொங்கு நாட்டுச் சீனாபுரமே பவணந்தியாரின் ஊராகும் என்ற முடிவுக்கு வரலாம். பவணந்தி முனிவருக்கு தொண்டை மண்டலத்திலும், கொங்கு நாட்டிலும் தொடர்பு இருந்ததைக் கல்வெட்டு, இலக்கியச் சான்றுகள் உறுதிப்படுத்துவதால் திரு. க. ப. அறவாணன் அவர்கள், “நன்னூலார், அப்பர்பெருமான் காலத்திற்கு முன்னும் ஓரளவு பின்னும் சமணக் கோட்டையாக இருந்த தொண்டை மண்டலத்தில் பிறந்து, தொண்டை நாட்டு அரசியல் காற்றுச் சமணத்திற்கு எதிர்த் திசையில் வீசிய வேளையில், புறப்பட்டுப் போன, போய்க் கொண்டிருந்த பல சமணக் குடிகளையும் பின்பற்றி பவணந்தியும் கொங்கு மண்டலம் சென்றவராதல் கூடும். சென்ற இடத்தில், தன் அறிவுப் புலமையால் அரசனின் அரவணைப்பைப் பெற்று, கொங்கு மண்டலத்தில் இருந்தபடி, நன்னூலை இயற்றினார் என்று கொள்ளலே பொருத்தம்” என்று கூறுகிறார்.

அடியார்க்கு நல்லார் :

சிலப்பதிகாரத்திற்கு முதன்முதலில் உரை எழுதியவர் அடியார்க்கு நல்லார். நச்சினார்க்கினியர் என்பது போல, இப்புலவருக்கும் அடியார்க்கு நல்லார் என்ற இனிய பெயர் அமைந்திருக்கின்றது. இப்பெயர் சிவபெருமானை ஏத்தும் பெயராக சம்பந்தர் திருக்கருவூரானிலையில் அமைந்திருக்கிறது.

“விண்ணு லாமதி சூடி வேதமே
பண்ணு ளார்பர மாய யண்டினர்
கண்ணு ளார்கரு வூருள் ஆனிலை
அண்ண லார்அடி யார்க்கு நல்லரே”

சிலப்பதிகாரப் பதிக உரையின் இறுதியில் காணப்படுகின்ற சிறப்புப் பாயிரப் பாடல்கள் மூன்றில், முதற் பாடல் இவர் பெயரைக் குறிக்கிறது.

“பருந்தும் நிழலும் எனப் பாவும் உரையும்
பொருந்து நெறி எல்லாப் பொருளும் - தெரிந்திப்
படியார்க்கு நல்லமிர்தம் பாலித்தான் நன்னூல்
அடியார்க்கு நல்லன் என் பான்.”

இப்பாடல் உரை ஆசிரியர் பெயரைச் சொல்கிறது. எந்த நூல் என்று சொல்லவில்லை. இவர் எழுதிய உரை உலகத்தாருக்கு நல்லமிர்தம் பாலித்தது போன்றது என்று கூறுகிறது.

ஊர் :

விஜயமங்கலத்திற்கு அருகில் உள்ள நிரம்பையூர் தான் அடியார்க்கு நல்லார் வாழ்ந்த இடம் என்பதை கொங்கு நாட்டு ஊர்த்தொகை, கொங்கு மண்டலத்தில் குறுட்டு நாடு ஒரு பகுதி என்றும், அதில் நிரம்பையூர் என்ற ஊர் உள்ளதென்றும் கூறுகிறது.

“வருவிஜய மங்கையும் நிரம்பையும் கூடலூர்
மருவறு சிறுக்கழிச்சி” என்கிறது ஊர்த்தொகை

சிலப்பதிகாரப் பதிக உரைப் பாடல்,

“ஓரும் தமிழொரு மூன்றும் உலகு இன்புற வகுத்துச்
சேரன்தெரிந்த சிலப்பதி காரத்திற் சேர்ந்த பொருள்
ஆருந் தெரிய விரித்துரைத்தான் - அடியார்க்கு நல்லான்
காருந் தருவும் அனையான் நிரம்பையர் காவலனே”

என்ற பாடலாலும் அடியார்க்கு நல்லார் நிரம்பையூரைச் சேர்ந்தவர் என்று அறியலாம். இப்பாடல் சேரர் முத்தமிழும் கொண்ட காப்பியமாகச் சிலப்பதிகாரத்தை வகுத்தமைத்ததைக் கூறிப் பின் அடியார்க்கு நல்லார் அதன் பொருளை விரித்துரைத்தார் என்று சொல்கிறது. காரும் தருவும் ஆனையான் என்பதால் இவர் செல்வர் என்பதையும் அறியலாம். அடியார்க்கு நல்லார் சமண மதத்தைச் சேர்ந்தவர் என்பதை கொங்கு மண்டல சதகத்தின் செய்யுளால் அறியலாம்.

“குருவை யுணர்ந்த விளங்கோ வடிகளும் கொண்டுசொன்ன
தருவை நிகருஞ் சிலப்பதிகாரத் தனித் தமிழ்க்
கருமை யுரைசெ யடியார்க்கு நல்லா ரவதரித்து
வருமைப் பொழினிரம் பைப்பதியும் கொங்க மண்டலமே”

இவர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் கொங்கு நாட்டில் வாழ்ந்தவர்.

கார்மேகக் கவிஞர் :

கொங்கு மண்டல சதகம் என்ற நூலை இயற்றியவர். இவருடைய மற்றொரு பெயர் ஜினேந்திரன் ஆகும். கொங்கு மண்டலத்திலே குறுப்பு நாட்டிலே விஜயமங்கலம் என்னும் ஊரில் ஜைனப் பிராமண குலத்திலே பதுமநாப அய்யர் என்பாருக்குப் பிறந்த ஆண் குழந்தை ஜினேந்திரன். இவர் வடமொழி பயின்றார். இவர் விஜயமங்கலத்தைச் சேர்ந்தவரென்றும், சமண மதத்தை உடையவர் என்றும் தெரிகின்றது. இவருடைய காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு என்று சிலர் கருதுகின்றனர். டாக்டர் அர. சம்பகலட்சுமி, கார்மேகக் கவிஞர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்று கூறுகிறார்.

⌘⌘⌘

கோயில்கள்

விஜயமங்கலத்தில் சிவன் கோயில், அம்மன் கோயில், விஷ்ணு கோயில், சமணக் கோயில் முதலியன பழங்காலத்துக் கோயில்களாகும். தற்காலத்திய கோயில்களான அம்மன் கோயில், விநாயகர் கோயில், மாரியம்மன் கோயில் முதலியனவும் உள்ளன.

சிவன் கோயில்

மேற்கு திசையை நோக்கியபடி இக்கோயில் உள்ளது. மேற்கு பார்த்த நிலையில் இருப்பதற்கு அங்குள்ள மக்கள் சொல்லும் காரணம், சேரர்கள் கொங்கு நாட்டின்மீது படையெடுத்து வெற்றி பெற்ற பின் அங்கு பல சிவாலயங்களை அமைத்தனர். அனைத்துமே மேற்குத் திசையில் உள்ள தங்கள் நாட்டைப் பார்த்தபடி கட்டப்பட்டன. சிவபெருமான் எப்பொழுதும் எங்களைப் பார்த்த வண்ணமும் அருள்புரிந்த வண்ணமும் இருக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு கட்டினர் என்று கூறுகின்றனர்.

இச்சிவன் கோயிலில் காணப்படும் கல்வெட்டுகள் இறைவனை 'திருநாகீஸ்வரமுடையார்' என்றே குறிக்கின்றன. கொங்கு நாட்டில் நாக வழிபாடு இன்றும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. பல கிராமங்களில் ஆலமரத்தினடியில் நாக உருவங்களைக் கற்களில் செய்து வைத்து வணங்கி வருவதை நாம் காணலாம். மேலும் வேடுவர்கள் மிகுதியாக வாழ்ந்ததாகவும், அவர்கள் நாக வழிபாடு செய்யும் வழக்கம் உடையவர்கள் என்றும் சிலர் கருதுகின்றனர். இன்னும் இங்கு சொல்லப்படும் 'காக்காக்கு பொங்க வைத்து கை ஒடிஞ்சு போச்சு: நாகத்துக்குப் பொங்க வைச்சு கை நல்லாப் போச்சு' என்ற பழமொழியானது நாக வழிபாடு எவ்வளவு சிறப்புடையது என்பதை விளக்குகின்றது. திருச்செங்கோடு மலையிலுள்ள நாக உருவத்திற்கு மிகச் சிறப்பான வழிபாடும், பொங்கலும் இன்றும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. ஊஞ்சலூர் சிவன் கோயில், போளுவாம்பட்டி சிவன் கோயில் மற்றும் கொங்கு நாட்டிலுள்ள பல சிவாலயங்கள் நாகீஸ்வரன் என்ற

பெயருடனேயே அழைக்கப்படுகின்றன. மற்றும் சோழன் பூர்வ பட்டயத்தில் சிவலிங்கம் இருந்த இடம் முன்பு நாகப் புற்றாக இருந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. விஜயமங்கல கோயில் அர்ச்சகரும், முன்பு இங்கு நாகப்புற்று இருந்ததாகவும், தினந்தோறும் பசுமாடு ஒன்று அப்புற்றின் மீது பால் சொரிந்ததாகவும், ஊர்மக்கள் அப்புற்றை நீக்கிப் பார்க்கும்பொழுது உள்ளே சிவலிங்கம் இருந்ததாகவும் கூறினார். இச்செய்திகளை எல்லாம் காணும்போது கொங்கு நாட்டில் சிவாலயங்கள் நாகத்தின் பெயரால் அழைக்கப்பட்டன என்று அறியலாம்.

கட்டடக்கலை :

கோயில் விமானம், இடைக்கட்டு, முன்மண்டபம், மகாமண்டபம், திருச்சுற்று, பாரிவாரக் கோயில் கோபுரவாயில் எனப் பல பகுதிகளைக் கொண்டது. கட்டடம் எழுப்புவதில் ஆதாரப் பகுதிகளாக உள்ளவை. 1. அதிட்டானம்(பீடம்), 2. சுவர்(கால்), 3. பிரஸ்தரம்(கூரை) 4. கழுத்து (கிரீவம்), 5. சிகரம்(தலை), 6. குடம்(ஸ்தூபி) என்பவையாகும். இவ்வங்கங்களை அடி, கால், தோள், கழுத்து, தலை, முடி என மனித உடல் அங்கங்களுக்கு உவமிப்பர்.

இக்கோயில் கருவறை, அர்த்த மண்டபம், முன் மண்டபம் ஆகிய அமைப்புகளைக் கொண்டு விளங்கும் கற்கோயிலாகும்.

காலம் :

அபிமான சோழ இராசாதிராசன் என்ற கொங்குச் சோழ அரசனின் காலம் முதல் இங்கு கல்வெட்டுகள் இருப்பதால், அவன் காலத்திலோ அல்லது இவனுக்குச் சற்று முன்போ இக்கோயில் கட்டப்பட்டிருக்க வேண்டும். இவனுடைய காலம் கி.பி. 1090 முதல் 1110 வரையாகும். இக்கோயிலின் காலம் சுமார் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு என கல்வெட்டைக் கொண்டே கூறலாம்.

கருவறை அமைப்பு :

அதிட்டானப் பகுதி கீழிருந்து மேலாக ஜகதி, முப்பட்டைக் குமுதம், கண்டம், வேதிகை ஆகிய அங்கங்களுடன் உள்ளன.

சுவர் :

அதிட்டானத்தின் மேலுள்ள பகுதி சுவர் அல்லது கால் என அழைக்கப்படும். தேவகோஷ்டங்கள் வேதிகையின் மீது அமைக்கப்பட்டுள்ளது. வேதிகைப்பட்டி தேவகோஷ்டத்தில் இடைவெளிவிட்டுச் செல்கிறது. தேவகோஷ்டத்திற்கு மேலே வேலைப்பாடு இல்லாத, மகர தோரணம் அரை வட்ட வடிவில் காணப்படுகிறது. அதன் நடுவில் வட்டமாகப் பத்ம இதழ்களுடன் உள்ளன. கால்வரியில் பத்மபந்தம், தாடி, இதழ், பலகை, போதிகை, முதலியன இருக்கின்றன. கருவறையில் மூன்று தேவ கோஷ்டங்கள் உள்ளன. தேவ கோஷ்டங்களில் உருவங்கள் இல்லை.

பிரஸ்தரம் :

பிரஸ்தரப் பகுதியில் பூதவரியில் சிறுசிறு சிற்பங்கள் இருக்கின்றன. கபோதத்தின் கூடுகள் உள்ளன. பக்கத்திற்கு நான்காக (வடக்கு, கிழக்கு, தெற்கு) மொத்தம் பன்னிரண்டு கூடுகள் வேலைப்பாடுகள் அதிகமில்லாமல் இருக்கின்றன. கபோதத்திற்கு மேலே யாளி வரி இருக்கின்றது.

விமானம் :

இருதளங்களையுடைய நாகர விமானமாகும். ஒவ்வொரு தளத்திலும் இருபுறமும் கர்ணகூடு, இடையில் சாலை அமைப்பைக் கொண்டது. நாகர விமானத்துக்கு மேலே கலசம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

அர்த்தமண்டபம் :

கருவறையின் அதிட்டான அமைப்பை போலவே இருக்கிறது. சுவர் பகுதியில் தேவ கோஷ்டமோ அல்லது வேதிகைப்பட்டியோ எதுவும் இல்லாமல் வெறுமனாக உள்ளது. அர்த்தமண்டபத்தின் பிரஸ்தரம் பகுதி கருவறையின் அமைப்பை போலவே உள்ளது.

முன்மண்டபம் :

முன்மண்டபம், இரண்டாம் விக்கிரம சோழனின் 9-வது ஆட்சியாண்டில் (சக வருடம் 1085 கி.பி. 1163) பழுது பார்க்கப்பட்டதை

அவனது கல்வெட்டு தெரிவிக்கின்றது. அச்சமயத்தில் முன்பிருந்த கல்வெட்டுகளை மறுபடியும் எழுதி வைத்து விட்டதை அவனது கல்வெட்டு குறிக்கிறது. முன்மண்டப அமைப்பு அர்த்தமண்டபத்தைப் போலவே ஒத்திருக்கிறது. ஆனால் தூண்களில் பத்ம இதழ்கள் உள்ளன. நாகபந்தம் தோன்றுவதற்குரிய அறிகுறிகள் உள்ளன.

அளவுகள் :

கருவறையின் கிழக்கு, தெற்கு, வடக்குச் சுவர்களின் நீளம் 6.68 மீட்டராக உள்ளது. அர்த்தமண்டபத்தின் நீளம் 2.4 மீட்டராக உள்ளது. முன்மண்டபத்தின் நீளம் 7.67 மீட்டராகவும், மேற்கு திசையில் அகலத்தில், நுழைவாயில் அகலம் 1.04 மீட்டராக உள்ளது.

முன் மண்டபத்துள் இருக்கும் தூண்களும், முன் மண்டபத்துக்கு வெளியேயுள்ள மகா மண்டபத்தில் முருகன் கருவறைக்கு எதிரேயுள்ள மூன்று தூண்களைத் தவிர மற்ற தூண்களில் உடல் சதுரமாகவும், போதிகை வேலைப்பாடு இல்லாமல் காணப்படுகின்றன. முருகன் கருவறைக்கு எதிரேயுள்ள மூன்று தூண்களில் நாக பந்தங்கள் உள்ளன.

முன் மண்டபத்துள் நான்கு முழுத்தூண்களும், நான்கு அரைத் தூண்களும் இருக்கின்றன. மகா மண்டபத்தில் மொத்தம் பத்தொன்பது தூண்கள் இருக்கின்றன.

மகா மண்டபத்தின் வடமேற்கு மூலையில் முருகப்பெருமானின் கருவறை அமைந்துள்ளது.

முதல் திருச்சுற்று மாளிகை :

வடக்கு திசையில் 51.3 மீ நீளமும், கிழக்குத் திசையில் 11.60 மீ அகலமும், தெற்குத் திசையில் 28.55 மீ நீளமும் கொண்ட திருச்சுற்று மாளிகையில் மொத்தம் இருபத்து மூன்று தூண்கள் உள்ளன. தூண்கள் கீழ்ப்புறம் சதுரமாயும் அதை அடுத்து எண் பட்டையாகவும் மீண்டும் சதுரமாகவும் பின்னர் போதிகை முடிவு கொண்டதாக உள்ளன.

சண்டிகேசுவரர் ஆலயம் :

கருவறையின் வடக்கில் தெற்கு பார்த்தபடி சண்டிகேசுவரர் ஆலயம் உள்ளது. கட்டட அமைப்பு சிவனின் கருவறைக் கட்டட அமைப்பை போலவே இருக்கிறது.

தட்சிணாமூர்த்தி கருவறை :

கருவறையின் தெற்கு சுவருடன் சேர்ந்து தட்சிணாமூர்த்தியின் உருவம் உள்ளது.

இரண்டாம் திருச்சுற்று :

இத்திருச்சுற்றின் மதிற்சுவரின் நுழைவாயிலின் நேர் உள்ளே பலிபீடம் அமைந்துள்ளது. தென்கிழக்கு மூலையில் ஒன்பது தூண்களை நிறுத்தி மேலே மட்டும் முடப்பட்ட மண்டபம் உள்ளது. தூண்களின் அமைப்பை பார்க்கும் போது அம்மண்டபம் சுமார் 16-17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததைப் போல காணப்படுகின்றது. மதிற்சுவர் சுமார் 2 மீ உயரமுள்ளது. முற்றிலும் கல்லால் கட்டப்பட்டது.

நுழைவாயில் :

கோயிலினுள் நுழையுமிடத்தில் இருபுறமும் திண்ணைகளுடன் கூடிய நுழைவாயில் உள்ளது. அதிலிருக்கின்ற தூண்களில் நாகபந்தங்கள் பெரியதாகவும், போதிகையில் வாழைப்பூ மாதிரி தொங்குகின்றன. வெளியே சிறு மண்டபத்தின் நடுவில் துவஜ ஸ்தம்பம் உள்ளது.

திருக்காமக்கோட்டம் :

சிவன் கோயிலின் இரண்டாவது திருச்சுற்றில் தெற்குத் திசையில் திருக்காமக் கோட்டமுடைய அம்மனின் கோயில் உள்ளது. கருவறை, அர்த்த மண்டபம், முன் மண்டபம், மகா மண்டபம் முதலிய அமைப்புகளோடு அம்மன் கோயிலுள்ளது.

காலம் :

அபிமான சோழ ராசாதிராசனின் கல்வெட்டு அம்மன் கோயிலில் இருப்பதால் கல்வெட்டைக் கொண்டு காலத்தைக் கருதும்போது கி.பி. 12-ஆம் நூற்றாண்டு எனக் குறிக்கலாம்

கட்டட அமைப்பு :

ஒரு தளமுடைய வேசர விமானத்துடன் கூடிய கருவறையாகும் கருவறை அர்த்தமண்டபம் ஆகியவற்றின் அதிட்டானப் பகுதிகள் உபானம், பத்மவரி, ஜகதி, முப்பட்டைக் குமுதம், கண்டம், வேதிகை முதலிய அமைப்புகளுடன் உள்ளன.

சுவர்ப் பகுதியிலுள்ள மூன்று தேவ கோஷ்டங்களிலும் சிற்பங்கள் இல்லை. கால் வரிகள் உள்ளன. அதில் நாக பந்தம் சிறியதாக உள்ளது. பத்ம பந்தம், இதழ் போதிகை முதலியன உள்ளன.

பிரஸ்தரப் பகுதியில் கீழே பத்ம வரியும், இடையில் கபோதமும், மேலே யாளி வரிகளும் இருக்கின்றன. கபோதத்தில் கூடுகள் உள்ளன.

கருவறைக்கும் அர்த்த மண்டபத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் அந்தராளம் அமைந்துள்ளது. அதில் தேவகோஷ்டம் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தேவகோஷ்டங்களில் உருவங்கள் இல்லை. இவைகள் சுவரை விட சற்று முன்னால் இருக்கும்படி அமைக்கப்பட்டுள்ளன. மகாமண்டபத்தில் மொத்தம் எட்டு தூண்கள் நான்கு முழுதூண்களாகவும், நான்கு அரைத்தூண்களாகவும் உள்ளன.

அம்மன் கோயில் :

சிவாலயத்தின் அருகிலேயே, அதன் மதிற்சுவருக்குள்ளேயே அம்மன் கோயில் இருக்கின்றது. அம்மனை கல்வெட்டுகள் 'திருக்காமக் கோட்டத்து ஆளுடைய நாச்சியார்' என்று குறிக்கின்றன. சுந்தரமூர்த்தி சுவாமிகள், காமக்கோட்டம் என்னும் பெயருடைய உமையம்மனின் கோயிலைப் பற்றி,

"காரி ரும்பொழிற் கச்சி மூதூர்க்
காமக் கோட்டம்உண் டாகநீர்போய்
ஊரி டும்பிச்சை கொள்வ கொள்வ தென்னே
ஒண காந்தன் தளியு ளீரே"

என்று கூறியுள்ளார்.

திருமால் கோயில் :

விஜயமங்கலத்தில், கிழக்குத் திசையை நோக்கி திருமால் கோயில் உள்ளது. கரிய மாணிக்க ஆழ்வார் கோயில் என்று பெயர். கல்வெட்டுகளில், 'விசையமங்கலத்து சித்திரமேழி விண்ணகரெம் பெருமான் கரியமாணிக்காழ்வார்' என்று குறிப்பிடப்படுகின்றன.

சித்திரமேழி என்பது, வேளான் குடியைச் சார்ந்த வெள்ளாளர்கள் அவர்களுக்குள் ஒரு குழுவை ஏற்படுத்திக் கொண்டதைக் குறிக்கும்

உழவையே தங்கள் தொழிலாகக் கொண்டு வாழ்ந்த ஒரு குடிமக்கள், ஏரையே தெய்வமாகக் கொண்டவர்கள். சித்திரமேழியே தெய்வமாகவும் செம்பொற்பசும்பையே வேலியாகவும் கொண்டவர் என்றும் கூறிக் கொண்டனர். இச்சித்திரமேழி பெதிய நாட்டார் எனப் பெயர் கொண்ட வெள்ளாளர் சபை பல நூற்றாண்டுகள் தமிழகத்தில் சீரும் சிறப்புமாகத் திகழ்ந்தது என்று அறிகிறோம். இக்கோயில் கல்வெட்டுகளில் சித்திரமேழி என்று வருவதால் வேளாண் குடியைச் சார்ந்த மக்கள் இக்கோயிலுள் இருக்கும் இறைவனை வணங்கினர் என்று அறியலாம்

கருவறை, அந்தராளம், அர்த்த மண்டபம், முன் மண்டபம் இவைகளுடன் கூடிய கற்கோயிலாகும்

கட்டடத்தின் காலம் :

இங்குள்ள கல்வெட்டுகளிலே காலத்தால் முந்தியது திரிபுவனச் சக்கரவர்த்தி வீரராசேந்திரச் சோழனின் கல்வெட்டாகும். இவனது 10-ஆவது ஆட்சியாண்டில் அக்கல்வெட்டு எழுதப்பட்டது. இவனுடைய ஆட்சியின் காலம் கி.பி. 1207 முதல் 1255 வரையாகும். எனவே கல்வெட்டைக் கொண்டு அறியலாம்

கட்டட அமைப்பு :

கருவறை :

அதிட்டானத்தில் கீழிருந்து மேலாக உபானம், கம்பு, ஜகதி, முப்பட்டைக் குமுதம், கண்டம், வேதிகை முதலிய அமைப்புகள் உள்ளன. அர்த்தமண்டபமும், முன் மண்டபமும் இதே அமைப்பில் உள்ளன.

சுவர் :

அதிட்டானத்தின் மேலுள்ள பகுதியாகும். தேவகோஷ்டம் உள்ளது. அதில் சிற்பம் கிடையாது. மொத்தம் மூன்று தேவகோஷ்டங்கள் கருவறையைச் சுற்றி உள்ளன. தேவகோஷ்டத்திற்கு மேலே வேலைப்பாடில்லாத மகர தோரணம் இருக்கின்றது. கால் வரிகள் காணப்படுகின்றன. அதில் பத்ம பந்தம், தாடி, இதழ், பலகை, போதிகை முதலிய அமைப்புகள் உள்ளன.

பிரஸ்தரம் :

சுவரின் மேல் வரும் கூரையே அறையை முடும் அங்கமாகும் இது பூதவரி, கொடுங்கை, யாளிவரி என மூன்று பகுதிகளை உடையது.

இக்கோயிலில் பூதவரிக்கும் பதிலாக பதும வரி உள்ளது. கொடுங்கையில் கூடுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலே யாளி வரி காணப்படுகிறது.

விமானம் :

பிரஸ்தரத்திற்கு மேல் விமானம் அமைக்கப்படும். இரு நிலைகளையுடைய நாகர விமானமாகும். விமானம் ஒவ்வொரு நிலையிலும் இருபுறமும் கர்ணகூடு, இடையில் சாலை அமைப்புக் கொண்டுள்ளது.

அர்த்தமண்டபம், முன்மண்டபம் முதலியவைகளின் அமைப்புகள் கருவறைச் சுவரைப் போலவே அமைந்துள்ளன. ஆனால் முன்மண்டபத்தில் தேவகோஷ்டங்கள் கிடையாது.

கருவறைக்கும் அர்த்தமண்டபத்திற்கும் இடையிலுள்ள அந்தராளத்தில் 'கும்ப பஞ்சரத்' தூண் உள்ளது. இதேபோல அர்த்தமண்டபத்துக்கும் முன்மண்டபத்துக்கும் இடையிலுள்ள இடத்திலும் தூண் ஒன்று உள்ளது.

மகாமண்டபம் தற்காலத்தில் கட்டப்பட்டது ஆகும்.

தூண்கள் :

முன்மண்டபத்தினுள் முழுத்தூண்கள் நான்கும், அரைத்தூண்கள் நான்கும் உள்ளன. அதிகமான வேலைப்பாடுகள் எதுவும் இல்லை. கீழ்ப்புறம் சதுரமாகவும் அதை அடுத்த எண்பட்டைகளாகி பின்னர் நீண்ட சதுர போதிகை முடிவும் கொண்டதாகத் தூண்கள் இருக்கின்றன.

திருச்சுற்று :

ஒரே ஒரு திருச்சுற்று மட்டும் உள்ளது. அதுவும் வெளித் திருச்சுற்றாகும். இத்திருச்சுற்றில்தான் கருட பகவானின் கருவறையும், பலி பீடமும் அமைந்துள்ளன.

மதிற்சுவர் கீழே கருங்கல்லாலும், மேலே செங்கற்களாலும் கட்டப்பட்டது.

துழைவாயில் மண்டபம் :

வெளியே இருபுறமும் திண்ணையும் நடுவில் கோயிலினுள் செல்லும் வழியாகவும் அமைக்கப்பட்டுள்ளது. உள்ளேயும் இருபுறமும் திண்ணை அமைக்கப்பட்டுள்ளது. எட்டு முழுத்தூண்களும், நான்கு அரைத்தூண்களும் இருக்கின்றன. தூண்களில் நாக பந்தம் பெரியதாகவும், போதிகையிலிருந்து வாழைப்பூ மாதிரியும் தொங்குகின்றன.

நான்கு தூண்களைக் கொண்ட சிறுமண்டபத்தின் நடுவில் துவஜஸ்தம்பம் இருக்கின்றது.

சமணக் கோயில் :

கொங்கு நாட்டில் சமணம் மிகச் சிறப்புடன் விளங்கியது. கொங்கு நாட்டுச் சமணத் தலங்களிலேயே விஜயமங்கலம் முதன்மையாகத் திகழ்ந்தது. இங்கு சந்திரபிரப தீர்த்தங்கரரின் ஆலயம் உள்ளது. இங்கு தான் மைசூர் நாட்டு அமைச்சனான சாமுண்டராயனின் தங்கை புளியம்மை கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் சல்லேகனை விரதமிருந்து உயிர் நீத்தாள். மேலும் இக்கோயிலில் காணப்படும் ஐந்து புலவர்களின் உருவங்கள் தங்கள் கைகளில் ஓலைச் சுவடிகளுடன் இருக்கின்றன. இக்கோயிலின் கல் மண்டலத்தின் உத்தரத்தில் ஆதிநாதரின் வாழ்க்கையை புடைப்புச் சிற்பங்களில் செதுக்கப்பட்டுள்ளன. கோயிலின் முன்புறமுள்ள கோபுரத்தை இவ்வூர் மக்கள் நெட்டைக் கோபுரம் என்றும், ஆலயத்தை அமணீஸ்வரர் கோயிலென்றும் அழைக்கின்றனர்.

கருவறை, அர்த்தமண்டபம், முன்மண்டபம், மகாமண்டபம் ஆகிய அமைப்புகளை உடைய கோயிலாகும்

காலம் :

சாமுண்டராயன் என்பவன் 10-ஆவது நூற்றாண்டில் மைசூர் நாட்டில் அமைச்சனாக இருந்தவன். அவனுடைய தங்கை புளியம்மை

என்பவர் இங்கு சல்லேகனை விரதம் இருந்து உயிர் நீத்ததைக் குறிக்கின்ற ஒரு கல்வெட்டு இங்குள்ள ஒரு தூணில் இருக்கிறது. ஆனால் இத்தூணை வேறு இடத்திலிருந்து எடுத்து வந்து இங்கு வைத்துள்ளதால், இக்கல்வெட்டு கூறும் காலந்தான் கோயில் கட்டடத்தின் காலம் என்று ஏற்றுக்கொள்வது சரியிருக்காது. அடுத்ததாகத் திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்கச் சோழனின் சக வருடம் 1085 என்று குறித்தக் கல்வெட்டு ஒன்றுள்ளது. இக்கல்வெட்டின்படி காலத்தைக் கணக்கிட்டால் கோயில் கட்டடத்தின் காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு எனக் கூறலாம்

கோயிலின் அமைப்பு :

கருவறை :

அதிட்டானப் பகுதி கீழிருந்து ஜகதி, முப்பட்டைக் குமுதம், கண்டம், வேதிகை என மேலாகச் செல்கிறது.

சுவர் :

தேவகோஷ்டம் கருவறைச் சுவரில் இல்லை. வேதிகைப்பட்டி இருக்கிறது.

பிரஸ்தரம் :

பிரஸ்தரப் பகுதியில் சிமெண்ட், காரை முதலியவைகள் பூசியிருப்பதால் பூதவரி, கொடுங்கை, யாளிவரி முதலியற்றில் என்னென்ன இருந்தன என்று அறிய முடியவில்லை.

ஒரே தளத்தையடைய வேசர விமானமாகும். சிமெண்ட் முதலியவைகளைப் பூசி விட்ட காரணத்தினால், கருவறைச் சுவரின் அளவுகள் சிறிது மாறுபடுகின்றன. கிழக்கு, மேற்குக் கருவறையின் சுவர்கள் நீளம் 4.20 மீட்டர் ஆகும். கருவறையின் வடபுறத்துச் சுவரின் நீளம் 4.28 மீட்டர்.

அர்த்தமண்டபம் :

கருவறைச் சுவரைப் போலவே அமைப்புடையது. அர்த்தமண்டபத்துக்கும் முன்மண்டபத்துக்கும் இடையிலுள்ள இடைவெளியில் அகலம் வடக்குப் பக்கத்தில் 0.30 செ.மீ, வடக்கு தெற்காக நீளம் 0.60 செ.மீ, தெற்கு பக்கத்தில் மேற்கு கிழக்காக அகலம் 1.62 மீ ஆகவும் உள்ளது.

முன்மண்டபம் :

அதிட்டானம் பகுதி கருவறையின் அமைப்பை போலவே இருக்கின்றது. சுவர் பகுதியில் தேவகோஷ்டங்கள் இருக்கின்றன. ஆனால் அதில் சிற்பங்கள் இல்லை. தேவகோஷ்டத்தின் மேலே விமானத்தில் இருக்கும் சாலை போன்ற அமைப்பும், இருபுறங்களிலும் இருக்கும் கர்ணகூடு போன்ற அமைப்பும் இருக்கின்றன. சிங்கம் அல்லது யாளியின் வாயிலிருந்து வரும் மகர தோரணம் கர்ணகூடுகளின் இருபுறமும் வருகின்றன.

முன்மண்டபத்தினுள் நான்கு அரைத்தூண்கள் சுவருடன் ஒட்டியுள்ளன.

மகாமண்டபம் :

அதிட்டானப் பகுதி கருவறையின் அமைப்பை போன்றே உள்ளது.

மண்டபத்தினுள் ஆறு முழுத்தூண்களும், இரு அரைத் தூண்களும் உள்ளன. இந்த ஆறு தூண்களில் ஒன்றில் புளியம்மை உருவம் உள்ளது. தூணின் கீழே சதுரமாயும், மேலே எண் பட்டைகளாயும் அதற்கடுத்து சதுரமாயும், மறுபடியும் எண் பட்டைகளாகவும் பிறகு சதுர போதிகைகள் முடிவுமாக உள்ளன.

பிரார்த்தனைக் கூடம் :

பிரார்த்தனைக் கூடம் என்றழைக்கப்படும் இடத்தில் மொத்தம் பதினாறு தூண்களைக் கொண்ட மண்டபம் இருக்கின்றது. முன்பு சுற்றிலும் மண்டபத்தினுள் நுழையும் இடத்தைத் தவிர சுவர் இருந்ததை தற்போது அப்புறப்படுத்தியுள்ளார்கள்.

திருச்சுற்று :

வெளித் திருச்சுற்று ஒன்று தான் உள்ளது. இத்திருச்சுற்றில் வடகிழக்கு மூலையில் கோயில் கட்ட ஆரம்பித்து பிறகு அப்படியே விட்டு விட்ட அதிட்டானத்தின் பகுதி உள்ளது. பலி பீடமும் இத்திருச்சுற்றில் உள்ளது.

மதிற்சுவரின் சீழ்ப்பகுதி கருங்கல்லாலும் மேலே செங்கற்களாலும் கட்டப்பட்டு முன்புறம் உயர்ந்த கோபுரத்துடன் காணப்படுகின்றது. வெளியே சிறுமண்டபத்தில் மானஸ்தம்பம் உள்ளது.

கோபுரம் :

தமிழ்நாட்டில் கோயில் என்றாலே கோபுரங்கள்தான் நம் கண்முன்னே நிற்கும். 'கோபுரம்' என்னும் சொல்லே தமிழகத்தின் தனிச்சொல் என்பர். கோபுரம் என்பது கோயிலின் வாயிலை அலங்கரித்து நிற்கும் கட்டட அமைப்பாகும்.

விஜயமங்கலத்து சமணக் கோயிலுள்ள கோபுரம் மூன்று தளங்களையுடைய சாலை விமான அமைப்பு உடையதாகும். அடிப்பகுதி கல்லாலும், மேல்தளங்கள் சுதையாலும் கட்டப்பட்டு உள்ளன. கீழே உபானமும், அதிட்டானப் பகுதி கீழிருந்து மேலாக ஜகதி, முப்பட்டைக் குமுதம், கண்டம், வேதிகை முதலிய அமைப்புகளைக் கொண்டுள்ளது. சுவர் பகுதியில் தேவகோஷ்டமும், வேலைப்பாடு இல்லாத மகர தோரணங்களும் உள்ளன. கால் வரியில் நாகபந்தம், பதும பந்தம், இதழ், பலகை முதலியன உள்ளன. பிரஸ்தரத்தில் பூதவரி, கபோதம், யாளிவரி போன்ற பகுதிகள் இருக்கின்றன. ஒவ்வொரு தளங்களிலும் இருபுறமும் கர்ண கூடும் இடையில் சாலை அமைப்பும் கொண்டுள்ளன. சுவரிலுள்ள தூண்கள், மற்றும் கட்டட அமைப்பை வைத்துப் பார்க்கும்போது இக்கோபுரம் சுமார் கி.பி. 14-ஆம் நூற்றாண்டினதாக இருக்கலாம்.

⌘⌘⌘

சிற்பங்கள்

பல்லவர், பாண்டியர், சோழர் முதலிய பெருமன்னர்கள் அழியாச் செல்வங்களை அளித்து தமிழகத்துக்குப் பெரும்புகழ் அளித்துள்ளனர். அதுபோன்று கொங்கு மண்டலமும் தமிழகத்துக்குச் சிறப்பான கலைச் செல்வங்களை அளித்துள்ளது என்பதில் ஐயமில்லை.

விஜயமங்கலமும் சிற்பங்களும் :

விஜயமங்கலத்தில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டிலிருந்து 20-ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலங்களையுடைய சிற்பங்கள் காணப்படுகின்றன.

சிவன் கோயிலிலுள்ள சப்தமாதர்கள், ஜேஸ்டா தேவி, மற்றும் உதிரிச் சிற்பங்களான முருகன், விநாயகன், சூரியன் முதலியனவும், சமணக் கோயிலிலுள்ள புளியம்மை சிற்பமும் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

சப்த மாதர்கள் :

தமிழகத்தில் தாய் வழிபாடு சுமார் 2800 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்து வந்திருக்கிறது என்பதற்கு ஆதிச்சநல்லூரில் கிடைத்துள்ள தாய்திருமேனி சான்றாக உள்ளது. தாய்மார் எழுவர் வழிபாடு பல்லவர் காலம் தொட்டு இன்று வரை தொடர்ந்து இருந்து வருகிறது.

விஜயமங்கலத்தில் சிவன் கோயிலில் கருவறைக்குத் தென்புறத்தில் வடக்கு பார்த்த நிலையில் சப்தமாதர்களின் உருவங்கள் ஒரே கல்லில் உள்ளன. இது புடைப்புச் சிற்பங்கள் ஆகும். சப்தமாதர்களுக்கு முன்பு விநாயகர் உருவம் உள்ளது. விநாயகர் சப்த மாதர்களைவிடச் சற்று பின் தள்ளி உள்ளது. அனைத்து உருவங்களும் அமர்ந்த நிலையில் உள்ளன.

பிராம்மி :

பிரம்மனின் சக்தி ஆவாள். மூன்று தலைகள் உள்ளன. மொத்தம் நான்கு கைகள் இருந்து, மூன்று கைகள் உடைந்து விட்டன. முன் இடது கை தொடைமீது வைத்தபடி இருக்கிறது. இடது காலை மடக்கி வைத்து, வலது காலை இடது பக்கமாகத் தொங்கவிட்டு, கால் பாதம் வலப்புறம் பார்த்தபடி அமர்ந்த நிலை.

மாகேஸ்வரி :

மகேஸ்வரனின் சக்தியாகக் கருதப்படுபவள். தலையில் ஜடா மகுடம். முன் இடது கை தொடைமீது ஊன்றியபடி உள்ளது. மற்ற மூன்று கைகள் இல்லை. வலது காலை தொங்க விட்டும், இடது காலை மடித்து வைத்தும் அமர்ந்த நிலை.

கௌமாரி :

முருகனின் சக்தி. தலையில் கரண்ட மகுடம். தடித்த கண்ணிமாலை இருக்கின்றது. மற்றபடி அனைத்தும் மாகேஸ்வரிக்கு உள்ளதைப் போலவே இருக்கின்றன.

வைஷ்ணவி :

விஷ்ணுவின் சக்தி. கிரீட மகுடம் இருக்கின்றது. பின்னிரு கைகள் இல்லை. முன் வலது கை அபய ஹஸ்தத்திலும், இடது கை இடது காலின் தொடைமீது வைத்தபடியும் உள்ளன. இடது காலை மடித்து, வலது காலை தொங்க விட்டு அமர்ந்த நிலை.

வராகி :

வராகப் பெருமானின் சக்தி. அமர்ந்த நிலை. தலையில் கரண்ட மகுடமும், பன்றி முகமும் இருக்கின்றன. முகம் சற்று வலதுபுறமாக திரும்பி உள்ளது. இடது கை இடது காலின் தொடை மீது உள்ளது. இடது கால் மடித்தும் வலது கால் தொங்கவிட்டும் இருக்கின்றன.

இந்திராணி :

இந்திரனின் சக்தி. தலையில் கிரீட மகுடம். இடது கை மட்டும் உள்ளது. அது இடது காலின் தொடை மீது வைத்தபடி இருக்கின்றது.

சாமுண்டா :

எமனின் சக்தி. சற்று இடதுபுறமாக சாய்ந்து அமர்ந்த நிலை. தலையில் ஜடாபாரம் பின்புறம் அடர்ந்த முடி பரந்து காணப்படுகின்றது. ஒடுங்கிய வயிறு காணப்படுகிறது.

கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இந்த சப்த மாதர்களின் உருவங்கள் மீது எண்ணையும், மற்றும் அபிஷேகப் பொருட்களையும் போடுவதால் அச்சிற்பங்கள் அழியும் நிலையில் காணப்படுகின்றன.

விநாயகர் :

அமர்ந்த நிலையில் சிற்பம் உள்ளது. மொத்தம் நான்கு கைகள் இருந்தன. இப்பொழுது பின்னிரு கைகள் மட்டும் உள்ளன. பின்னிரு கைகள் இருந்ததற்கான அடையாளம் உள்ளது. முன்னிரு கைகளில் மோதகம் உள்ளது. துதிக்கை எக்கையிலும் படாமல் உள்ளது.

முருகன் சிற்பம் :

இக்கோயிலில் இரு உதிரிச் சிற்பங்கள் திருச்சுற்று மாளிகைக்குப் பின்புறம் உள்ளன. ஒன்று முருகன் மற்றொன்று சூரியனின் சிற்பம் ஆகும். இந்த இருசிற்பங்களும் சாளுக்கியர் கலைப்பாணியை போலக் காணப்படுகின்றன. நன்கு, நெஞ்சை நிமிர்த்தியபடி நிற்கும் தோற்றத்தை உடையன.

தலையில் கரண்ட மகுடம். கண்ணி மாலை நன்கு தடித்தும் காணப்படுகின்றது. மார்பு மீது சன்ன வீரம் உள்ளது. மொத்தம் நான்கு கைகள் உள்ளன. பின் வலது கையில் சக்தியும், இடது கையில் வஜ்ரமும், முன் வலது கை ஆகூய வதத்திலும் முன் இடது கை கட்டிய வலம்பிதம் ஹஸ்தத்திலும் இருக்கின்றன. யக்ஞோ பவிதம் உள்ளது. இடைக் கச்சும், கடிபந்தமும் உள்ளன. நீண்ட, பாதத்திற்குச் சற்று மேலே அரை ஆடை உள்ளது.

சூரியன் :

காதுகளில் பத்ர குண்டலங்கள் உள்ளன. பின்புறம் ஒளி வட்டம் காணப்படுகின்றது. மொத்தமுள்ள இருகைகளிலும் மலர்கள் உள்ளன. பாதம் வரை ஆடை உள்ளது.

ஜேஸ்டாதேவி (மூத்ததேவி) :

திருச்சுற்று மாளிகையில் சிவனின் கருவறைக்குப் பின்புறம் (கிழக்கு திசை) ஜேஸ்டாதேவி உருவம் பொறிக்கப்பட்ட புடைப்புச் சிற்பம் கொண்ட கல் வைக்கப்பட்டுள்ளது. ஜேஸ்டாதேவியின் உருவம் இடது காலை மடித்து வைத்து, வலது காலை தொங்க விட்டு அமர்ந்த நிலையில் உள்ளது. மார்புக் கச்சை இல்லை. வலது கை உடைந்து விட்டது. இடது கை தொடை மீது வைத்த நிலையில் இருக்கின்றது. கண்கள் இருக்குமிடம் குழியாக உள்ளன. பிற்காலத்தில் அந்த இடம் சிதறிவிட்டது போல் இருக்கின்றது.

ஜேஸ்டாதேவிக்கு வலதுபுறம் நந்தி உள்ளது. இடது காலை மடித்து வைத்து வலது காலைத் தொங்க விட்டு அமர்ந்த நிலை. காளை முகம். முகம் சற்று இடப்புறம் பார்த்த நிலையில் காணப்படுகின்றது. வலது கையில் வைத்திருக்கும் பகுதி உடைந்து விட்டதால் என்ன பொருள் இருந்தது என்று தெரியவில்லை. இடது கை தொடைமீது ஊன்றிய நிலையில் காணப்படுகின்றது.

ஜேஸ்டாதேவிக்கு இடது புறத்தில் அக்னி மாதா வலப்புறமாக திரும்பி அமர்ந்த நிலையில் காணப்படுகின்றது. முகம் நேராக பார்த்த நிலையில் காணப்படுகின்றது. இடது கால் முழங்கால் வரை பீடத்துடனும், கீழ் பாதம் கீழே தொங்கிய நிலையில் உள்ளது. வலது காலை உயர்த்தி மடக்கி வைத்தபடி உள்ளது. வலது கையில் மலரும், இடது கை இடுப்பின் பின்புறம் உள்ளன.

விஷ்ணு பாற்கடலை கடையும்போது இலட்சுமி கிடைப்பதற்கு முன்பு கிடைத்தவள் ஜேஸ்டை என்று புராணம் கூறுகின்றது. ஜேஸ்டை என்றால் மூத்தவள் என்று பொருள்படும். இவளை யாரும் மணம் செய்ய முன் வராததால் கபிலம் என்ற முனிவர் மணந்து கொண்டார். கபிலர் பத்தினி என்றும் அழைக்கப்படுவாள். கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சேந்தன்திவாகரம் என்ற தமிழ் நிகண்டு உள்ளது. அது ஜேஸ்டா தேவிக்கு முகடி, தவ்வை, கலத்தி, மூதேவி, காக்கைக்கொடியள், கழுதைவாகினி, சேட்டை, கெடலணங்கு என்ற பெயர்களைக் குறிப்பிடுகின்றது. தமிழகத்தில் இவளுக்கென்றுத் தனிப்பரிவார ஆலயங்கள் எடுக்கப்பட்டு விளங்கின.

இங்குள்ள சமணர் கோயிலான சந்திரபிரபா தீர்த்தங்கரரின் ஆலயத்தில் இருக்கும் தூணில் மகாவீரரின் உருவமும், புளியம்மை என்ற பெண்ணின் உருவமும் காணப்படுகின்றன. இவ்விரு உருவங்களும் சிறியன. மகாவீரரின் உருவம் யோகாசன நிலையில் அமர்ந்தபடி உள்ளது. மகாவீரருக்குக் கீழே புளியம்மை உருவம் உள்ளது. சற்றே இடதுபுறம் திரும்பிய நிலையில் அமர்ந்த நிலை. தலைமுடி வலது தோளுக்குப் பின்புறம் தொங்குகின்றது. மார்புக் கச்சை இல்லை. கைகள் அஞ்சலி செலுத்தும் நிலையில் உள்ளன. கழுத்தில் அணிகலன் உள்ளது.

புடைப்புச் சிற்பங்கள் :

சிவன் கோயிலில் கொடுங்கையில் காணப்படும் புடைப்புச் சிற்பங்கள் கி.பி. 11 - 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

கருவறைச் சுவரிலுள்ள கொடுங்கையில், லிங்கத்தை மிருகம் ஒன்று பூஜிப்பது போலவும், குதிரையும் யாளியும் எதிரெதிரே நின்று கொண்டு இருப்பது போலவும், காமச் சிற்பமும், நடனமாடும் பெண்களின் சிற்பங்களும் வடக்கு திசையில் உள்ளன. லிங்கத்தை அன்னப் பறவையும், பாம்பும் பூஜிப்பது போன்ற சிற்பங்களும், காமச் சிற்பங்கள் வரிசையாகவும் கிழக்குத் திசையிலும் உள்ளன. தெற்குத் திசையில் லிங்கத்தை மனிதர்கள், குரங்குகள், யானை முதலியன பூஜிப்பது போலவும், கொம்புகளையுடைய மிருகங்கள் சண்டையிடுவது போலவும், முதலையின் வாயிலிருந்து மனித உருவம் வெளிவருவதைப் போன்ற சிற்பங்கள் உள்ளன.

அர்த்தமண்டபச் சுவர் கொடுங்கையில், வடக்கில் அன்னப் பறவை, காமச்சிற்பம் முதலியனவும், தெற்கில் நின்ற, அமர்ந்த மனிதர்களின் சிற்பங்கள் முதலியனவும் உள்ளன.

முக மண்டப கொடுங்கையில் முதலை, ஆமை, மீன் முதலிய சிற்பங்களும், விநாயகர் தலைகீழாக நிற்கும் மனிதன் முதலிய சிற்பங்களும் உள்ளன.

இச்சிற்பங்களில் சில மனிதர்களின் வாழ்க்கையுடன் நின்று நிலவுகின்றன. அவைகளில் ஒன்றிரண்டைப் பற்றி சற்று விரிவாகக் காண்போம்.

முதலையின் வாயிலிருந்து மனித உருவம் வருவது போன்ற சிற்பம் ஒன்று உள்ளது. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருமணத்தின் போது சிவபெருமானால் தடுத்தாட்கொள்ளப்பட்ட அவர், பல சிவலாயங்கள் தோறும் சென்று பதிகங்கள் பாடி வரலானார். அப்படியிருக்கையில் அவர் கொங்கு நாட்டிற்கு மூன்று முறை வந்தார். முதல் முறை வருகையில் திருப்பாண்டிக் கொடுமுடிக்கும், இரண்டாவது முறை வருகையில் திருமுருகன்பூண்டிக்கும் சென்று பதிகங்களைப் பாடினார். மூன்றாவது முறையாக அவர் சேரமான் பெருமாணாயனாரைக் காணச் செல்லும்போது கொங்கு நாடு வந்தார். மலைநாடு செல்லும் வழியில் திருப்புக்கொளியூர் அவிநாசி வந்தார். அவ்வூரில் ஒரு வீதியிலே ஒரே காலத்தில் ஒரு மனையில் மணவொலியும், ஒரு மனையிலே அழுவொலியும் எழக் கேட்டு நாயனார் இவ்விரண்டையும் ஒருங்கு நிகழ்வது எண்ணே என வினவ, சில ஆண்டுகளுக்கு முன் ஒரு மடுவிற்குக் குளிக்கச் சென்ற இரு சிறுவர்களில் ஒருவனை ஒரு முதலை விழுங்கியதும் மற்றவன் தப்பி வீடு வந்ததும் தப்பினவனுக்கு உபநயனம் நடப்பதும், அதனைக் கண்டு இறந்தவன் வீட்டில் அழுகை உண்டாவதும் முதலான செய்திகள் வெளியாயின. அவற்றைக் கேட்டறிந்த நாயனார் அவ்விறந்த புதல்வனை மீட்டுக் கொணரத் திருவுள்ளங்கொண்டு மடுவை அடைந்து எம்பெருமான் மீது 'ஏற்றான் மறக்கேன்' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடினார். அதனில்,

"உரைப் பாருரையகந்துன்க வல்லார் தங்களக்கியளாய்
அரைக் காடரவா வாதியுமந்தமு மாயினாய்
புரைக் காடுசோலைப் புக்கொளியூ ரவிநாசியே
கரைக் கான்முதலையைப் பிள்ளைத்தரச்
சொல்லுகாலனையே"

என்ற நான்காம் திருப்பாட்டு முடிவதற்குள் அம்மடுவிலிருந்த முதலை முன் விழுங்கிய பிள்ளையை அன்றுவரை சென்ற வயதும் நிரம்பக் கரையில் உமிழ்ந்தது. பிள்ளையைத் திரும்பப் பெற்ற பெற்றோர் சுவாமிகளைத் தொழவும் அவர் அவிநாசியீசனைத் துதித்து அப்பிள்ளைக்கும் உபநயனம் புரிந்தார். இந்நிகழ்ச்சி உண்மையிலேயே நடைபெற்றதா என்பதைப் பற்றிக் கவலைப்படாமல், மக்கள் பக்தியுடன் வழிபட்டு வந்தனர் என்பதை விஜயமங்கலக் கோயிலிலுள்ள சிற்பமும், மற்ற இடங்களிலுள்ள சிற்பங்களும் நமக்கு நினைவுறுத்துகின்றன.

பாம்பு லிங்கத்தைப் பூஜிப்பது போன்ற சிற்பம் உள்ளது. கொங்கு நாட்டிலே நாகத்தை இன்றும் வழிபடுவதை கிராமங்களில் ஆலமரத்தினடியில் இருக்கும் நாக உருவமுடைய கற்சிற்பங்கள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. மேலும் திருச்செங்கோட்டில் நாகத்திற்கு வழிபாடும், பொங்கலும் வைப்பதை இன்றும் காணலாம். குறுப்பு நாடு என்பதை வேட்டுவர்கள் அதிகமாக வாழ்ந்த இடம் என்று சிலர் கருதுகின்றனர். அவர்கள் நாகத்தை வழிபடும் வழக்கமுடையவர்கள். குறுப்பு நாட்டின் தலைமை ஊரான விஜயமங்கலத்துச் சிவன் கோயிலில் இருக்கும் அச்சிற்பமானது நாக வழிபாட்டைப் பற்றித் தெளிவாகக் கூறுகின்றது.

கொடுங்கையில் காமச் சிற்பங்கள் பல காணப்படுகின்றன. கொங்கு நாட்டுச் சிவன் கோயில்களில் காமச்சிற்பங்கள் மிகுந்திருக்கின்றன. தேர்களிலும் இத்தகைய சிற்பங்கள் உள்ளன. இவற்றைத் திருஷ்டி பரிகாரம் என்று மக்கள் கூறுவர். கொங்கு நாட்டில் சோழர்கள் காலத்திய சிவன் கோயில்களில் இச்சிற்பங்கள் கி.பி. 11-12-ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்தவை. தமிழகத்தின் பிற கோயில்களில் இத்தகைய சிற்பங்கள் கி.பி. 15-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகே காணப்படுகின்றன. கொங்கு நாட்டில் கி.பி. 11-12-ஆம் நூற்றாண்டிலேயே இத்தகைய சிற்பங்கள் இருந்தது குறிப்பிடத்தக்கது. சிந்துவெளி நாகரீகம் முதற்கொண்டு இத்தகைய 'வளமைச் சடங்கு' என்றழைக்கப்படும் இம்முறை இருந்து வந்ததற்கு, அங்கு கிடைத்துள்ள முத்திரைகள் இரண்டில், ஒன்றில் ஒரு பெண் தாவரத்துடனும், மற்றொன்றில் ஒரு பெண் ஒரு ஆமையுடனும் சேர்வது போன்ற காட்சிகள் உள்ளன. தமிழகத்தின் பண்டைய இலக்கியங்களில் ஒன்றான ஐங்குறுநூறு இம்முறையைக் குறிப்பிடுகின்றது. இந்த வளமைச் சடங்கிற்கும் வேளாண்மைக்கும் மிகுந்த தொடர்பு இருந்துள்ளது. வயல்களில் முன்பு ஆண், பெண், சேர்வது போன்ற சிற்பங்கள் வைத்திருந்ததைக் கூறலாம். கோவை மாவட்டத்துச் சில இடங்களில் நாட்டுப் பாடல்களிலும் இவ்வளமைச் சடங்கு பற்றிய குறிப்பு வருகிறது. எனவே இச்சடங்கு தொன்றுதொட்டே கொங்கு நாட்டில் நிலவி வந்திருக்கிறது என்பதற்குக் கோயிலில் காணப்படும் காமச் சிற்பங்களும், திருஷ்டி பொம்மைகளுமே சான்றுகளாகக் கொள்ளலாம்.

நாட்டியப் பெண்களின் சிற்பங்களும் காணப்படுகின்றன. கோயில்களில் நாட்டியமாடும் பெண்களுக்குத் தளிச்சேரிப் பெண்டுகள் எனப் பெயர். முதலாம் இராசராசன் முதல் கோயில்களில் பெண்கள் நாட்டியம் ஆடுவதற்கு அமர்த்தப்பட்டனர். மேலும் அவனுடைய கல்வெட்டுகளில் தளிச்சேரிப் பெண்டுகளுக்கு வீடுகளும், நிவந்தங்களும் அளிக்கப்பட்டதைக் குறிப்பிடப்படுகின்றன. அத்தகைய தொடர்பினைத்தான் விஜயமங்கலத்தில் உள்ள நாட்டியப் பெண்களின் சிற்பங்களும் விளக்குகின்றனவோ?

லிங்கத்தைக் குரங்குகள் வழிபடுவது போன்ற புடைப்புச் சிற்பம் விஜயமங்கலத்தில் மட்டுமல்ல, கொங்கு நாட்டுச் சிவன் கோயில்கள் பலவற்றில் உள்ளன. இத்தகைய சிற்பங்கள் எந்தக் காரணத்தை விளக்குகின்றன என்று தெரியவில்லை. ஆமையின் சிற்பமும் ஒன்றுள்ளது. ஆமை வீட்டிற்குள் வந்தால் ஆகாது என்பர். ஆனால் கோயிலில் இருக்கக் காரணமென்ன என்று தெரியவில்லை.

அம்மன் சிற்பம் :

அம்மன் சிற்பத்தில் பங்கம் ஏற்பட்டு விட்டதால் சிவன் கோயிலில் மதிற்சுவருகே வைத்துள்ளனர். சுற்றிலும் பிரபா மண்டலம் உள்ளது. நடுவில் யாளியின் முகம் காணப்படுகின்றது. கீழே இருபுறமும் யாளிகள் இருக்க, அவற்றின் தலைகளிலிருந்து பிரபா மண்டலம் ஆரம்பித்துச் செல்கிறது. நின்ற நிலையில் அம்மன் காட்சி தருகிறாள். தலையில் கரண்ட மகுடமும், காதுகளில் பத்ர குண்டலங்களும் உள்ளன. மொத்தம் நான்கு கைகள் முன்பு இருந்தன. தற்சமயம் முன்னிரு கைகள் உடைந்து காணப்படுகின்றன. பின்னிரு கைகளில் வலது கையில் தாமரை மலரும், இடது கையில் அல்லி மலரும் உள்ளன. மார்புப் பகுதியில் வலது பக்கம் உடைந்து விட்டது. இடைக் கச்சும், கடி பந்தமும் உள்ளன. பாதம் வரை நீண்ட ஆடை உள்ளது.

சமணர் கோயிலிலுள்ள சிற்பங்கள் :

சந்திர பிரபா தீர்த்தங்கரர் :

கருவறையில் சிறிய கல்லின் மீது சந்திர பிரப தீர்த்தங்கரரின் சிற்பம் உள்ளது. பத்ம பீடத்தில் யோகாசன நிலையில் அமர்ந்த நிலை. முக்குடைக்குப் பின்புறம் சிறியதாக மரம் (ஆலமரம்) உள்ளது.

முக்குடைக்கும் தீர்த்தங்கரரின் தலைக்கும் இடைப்பட்டப் பகுதியில் பிரபா மண்டலம் உள்ளது. இவருக்கு இருபுறமும் இடுப்பு வரையே உள்ள இரு உருவங்கள் சாமரம் வீசுகின்றனர். வலது புறம் உள்ள உருவத்தின் வலது கையிலும், இடதுபுறமுள்ள உருவத்தின் இடது கையிலும் சாமரங்கள் வீசுகின்றனர். வலதுபுறம் உள்ள உருவத்தின் வலது கையிலும், இடதுபுறமுள்ள உருவத்தின் இடது கையிலும் சாமரங்கள் உள்ளன. தீர்த்தங்கரருக்கு நீண்ட காதுகள் உள்ளன. வலது கால் மேலேயும், இடது கால் கீழேயும் இருக்கும்படி சம்மணம் போட்டு அமர்ந்த நிலை. மடியின் மீது வலது கை மேலேயும் இடது கை கீழேயும் உள்ளபடி கோர்த்த நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

மகாவீரர் :

அர்த்தமண்டபத்தில் பீடத்தின் மேல் மகாவீரரின் சிற்பம் வைக்கப்பட்டுள்ளது. பத்ம பீடத்தில் இடது கால் கீழாகவும் வலது கால் மேலாகவும் இருக்கும்படி அமர்ந்த நிலை. முக்குடை உள்ளது. பின்புறம் செடி போல ஒன்று காணப்படுகின்றது. அனேகமாக ஆலமரமாக இருக்கலாம். சாமரம் வீசுபவர்கள் இருபுறமும் அமர்ந்த நிலையில் உள்ளனர். வலது புறமுள்ள உருவம் வலது கையில் சாமரத்தையும் இடது கையால் மலர் போடுவது போலவும், இடது புறமுள்ள உருவம் இடது கையில் சாமரத்தையும் வலது கையால் மலர் போடுவது போலவும் இருக்கின்றன. தீர்த்தங்கரரின் முன் நெற்றியில் உருத்திராட்சக் கொட்டை போல அணிகலன் உள்ளது. வலது கை மேலாகவும், இடது கை கீழேயும் இருக்கும்படி கால்களின் மேல் கோர்த்து வைத்த நிலையில் உள்ளது. பீடத்தில் சிங்க உருவம் காணப்படுகின்றது.

ஆதிநாத தீர்த்தங்கரர் :

முக்குடைக்கு மேலே சிங்க முகத்தின் வாயிலிருந்து வேலைப்பாடுகளுடன் கூடிய மகர தோரணங்கள் இருபுறமும் வருகின்றன. பத்மாசனத்தில் யோகாசன நிலையில் அமர்ந்துள்ள நிலை. தீர்த்தங்கரரின் தலையிலிருந்து கழுத்து வரை அளவேயுள்ள சாமரம் வீசும் ஆட்கள் உள்ளனர். இவ்விரு உருவங்களும் தொடை வரைதான் காட்டப்பட்டுள்ளன. வலது புறமுள்ள உருவத்தின் வலது கை இடையிலும், இடது கையில் சாமரமும் இடதுபுறமுள்ள உருவத்தின்

வலது கையில் சாமரமும், இடது கை இடையிலும் உள்ளன. மார்பில் நீண்ட ஆபரணங்கள் உள்ளன. இரு உருவங்களின் கைகளிலும் வளையங்கள் உள்ளன. வலது புறமுள்ள உருவத்தின் இடது கையிலிருந்தும், இடதுபுறமுள்ள உருவத்தின் வலது கையிலிருந்தும் துணி கீழே தொங்குகின்றது. இவர்களது பின்புறத்துடன் தோரணம் நின்று விடுகின்றது. சிங்கத்தின் வாயிலிருந்து நேர்கீழே முக்குடை உள்ளது. முக்குடைக்கு மேலே கலசம் போல ஒன்று சிறியதாக உள்ளது. முக்குடையில் சிறுசிறு மணிகள் பதிக்கப்பட்டுத் தொங்குகின்றன. தீர்த்தங்கரரின் தலையின் முன்புறம் மழிக்கப்பட்டுப் பின்புறம் தலைமுடி இரு தோள்கள் வரை தொங்குகின்றன. கண்கள் மூடியபடி உள்ளன. புருவங்கள் நன்கு மேலே வளைந்து காணப்படுகின்றன. எடுப்பான நாசி காணப்படுகின்றது. நீண்ட காதுகள் உள்ளன. வயிற்றில் மூன்று கோடுகள் காணப்படுகின்றன. இடையில் ஆடை இல்லை. நிர்வாண நிலை. இருபுறமும் இயக்கன் கோமுகன், இயக்கி சக்கரேஸ்வரி உருவங்கள் சிறிய அளவில் உள்ளன.

இயக்கன் :

மனித உடலும் ரிஷபத்தின் தலையும் கொண்ட உருவம். மொத்தமுள்ள நான்கு கைகளில் பின் வலது கையில் கதையும், இடது கையில் அங்குசமும், முன் வலது கை சிம்மகரணமும் இடது கையில் மலரும் உள்ளன. வலது கால் நேராக ஊன்றி இடது காலை சற்று முன்புறம் வளைத்தபடி நின்ற நிலை. இயக்கனுக்குக் கீழே ரிஷபத்தின் உருவம் உள்ளது.

இயக்கி :

கரண்ட மகுடமும், காதுகளில் பத்ர குண்டலங்களும் உள்ளன. பின்னிரு கைகளில் தாமரை மலர்களும், முன்னிரு கைகளில் வலது கை சிம்ம கரணத்திலும் இடது கையில் மலரும் உள்ளன. மார்புக் கச்சை உள்ளது. வலது காலை சற்று முன்புறம் வளைத்து இடது காலை நேராக ஊன்றி நின்ற நிலை. இயக்கிக்குக் கீழே கழுகின் உருவமுள்ளது.

தீர்த்தங்கரருக்குக் கீழே நந்தி உருவம் வலது பக்கம் பார்த்த நிலையில் உள்ளது.

குஷ்மண்டினி (தர்மதேவி):

இருபத்திரண்டாவது தீர்த்தங்கரரின் இயக்கி. பீடத்தின் மீது நின்ற நிலை. கீரிட மகுடம் உள்ளது. மகுடத்தில் நேமி தீர்த்தங்கரர் உருவம் சிறிய அளவில் உள்ளது. அதற்கு மேல் ஆபரணம் காட்டப்பட்டுள்ளது. காதுகளில் கொட்பு என்ற அணி காணப்படுகின்றன. கழுத்தில் ஆரமும், மாங்கல்யமும் உள்ளன. இரு கைகள் இருக்கின்றன. வலது கையில் தாமரை மலரும், இடது கை டோல ஹஸ்தத்திலும் இருக்கின்றன. முன் கைகளில் நான்கு வளையங்கள் தடித்துக் காணப்படுகின்றன. இடையில் கச்சும், கடிபந்தமும் உள்ளன. இரு தொடைகளின் மீதும் இடைக் கச்சுடன் சேர்ந்த முடிச்சுடன் கூடிய அணிகலன்கள் தொங்குகின்றன. கழுத்திலிருந்து வரக் கூடிய மாலை முழங்கால் வரை தொங்குகிறது. இடுப்பிலிருந்து பாதம் வரை ஆடை உள்ளது. வலது காலுக்கு வெளியே ஆடை நீண்டு உள்ளது. பாதத்தில் பாதரட்சை உள்ளது. பீடம் லிங்கத்திற்கு இருப்பது போலவே பீடம் உள்ளது. பீடத்தில் சிங்க உருவமுள்ளது.

குஷ்மாண்டினியன் சிறிய சிற்பம் ஒன்றும் சமணர் கோயிலிலுள்ளது. பத்ம பீடத்தில் நின்ற நிலை. கிரீட மகுடத்திற்குப் பின்புறம் விரிந்த சடை உள்ளது. மார்பில் அணிகலன் இருக்கின்றன. மார்புக் கச்சை இல்லை. மொத்தம் இரண்டு கைகள் இருக்கின்றன. வலது கை தாமரை மலரைப் பிடித்திருக்கின்றது. இடது கை அருகிலுள்ள ஒரு பெண்ணின் தலைமீது வைக்கப்பட்டு உள்ளது. இடையிலிருந்து பாதம் வரை ஆடை இருக்கின்றது. வலது கால் நேராகவும் இடது கால் சற்று முன் வளைத்தும் நின்ற நிலை. குஷ்மாண்டினிக்கு வலபுறம் சிங்கத்தின் மீது இரு சிறு உருவங்கள் அமர்ந்த நிலையில் காணப்படுகின்றன.

இச்சிற்பத்தைவிட சற்று பெரியதாகக் காணப்படும் மற்றொரு சிற்பம் தலைப்பகுதி இல்லாமல் வெளியில் இருக்கின்றது.

புலவர்களின் சிற்பங்கள் :

சமணக் கோயிலிலே புலவர்களின் சிற்பங்கள் ஐந்து உள்ளன. அச்சிற்பங்களின் இடது கைகளில் ஓலைச்சுவடி காணப்படுகின்றது. இச்சிற்பங்களில் ஒன்று பெரியதாகவும் மற்றவைகள் சற்று சிறியதாகவும் உள்ளன. இச்சிற்பங்களைத் தவிர பெண்ணின் சிற்பமும் ஒன்று

உள்ளது. பெரிய சிற்பத்தைக் கொங்கு வேளிரென்றும், மற்றவற்றைப் புலவர்கள் என்றும், பெண் சிற்பத்தை கொங்கு வேளிரின் அடிமைப் பெண் என்றும் அறிஞர்கள் கூறுகின்றனர்.

கொங்கு வேளிர் :

சிறிய பீடத்தில் பத்மாசனம் நிலையில் அமர்ந்த நிலையில் காணப்படும் சிற்பம். தலையின் முடிகள் மழிக்கப்பட்டு, மணிகளால் ஆன அணி முன்நெற்றியில் கட்டப்பட்டுள்ளது. தோள்கள் வரை காதுகள் நீண்டு தொங்குகின்றன. காதுகளில் கொப்பு என்ற அணி உள்ளது. கொப்பிலிருந்து அணிகள் ஆரம்பித்து இரு கைகளின் தோள்கள் வரைச் செல்கின்றன. இதற்கு 'ஷிகி' என்ற பெயர் என கோயில் அர்ச்சகர் கூறினார். புருவங்கள் நன்கு உயரமாக உள்ளன. இரு புருவங்களுக்குமிடையில் நெற்றியில் திலகம் உள்ளது. கழுத்து, மார்பு முதலியவற்றில் சிறுமணிகள் கோர்க்கப்பட்ட அணிகள் தொங்குகின்றன. இடுப்பைச் சுற்றியும் மணிகளாலான ஆபரணம் கட்டப்பட்டுள்ளது. இரு கைகளிலும் வாகுவளையம் உள்ளது. இடது முன் கையில் வளையம் உள்ளது. பெருவிரலும், ஆட்காட்டி விரலும் ஆணியைப் பிடித்துள்ளன. மற்ற விரல்கள் மேல்நோக்கி நீட்டப்பட்டுள்ளன. இடது உள்ளங்கையில் ஓலைச் சுவடி உள்ளது. முப்புரிநூல் இடது கை தோளிலிருந்து மார்பு வழியாக வந்து கைக்குக் கீழ் செல்கிறது. இடையில் ஆடை இருக்கிறது. இடது கால் கீழேயும் வலது கால் மேலேயும் உள்ள சிலையில் சம்மணம் இட்ட நிலை. வலது உள்ளங்காலில் தாமரை வடிவம் காணப்படுகிறது.

மற்றைய நான்கு புலவர்களின் சிற்பங்களும் அமர்ந்த நிலையில் உள்ளன. ஆடைகள் மடிப்புகளுடன் காணப்படுகின்றன. இரு உள்ளங்கால்களிலும் தாமரை மலர் போன்ற வடிவம் உள்ளது. மற்றவை அனைத்தும் கொங்கு வேளிருக்கு இருப்பதைப் போன்ற அமைதியே காணப்படுகின்றன.

அடிமை மாது :

இடது கால் நேராகவும் வலது கால் சற்று முன்புறம் வளைத்து ஊன்றி நின்ற நிலை. தலைமுடி பின்புறமாகச் சீவப்பட்டுப் பிறகு குடுமியாக இடது தோளில் தொங்குகின்றது. தலையில் வலது புறத்தில் பிறைச் சந்திரனும், இடது புறத்தில் சூரியனும் உள்ளன. ஒருவேளை

இவைகள் தலையில் சூட்டப்படும் அணிகளாகவும் இருக்கலாம். தலையின் நடுவிலிருந்து வரும் அணி நெற்றியில் தொங்குகிறது. நெற்றியில் திலகம் காணப்படுகின்றது. காதுகளில் மூன்று வளையங்களாக உள்ள அணி இருக்கின்றது. மொத்தமுள்ள இரு கைகளில் வலது கை அபய ஹஸ்தத்திலும், இடது கை டோல ஹஸ்தத்திலும் உள்ளன. கைகளில் வாகு வளையமும், முன் கை வளையமும் தடித்துக் காணப்படுகின்றன. வலது உள்ளங்கையில் தாமரை வடிவம் இருக்கிறது. கழுத்திலும் மார்பிலும் சிறு மணிகள் கோர்க்கப்பட்ட அணிகலன்கள் தொங்குகின்றன. மார்புக் கச்சை இல்லை. இடையிலிருந்து பாதம் வரை ஆடை தொங்குகின்றது. இரு கால்களுக்கு வெளிப்புறம் ஆடை விரிந்த நிலையில் காணப்படுகின்றது.

சீயகங்கன் :

சமணர் கோயிலில் அரசனைப் போன்ற உருவமுடைய சிற்பம் ஒன்றுள்ளது. அச்சிற்பம் சீயகங்கன் ஆகும் என்று கருதுகின்றனர். இடது காலை நேராக ஊன்றி வலது காலை சற்று முன்புறம் வளைத்து நின்ற நிலை. தலையில் முடி இல்லை. சிறியதாக நெற்றி உள்ளது. அதில் திலகம் காணப்படுகிறது. எடுப்பான நாசி உள்ளது. வலதுகை அபய ஹஸ்தத்திலும் உள்ளங்கையில் தாமரை வடிவமும், இடது கை டோல ஹஸ்தத்திலும் உள்ளன. இடையில் இடைக் கச்சு உள்ளது. இடைக் கச்சையிலிருந்து துணி இடது காலின் மீது தொங்குகின்றது.

பவணந்தி முனிவர் :

இக்கோயிலிலுள்ள முனிவரின் சிற்பத்தை பவணந்தி முனிவரின் உருவம் என்று குறிக்கின்றனர். சிறிய பீடத்தில் சமணம் போட்டு அமர்ந்த நிலை. தலை மழிக்கப்பட்டுள்ளது. குறுகிய நெற்றி. அதில் திலகம் உள்ளது. மூக்கும் நெற்றியும் சேருமிடத்தில் சற்றுக் குழியாக உள்ளது. நீண்ட காதுகள் இருக்கின்றன. ஆடை இல்லை. வலது கையில் எழுத்தாணியும், இடது கையில் ஓலைச் சுவடியும் உள்ளன. வலது உள்ளங்கையிலும், காலிலும் தாமரை மலர் வடிவம் உள்ளது.

முக மண்டபத்தின் உத்தரத்தில் தென், வட திசைகளில் இருந்து நான்கு தீர்த்தங்கரர்களின் உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாக இருக்கின்றன. மற்ற இரு பக்கங்களிலும் யானை, சிம்மம், யாளி முதலிய உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாக உள்ளன.

மகாமண்டபத்து உத்திரத்தில் ஆதிநாதரின் வரலாறு புடைப்புச் சிற்பங்களாக உள்ளன. திருமணம், கர்ப்பம், வளைகாப்பு, ஜனனம், குளித்தல், தீட்சை பெறுதல் முதலியனவும், இந்திரன், அக்னி, எமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் முதலிய திக்பாலகர்கள் தங்கள் வாகனங்களுடன் காட்சியளிக்கும் புடைப்புச் சிற்பங்களும் உள்ளன.

விஷ்ணு கோயில் கருவறையிலுள்ள வரதராஜப் பெருமான், ஸ்ரீதேவி, பூதேவி சிற்பங்களும் உள்ளன.

வரதராஜப் பெருமான் :

பீடத்தின் மீது நின்ற நிலை. தலையில் கிரீட மகுடம். காதுகளில் மகர குண்டலங்கள் உள்ளன. நெற்றியில் தடித்த ஆபரணம் காணப்படுகின்றது. மார்பின் மேல் மூன்று பதக்கங்கள் கோர்க்கப்பட்ட அணிகலன் தொங்குகின்றது. நான்கு கைகள் உள்ளன. பின் வலது கையில் சக்கரமும் இடது கையில் சங்கும், முன் வலது கை அபய ஹஸ்தத்திலும் இடது கை கதையைப் பிடித்துள்ள நிலையிலும் காணப்படுகின்றன. கைகளில் கேயூர பந்தமும், முன் கைகளில் தடித்த வளையங்களும் உள்ளன. விரல்களில் மோதிரங்கள் இருக்கின்றன. யக்ஞோபவிதம் மார்பின் குறுக்கே வந்து வலது கைக்குக் கீழாகச் செல்கிறது. இடைக் கச்சும் அதில் சிம்ம முக கடிபந்தமும் உள்ளன. பாதம் வரை நீண்ட பீதாம்பர ஆடை உள்ளது. பாத வளையம் காணப்படுகின்றது.

ஸ்ரீதேவி :

வரதராஜப் பெருமானுக்கு வலது புறத்தில் ஸ்ரீதேவியின் சிற்பம் உள்ளது. திரிபங்க நிலையில் நிற்கும் தோற்றம். கரண்ட மகுடமும், காதுகளில் பத்ர குண்டலங்களும் உள்ளன. நெற்றியிலும், கழுத்திலும் அணிகலன்கள் இருக்கின்றன. இரு கைகளில் வலது கை டோல ஹஸ்தத்திலும், இடது கையில் தாமரை மலரும் இருக்கின்றன. கேயூர பந்தமும், முன் கைகளில் மூன்று வளையங்களும் உள்ளன. விரல்களில் மோதிரங்கள் காணப்படுகின்றன. இடைக் கச்சும், சதுரமான கடிபந்தமும் உள்ளன. பாதம் வரை வரிவரியாக ஆடை உள்ளது. பாதங்களின் மேல் பாத வளையங்கள் காணப்படுகின்றன. கழுத்திலிருந்து தொங்கும் நீண்ட அணி மார்புகளுக்கிடையே வந்து கீழே இருபக்கமும் செல்கிறது.

பூதேவி :

திரிபங்க நிலை. கரண்ட மகுடம் உள்ளது. ஸ்ரீதேவியை விட சற்று பெரிய மகுடம். காதுகளில் மகர குண்டலங்கள் இருக்கின்றன. மார்புக் கச்சை இல்லை. இரு கைகளில் வலது கையில் அல்லி மலரும் இடது கை டோல ஹஸ்தத்திலும் இருக்கின்றன. கைகளில் கேயூர பந்தமும், முன் கை வளையம். தடித்தும் காணப்படுகின்றன. யக்ஞோபவிதம் மார்புகளுக்கிடையே செல்கிறது. இடைக்கச்சை இருக்கிறது. பாதங்கள் வரை ஆடை உள்ளது. பாதங்களின் மேல் அணிகலன் உள்ளது.

கி.பி. 15-ஆம் நூற்றாண்டு சிற்பமான சுப்பிரமணியர் சிவன் கோயிலில் தெற்கு பார்த்த நிலையில் சிறிய கருவறையில் உள்ளது. சுப்பிரமணியர் தெற்கு பார்த்த நிலையில் இருப்பது ஒரு சிறப்பான அம்சமாகும் என்று அங்குள்ளவர்கள் கூறுகின்றனர். கருவறைக்குள் இருக்கும் சிற்பத்தை மிக அருகில் சென்று பார்க்க முடியவில்லை.

மயில் மீது இடது காலை மடித்து வைத்து வலது காலை தொங்கவிட்டு அமர்ந்த நிலை. மயில் இடது காலை முன் வைத்து கிழக்கு பார்த்து நிற்கின்றது. அதன் வாயில் பாம்பு உள்ளது. பிரபையும், மயிலும் பத்ர பட்டத்திற்கு மேலுள்ள பீடத்தில் உள்ளன. சுற்றிலும் பிரபா மண்டலமும் அதன் நடுவில் தாமரைப் பூ (யாளி?) உள்ளது. மொத்தம் ஆறு முகங்களும், கிரீடமும் உள்ளன. முன் முகத்தின் காதுகளில் பத்ர குண்டலங்கள் இருக்கின்றன. கழுத்தில் உத்ராட்ச மாலை உள்ளது. மொத்தம் பன்னிரண்டு கைகள் உள்ளன. கைகளில் கேயூரமும், முன் கைகளில் வளையங்களும் உள்ளன. மேல் வலது இடது கைகளில் சக்தியும், அதற்கடுத்து கீழுள்ள வலது கையில் அம்பும் இடது கையில் வில்லும், அதற்கடுத்து உள்ள வலது கையில் கத்தியும் இடது கையில் கேடயமும், அதற்கடுத்து கீழுள்ள வலது கையில் இருப்பது என்னவென்று தெரியவில்லை. இடது கையில் நீளமான தடி போன்றும், அதற்கு கீழுள்ள வலது கையில் மழு அல்லது கோடாரியும் இடது கையில் (கொக்கி போன்றுள்ளது) இருப்பது தெரியவில்லை. முன்புறமுள்ள இரு கைகளில் வலது கை அபய ஹஸ்தத்திலும் இடது கை வரத ஹஸ்தத்திலும் உள்ளன. முப்புரிநூல் உள்ளது. கடிபந்தம் காணப்படுகின்றது. முழங்கால் வரை ஆடையும், அதற்குக் கீழே காலைச்சுற்றி கட்டியபடி காணப்படும் அணியும் உள்ளன.

சுப்பிரமணியரின் வலது புறத்தில் வள்ளியின் சிற்பம் உள்ளது. திரிபங்க நிலையில் வலது இடது கைகளில் முறையே டோல ஹஸ்தமும், மலரும் உள்ளன.

சிவன் கோயிலில் காணப்படும் துவார பாலகர்கள், பைரவர், சண்டிகேஸ்வரர், தட்சிணாமூர்த்தி முதலிய சிற்பங்களும், விஷ்ணு கோயிலிலுள்ள கருடன் சிற்பமும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவைகளாகும்.

துவாரபாலகர்கள் :

வலதுபுறம் உள்ள சிற்பம் :

நின்ற நிலை, ஜடா மகுடமும், மகுடத்தின் உச்சியில் சிம்ம முகம் போலவும் உள்ளன. நீண்ட காதுகளும், பத்ர குண்டலங்களும் இருக்கின்றன. கண்களை மூடியபடி இருக்கும் காட்சி. எடுப்பான மூக்கும், சிறிய இதழ்களும் உள்ளன. கழுத்து மார்பு பகுதிகளில் இரு மணிகள் பதித்த மாலைகளும் கழுத்து அணியிலிருந்து பதக்கம் ஒன்றும் தொங்குகின்றன. யக்ஞோபவிதம் தடித்து மேலிருந்து இடுப்பு வரை சென்று பின் வலதுபுறம் செல்கிறது. உதர பந்தம் தடித்துக் காணப்படுகின்றது. மொத்தமுள்ள நான்கு கைகளில் பின் வலது கையில் மழுவும், இடது கையில் மானும், முன் வலது கை கஜ ஹஸ்த நிலையிலும், இடது கை சுட்டு விரலை நீட்டி அச்சுறுத்தும் நிலையிலும் உள்ளன. தடித்த கேயூர பந்தமும், முன் கைகளில் இரு புறமும் சிறு மணிகள் கோர்க்கப்பட்ட தடித்த வளையங்களும் இருக்கின்றன. முன் வலது கை சந்தன விரலிலும் சுண்டு விரலிலும், முன் இடது கை பெரு விரலிலும் மோதிரங்கள் உள்ளன. இடைக் கச்சமும், அதிலுள்ள மணிகள் வலது கால் தொடையிலும் தொங்குகின்றன. தொடைகள் வரை ஆடை உள்ளது. இடது காலை நேராக ஊன்றி வலது காலை இடப்புறமிருக்கும் கதையிலுள்ள பாம்பின் மீது வைத்தபடி நின்ற நிலை. கழுத்திலிருந்து வரும் நீண்ட ஆபரணம் இடது கால் முழங்காலின் மீது உள்ளது. இடது காலில் பாதத்திற்கு மேலே தடித்த வளையமும், பாதத்தின் மீது நீண்ட வளையமும் உள்ளன. வலது முழங்காலுக்குக் கீழே மணிகள் கோர்க்கப்பட்ட சிறு வளையமும் அதிலிருந்து பெரியதாக தொங்கும் ஒரு மணியும் உள்ளது. பாதத்திற்கு மேலே பெரிய வளையமும், பாதத்தின் சிறுமணிகள் கோர்க்கப்பட்ட நீண்ட வளையமும் உள்ளன. கதை இடதுபுறம், துவாரபாலகரின்

வலது உள்ளங்கையால் அழுத்திப் பிடித்தபடி உள்ளது. மேலே சிறியதாக ஒரு பாம்பும் கீழே பெரியதாக ஒரு பாம்பும் சுற்றப்பட்டிருக்கிறது. கீழேயுள்ள பாம்பின் தலைமீது துவாரபாலகரின் வலது கால் உள்ளது. கதைக்கும் பின்புறம் இடதுபுறம் பார்த்தபடி வாலைத் தூக்கிக் கொண்டு சிங்கம் உள்ளது.

இடதுபுற துவாரபாலகர் :

நீண்ட மகுடமும், காதுகளில் பத்ர குண்டலங்களும் இருக்கின்றன. மற்ற அனைத்து அம்சங்களும் வலதுபுறமுள்ள துவார பாலகருக்கு இருப்பதைப் போன்றே அமைந்துள்ளன. மொத்தமுள்ள நான்கு கைகளில் பின் வலது கையில் சூலமும், இடது கையில் உடுக்கையும், முன் வலது கை கதையைப் பிடித்தும் இடது கை அச்சுறுத்தும் பாவனையிலும் உள்ளன. வலது காலை நேராக ஊன்றி இடது காலை கதையின் கீழே சுற்றப்பட்டுள்ள பாம்பின் தலைமீது வைத்தபடி நிற்கும் தோற்றம். நீண்ட மாலை கழுத்திலிருந்து வலது முழங்கால் மீது தொங்குகின்றது. துவாரபாலகருக்கு வலது புறத்திலுள்ள கதை வலது கையால் பிடித்தபடி உள்ளது. கதையின் மேலேயும் கீழேயும் பாம்பும் சுற்றப்பட்டுள்ளது. அதன் நடுவில் மணிகள் சுற்றிக் கட்டப்பட்டுள்ளன. சிங்கம் வலது புறம் பார்த்தபடி உள்ளது.

தட்சிணாமூர்த்தி :

ஆலமரத்துச் செல்வர். ஆலமரத்தினடியில் அமர்ந்த நிலை. விரிந்த சடை. நெற்றியில் யோக பட்டம் கட்டப்பட்டுள்ளது. வலது காதில் மகர குண்டலமும், இடது காதில் பத்ர குண்டலமும் இருக்கின்றன. யக்ஞோபவிதம் உள்ளது. நான்கு கைகள் இருக்கின்றன. பின்னிரு கைகளில் இடது கையில் அக்னியும், முன்னிரு கைகளின் வலது கை சின் முத்திரையிலும், இடது கையில் புத்தகமும் உள்ளன. இடது கால் மடித்தும், வலது கால் முயலகன் மீது ஊன்றியும் காணப்படுகின்றது. இடது கால் விரல்களை கீழுள்ள நந்தி நாவினால் தடவுவது போல உள்ளது. கீழே முனிவர்கள் அமர்ந்துள்ளனர். முயலகன் வலது கையில் பாம்பைப் பிடித்துக் கொண்டு தலையை இடது புறம் திரும்பிப் பார்ப்பது போல இருக்கின்றது.

பைரவர் :

திருச்சுற்று மாளிகையில் கருவறைக்குப் பின்புறம் மேற்கு திசையைப் பார்த்தபடி பைரவரின் சிற்பம் உள்ளது. பத்ர பீடத்தில்

நின்ற நிலை. ஜ்வாலா முடி இருபுறமும் நன்கு விரிந்துள்ளது. காதுகளில் பத்ர குண்டலங்கள் உள்ளன. கழுத்தில் மணிகள் கோர்க்கப்பட்ட மாலையும் அதனுடன் சேர்ந்த பதக்கம் நெஞ்சிலும் தொங்குகின்றது. பெரிய மணிகளாலான நீண்ட மாலை மார்புக்குக் கீழே தொங்குகின்றது. உதர பந்தம் இருக்கின்றது. வயிற்றுப் பாகம் சற்று பெரியதாகவும் உருண்டையாகவும் உள்ளது. மொத்தம் நான்கு கைகள். மேலிரண்டு கைகளில் வலது புறம் பாம்பும் இடது புறம் உடுக்கையும், கீழிரண்டு கைகளில் சூலம் வலது கையிலும் கபாலம் இடது கையிலும் உள்ளன. இடையில் ஆடை இல்லை. நான்கு பெரிய மணிகள் கோர்க்கப்பட்ட இடையணி உள்ளது. அதிலிருந்து மணிகளுடன் கூடிய நீண்ட மாலை இரு முழங்கால்களுக்கும் மேலே கால்களை நன்கு அழுத்திக் கொண்டு தொங்குகின்றன. முழங்கால்கள் புடைத்துக் கொண்டுக் காணப்படுகின்றன. பைரவருக்கு வலது பக்கம் பார்த்தபடி பின்புறம் நாய் உள்ளது. பின்னிரு கால்களை நேராக ஊன்றி முன் வலது காலை கொஞ்சம் முன் வைத்து முன் இடது காலை நேராக ஊன்றியுள்ளது. காதுகள் நேராக நிமிர்ந்தும், வால் முன்புறமாகச் சுருண்டும் காணப்படுகின்றன.

சண்டிகேசுவரர் :

பத்ர பீடத்தில் இடது காலை மடக்கி வலது காலை தொங்கவிட்டு அமர்ந்த நிலை. வலது கையில் மழுவும், இடது கை தொடைமீது வைத்தும் உள்ளன. பாதம் வரை ஆடை உள்ளது.

கருட பகவான் :

திருமால் கோயிலில் மேற்கு பார்த்தபடி பலி பீடத்திற்கு முன்னுள்ள சிறிய அறையில் கருடனின் சிற்பம் உள்ளது. சிறிய பீடத்தில் அமர்ந்த நிலை. தலையில் கிரீட மகுடம். கோரைப் பற்கள் காணப்படுகின்றன. கைகளுடன் சேர்ந்த நிலையில் விரிந்த இறக்கைகள் உள்ளன. கழுத்தில் பாம்பு மாலையாகச் சுற்றப்பட்டுள்ளது. அஞ்சலி ஹஸ்தத்தில் இரு கைகள் உள்ளன. முன் கைகளில் பாம்புச் சுற்றப்பட்டுள்ளது. கை விரல்களில் மோதிரம் காணப்படுகின்றன. இடைக்கச்சு பின்னலாகக் காட்டப்பட்டுள்ளது. தொடை வரை ஆடை காணப்படுகின்றது. இடது காலின் மீது வலது காலை வைத்து சம்மணம் போட்டு அமர்ந்த நிலை. வலது கால் பெரு விரலில் மெட்டி உள்ளது. கால் நகங்கள் நீண்டு கூர்மையாகக் காணப்படுகின்றன.

விமானச் சிற்பங்கள் :

விஜயமங்கலத்திலுள்ள கோயில்களில் காணப்படும் விமானச் சிற்பங்கள் அனைத்தும் சுதையால் ஆகியவை. இப்பொழுது பல சிற்பங்கள் சிதைந்து காணப்படுகின்றன. இச்சிற்பங்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவைகளாகும்.

இவைகளைத் தவிர இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த சிவன் கோயிலிலுள்ள அம்மன் சிற்பமும், அறுபத்து மூவர் நாயன்மார்கள், சகஸ்ரலிங்கம், விநாயகர், முருகன் சிற்பங்கள் முதலியனவும் திருமங்கையாழ்வார், இராமானுஜர், அனுமன் முதலிய சிற்பங்களும் உள்ளன.

நடுகற்கள் :

இறந்துபட்ட வீரர்களுக்கு ஈமக்கடன் ஈந்து கல் நட்டு வழிபடுவது பண்டைய தமிழ் மரபு. இவ்வாறு நடப்பட்ட கற்களையே நடுகல் என்று பொதுப்படையாக அழைக்கின்றோம். பெரும்பாலும் நடுகற்கள் ஊர்களின் புறத்தேதான் காணப்படுகின்றன. நடுகற்களில் வீரனுடைய உருவம் சமர்புரியும் நிலையில் காண்பிக்கப்பட்டிருக்கும். புலிகளிடமிருந்து ஊரையோ, உடைமையையோ, காத்தபோது வீழ்ந்த வீரனுக்கு எடுத்த நடுகற்களுமுண்டு. அவற்றில் வீரன் ஒரு புலியோடு சண்டையிடுவது காண்பிக்கப்பட்டிருக்கும். மேலும் அந்நடுகல்லில் புலிகுத்திப்பட்டான் என்று எழுதியிருக்கும்

இலக்கியங்களில் நடுகற்கள் :

தொல்காப்பியம்,

“காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தலென்று
இருமூன்று மரபிற் கல்லொடு புணர”

என்று நடுகல்லைப் பற்றிக் குறிக்கின்றது. சிலப்பதிகாரம் பத்தினியர்க்கு எடுக்கப்பட்ட நடுகல் ‘மாசதிக்கல்’ என்று வழங்கப்படும் எனக் குறிக்கின்றது. நடுகற்களைச் சுற்றி அரணாக வேல் நடப்பட்டிருக்கும் என்று பட்டினப்பாலை கூறுகிறது. புலியுடன் போரிட்டு இறந்த மறவனுக்கு எடுக்கப்பட்ட நடுகல்லைப் பற்றியும் புறப்பொருள் வெண்பாமாலை குறிக்கின்றது.

வள்ளுவனாரும் திருக்குறளில்,

"என்னைமுன் நில்லன்மின் தெவ்வீர் பலரென்னை
முன்நின்று கல்நின் றவர்"

என்று நடுகல்லைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

கொங்கு நாட்டில் நடுகற்கள் :

தமிழகத்தில் கிடைக்கும் நடுகற்களிலேயே மிகப் பழமையான நடுகற்கள் இரண்டு கொங்கு நாட்டில்தான் கிடைத்துள்ளன. தருமபுரி மாவட்டம் இருளப்பட்டி எனுமிடத்தில் கிடைத்த இரு நடுகற்கள் கி.பி. 5-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. மேலும் நடுகற்களிலேயே வெண்பாவுடன் காணப்படுவதும் கொங்கு நாட்டில்தான். ஈரோடு மாவட்டம் பழமங்கலம் எனும் ஊரில் கிடைத்த நடுகல்லில் அழகிய வெண்பா உள்ளது.

"வாய்ந்த புகழ் மங்கலத்து
வந்தெதிர்ந்த மாற்றலரை
சாய்த்த மகன் வென்ற
சயம் பெருக நீக்குவணம்
கற் பொறிக்கப் பட்டான்
கரையகுல சொக்க னேந்தலே
உலகிற் காண்."

என்று அந்நடுகல்லில் காணப்படுகின்றது. கொங்கு நாட்டில் இன்றும் நடுகல் வழக்கம் உள்ளது. இங்குள்ள தொட்டிய நாயக்கர்கள் இன்றும் இறந்தபின் 'கல்நாட்டுதல்' என்ற சடங்கினைச் செய்கின்றனர். வேளாளர் திருமண நிகழ்ச்சிகளில் நடுகல் வழிபாடு (நாட்டுக்கல்) இன்றுமுண்டு. கொங்கு நாட்டில் உள்ள இராசா, அண்ணன்மார் அப்பிச்சிமார், குப்பியண்ணன், கருப்பணன் கோயில்கள் அனைத்தும் நடுகல்லுக்கு எடுக்கப்பட்ட கோயில்களே. கோவை மாவட்டத்தில் மொத்தம் இருபத்திரண்டு ஊர்களில் நடுகற்கள் உள்ளன. 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நடுகற்கள் கையில் துப்பாக்கியுடனும், அருகில் புலியுடனும் காணப்படுகின்றன. இவைகள் சேலம் மாவட்டம் மல்லசமுத்திரம் என்ற ஊரிலும், கோவை மாவட்டம் வெள்ளகோவில் என்ற ஊரிலும் உள்ளன.

விஜயமங்கலத்து நடுகற்கள் :

இங்குள்ள சமணர் கோயில் தூண் கல்வெட்டில் "ஸ்ரீசாமுண்டராயன் தங்கை புளியம்மை நிசீதிகைக் கல்" என்ற சொற்றொடர் வருகின்றது. சமண மதத்தைச் சார்ந்தவர்கள் சல்லேகனை விரதமிருந்து உயிர்நீத்தால் அவர்கள் நினைவாக நிசீதிகைக் கல் என்ற நினைவுக் கல்லை நடுவர். இக்கோயிலுள் உள்ள ஒரு தூணில் மேலே மகாவீரரும், கீழே சமணமதப் பெண்மணியின் உருவமும் உள்ளன. அதே தூணில்தான் அக்கல்வெட்டு உள்ளது. கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

ஈரோட்டில் நாச்சிமுத்து என்பவர் உள்ளார். புலிக்குத்தி நாச்சிமுத்து என்று பெயர். அவர் முன்னோர் ஒருவர் விஜயமங்கலப் பகுதியில் ஊர் மக்களைக் காப்பாற்ற புலியைக் குத்திக் கொன்று தானும் இறந்தாராம். வீட்டு எல்லைக்குள்ளேயே நடுகல் உள்ளது.

⌘⌘⌘

செப்புத் திருமேனிகள்

செம்பில் சிறந்த உருவங்களைப் படைக்கும் கலை சங்ககாலத்திலிருந்தே சிறந்து வந்திருக்கிறது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. ஆதிச்சநல்லூர் என்ற இடத்தில் அகழ்வாய்வில் செம்பாலான பல பொருட்கள் கிடைத்திருக்கின்றன. அவற்றில் 'அன்னை தெய்வம்' ஒன்றின் உருவம் கிடைத்துள்ளது. அதுதான் இதுகாறும் கிடைத்துள்ளவற்றில் மிகவும் தொன்மையானது.

கொங்கு நாட்டுச் செப்புத் திருமேனிகள் :

சோழர் கால செப்புத் திருமேனிகளுக்கு ஈடாக கொங்கு நாட்டிலும் செப்புத் திருமேனிகள் உள்ளன. கோவை மாவட்டம் சிங்காநல்லூர் என்னும் ஊரில் உலகளந்த பெருமானின் செப்புத் திருமேனி ஒன்றுள்ளது. இது மிகவும் எழில் வாய்ந்தது. கல்லில் திரிவிக்ரம மூர்த்தியை எவ்வாறு படைத்தனரோ அதே போன்று செம்பிலும் வடிக்கப்பட்டுள்ளது. இதன் உருவ அமைதியும் வடிவும் நாமக் கல்லிலுள்ள திரிவிக்ரமர்சிலையை நினைவுபடுத்துகின்றது. இது கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. நாயன்மார்களால் பாடப்பட்ட திருப்பாண்டிக் கொடுமுடியில் வீரநாராயணப் பெருமாள் கோயிலில் உள்ள திருமாலின் செப்புத் திருமேனியும் 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இந்திய நாட்டுத் திருமால் செப்புத் திருமேனிகளிலேயே ஈடு இணையற்றது, கொடிமுடி திருமால் திருமேனியே என லண்டன் மாநகர் பிரிட்டிஷ் பொருட்காட்சி சாலையின் இந்தியப் பிரிவுத் தலைவர் டக்லிஸ்பரட் என்பவரும் நியுயார்க் மெட்ரோபாலிட்டன் மியூசியம் பத்திரிகையில் ஆஸ்வின் லிப்பே என்ற அமெரிக்கரும் இன்னும் பிற உலகக் கலை வல்லுநர்களும் இதைப் புகழ்ந்து எழுதியுள்ளனர். இதன் பின்னர் உலக கலை வரலாற்று நூல்களின் கொங்கு நாட்டிலும் தனித்ததொரு கலை, உலகப் புகழ்மிக்க கலை இருக்கிறது என்பதை உலக வல்லுநர்கள் ஏற்றுக்கொண்டதோடன்றி இப்பொழுது கொங்கு நாட்டுக் கலை என்றே பெயரிட்டு எழுதி வருகின்றனர். கல்லில்

வடித்த சிலைகளும், செம்பில் வடித்த செல்வங்களும் கொங்கு நாட்டிலும் உண்டு என்பதற்கு நாமக்கல்லும், கொடுமுடியும் எடுத்துக்காட்டுகள் ஆகும்.

விஜயமங்கலத்துச் செப்புத் திருமேனிகள்

விஜயமங்கலத்தில் 15-ஆம் நூற்றாண்டு முதல் 17-ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலத்திய செப்புத் திருமேனிகள் இருக்கின்றன.

கேவல சந்திரசேகரர் :

கி.பி. 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த செப்புத் திருமேனியாகும். பதும பீடத்தில் கால்களை நேராக ஊன்றி நின்ற நிலை. தலையில் ஜடாமுடி காணப்படுகின்றது. தலையில் இடப்புறத்தில் சந்திரன் பிறை வடிவத்திலும், வலப்புறத்தில் கங்கா தேவியின் சிறிய உருவம் வணங்கியபடியும் உள்ளன. வலது காது சற்று நீண்டவாறு உள்ளது. காதுகளில் பத்ர குண்டலங்கள் இருக்கின்றன. மொத்தம் நான்கு கைகள் உள்ளன. பின் வலது கையில் மழுவும், இடது கையில் மானும், முன் வலது இடது கைகள் முறையே அபயம், வரதம் ஹஸ்தங்களில் உள்ளன. கைகளில் வாகுவளையமும், முன்கை வளையங்களும் உள்ளன. கழுத்து, மார்பு முதலியவற்றில் அணிகலன்கள் காணப்படுகின்றன. மார்புப் பகுதியில் முடிச்சுடன் கூடிய முப்புரிநூல் மார்பின் குறுக்கே செல்கிறது. மார்புக்குக் கீழே உதரபந்தம் உள்ளது. வேலைப்பாட்டுடன் கூடிய இடைக்கச்சும், கடிபந்தமும் உள்ளன. இடைக்கச்சிலிருந்து ஆபரணங்கள் தொடைகளின் மீது தொங்குகின்றன. தொடைகள் வரை ஆடை உள்ளது.

பார்வதி :

இச்செப்புத் திருமேனியும் கி.பி. 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. பதும பீடத்தில் வலது காலை நேராக ஊன்றி இடது காலை முன்புறம் வளைத்து நின்ற நிலை. தலையில் கரண்ட மகுடம், காதுகளில் மகர குண்டலங்கள், கழுத்து, மார்பு முதலிய இடங்களில் அணிகலன்கள் இருக்கின்றன. மார்புக் கச்சை இல்லை. முப்புரிநூல் வலதுபுறமாகச் செல்கிறது. இரு கைகளில், வலது கை தாமரை மலரை பிடித்திருக்கின்றது. இடது கை டோல ஹஸ்தத்தில் இருக்கிறது.

கைகளில் வாகு வளையம், முன் கைகளில் வளையம் முதலியன உள்ளன. இடைக் கச்சமும், அதில் கடிபந்தமும் காணப்படுகின்றன. பாதம் வரை நீண்ட ஆடை. இடைக்கச்சிலிருந்து முடிச்சுடன் கூடிய துணி கால்களுக்கிடையே முழங்கால் வரை தொங்குகின்றது. வலது காலில் தண்டை (சிலம்பு) உள்ளது.

சிவகாமி :

நின்ற நிலையில் செப்புத் திருமேனி உள்ளது. கரண்ட மகுடமும், காதுகளில் மகர குண்டலங்களும் உள்ளன. நெஞ்சில் அணிகலன் இருக்கின்றது. முப்புரிநூல் வலது புறமாக செல்கிறது. மார்பின் கை டோலஹஸ்தத்திலும் உள்ளன. இடைக்கச்சையும், கடிபந்தமும் காணப்படுகின்றன. பாதம் வரை நீண்ட ஆடை உள்ளது. இரு கால்களுக்கு நடுவே நீண்ட ஆபரணம் பாதம் வரை வருகின்றது. காலில் சிலம்பு இருக்கிறது.

மேலும் சிவன் கோயிலில் 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த விஷ்ணு, ஸ்ரீதேவி, பூதேவி, முதலிய செப்புத் திருமேனிகள் இருக்கின்றன. இவைகள் முன்பு விஷ்ணு கோயிலில் இருந்ததாகவும், அங்கு போதிய பாதுகாப்பு இல்லாததால் சிவன் கோயிலில் அத்திருமேனிகளை வைத்திருப்பதாக கோயில் அர்ச்சகர்கள் கூறினர்.

திருமால் :

பதும பீடத்தில் இரு கால்களையும் நேராக ஊன்றி நின்ற நிலை, கிரீட மகுடமும், பின்புறம் சக்கரமும் காணப்படுகின்றன. காதுகளில் கொம்பு என்ற அணி உள்ளது. காதுகளிலிருந்து இருதோள்கள்வரை அணிகள் தொங்குகின்றன. முப்புரி நூல் மார்பில் முடிச்சுடன் உள்ளது. வலது மார்பில் ஸ்ரீவத்ஸம் காணப்படுகின்றது. மொத்தம் நான்கு கைகள் உள்ளன. பின் வலது கையில் சக்கரமும் இடது கையில் சங்கும், முன் வலது கை அபய ஹஸ்தத்திலும், இடது கை சிம்ம கரணத்திலும் உள்ளன. கைகளில் வாகு வளையம், முன் கை வளையம் காணப்படுகின்றன. இடையில் இடைக்கச்சும் அதில் சிங்க முகத்தைப் போன்ற கடி பந்தமும் உள்ளன. பாதம் வரை பீதாம்பர ஆடை தொங்குகின்றது. இடைக்கச்சுடன் இணைக்கப்பட்ட அணிகலன்கள் தொடைகளில் தொங்குகின்றன.

இருபுறமும் பீதாம்பரத் துணி முடிச்சு போட்டு கீழே தொங்குகிறது. கால்களில் தண்டைகளும், பாதங்களின் மேல் வளையமும் இருக்கின்றன.

ஸ்ரீதேவி :

பதும பீடத்தில் வலது காலை நேராக ஊன்றி இடது காலை முன் வளைத்து வைத்து திரிபங்க நிலையில் சற்று இடது புறம் சாய்ந்தவாறு நிற்கும் தோற்றம். காதுகளில் மகர குண்டலங்கள் உள்ளன. மார்பில் மார்புக் கச்சு உள்ளது. முப்புரிநூல் மார்பின் குறுக்காகச் செல்கிறது. கைகளில் வாகு வளையமும், முன் கை வளையமும் உள்ளன. வலது கை டோல ஹஸ்தத்திலும், இடது கையில் தாமரை மலரும் காணப்படுகின்றன. இடையில் இடைக் கச்சும், பாதம் வரை ஆடையும் உள்ளன. கடிபந்தத்திலிருந்து தொடையில் துணி தொங்குகின்றது

பூதேவி :

பத்ம பீடத்தில் திரிபங்க நிலையில் நின்ற நிலை. காதுகளில் மகர குண்டலங்கள் உள்ளன. கழுத்தில் தொங்கும் அணியுடன் பதக்கம் ஒன்று கோர்க்கப்பட்டுள்ளது. நீண்ட மாலை போன்ற அணி இரு மார்புகளுக்கிடையே வருகிறது. முப்புரிநூலும், உள்ளது. மார்புக் கச்சை இல்லை. கைகளில் வாகு வளையமும், முன் கை வளையமும் உள்ளன. வலது கையில் அல்லி மலரும், இடது கை டோல ஹஸ்தத்திலும் காணப்படுகின்றன. இடது கை ஆட்காட்டி விரலிலும், சுண்டு விரலிலும் மோதிரங்கள் உள்ளன. இடைக்கச்சும், பாதம் வரை ஆடையும் இருக்கின்றன. பாதங்களின் மேல் வளையம் காணப்படுகின்றது.

விநாயகர் :

15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. பத்ம பீடத்தில் நின்ற நிலை கழுத்தில் அணி ஒன்று உள்ளது. முப்புரிநூல் மார்பில் முடிச்சுடன் காணப்படுகின்றது. வயிற்றில் நாகம் சுற்றியுள்ளது. மொத்தம் நான்கு கைகள் இருக்கின்றன. பின் வலது இடது கைகளில் முறையே அங்குசமும் பாசமும் உள்ளன. முன் வலது கையில் ஒடிந்த கொம்பும் இடது கையில் மோதகமும் இருக்கின்றன. தும்பிக்கை இடது கையிலுள்ள மோதகத்தைத் தொட்டபடி உள்ளது. வாகுவளையம்,

முன் கை வளையம் முதலியன இருக்கின்றன. நான்கு கைகளிலும் பெருவிரல், ஆட்காட்டி விரல், சுண்டு விரல், முதலியனவற்றில் மோதிரங்கள் இருக்கின்றன. முழங்கால் வரை ஆடை காணப்படுகின்றது. காலில் தண்டையும், பாதத்தின மேல் வளையமும் காணப்படுகின்றன.

இராமர், லட்சுமணன், சீதை :

சிறிய அளவில் 19-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இராமர் நடுவிலும், வலது புறம் இலட்சுமணன், அனுமன், இடது புறம் சீதை முதலியவர்களுடன் கூடிய செப்புத் திருமேனி திருமால் கோயிலில் இருக்கின்றது. இராமர், இலட்சுமணன் இருவரின் வலது கைகளில் அம்பும், இடது கைகளில் வில்லும் காணப்படுகின்றன. இராமரின் கழுத்தில் மலர்மாலை உள்ளது. யக்ஞோபவிதமும் இருக்கின்றது. சீதையின் வலது கையில் மலரும், இடது கை டோல ஹஸ்தத்திலும் உள்ளன. தலையின் மேல் முடி குடுமி போலக் கட்டப்பட்டுள்ளது. புடவையைப் போன்று ஆடை உள்ளது. அனுமன் அஞ்சலி ஹஸ்தத்தில் இருக்கும் தோற்றம்.

இவைகளைத் தவிர 20-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வேலாயுதம், முருகன், வள்ளி, தெய்வானை முதலிய செப்புத் திருமேனிகளும் உள்ளன.

ஓவியம் :

விஜயமங்கலத்திலுள்ள சந்திரபிரபா தீர்த்தங்கரர் ஆலயமான சமணர் கோயிலில் ஓவியம் கருவறைச் சுவரில் இருக்கின்றது. ஆனால் அந்த அறை மிக இருட்டாக இருப்பதாலும் வெளிச்சம் இல்லாமல் இருப்பதாலும், அந்த ஓவியம் என்னவென்று தெரியவில்லை. இராசயன முறையில் அச்சுவரை சுத்தம் செய்தால் நமக்குத் தெளிவான ஓவியம் கிடைக்கலாம்.

காசுகள் :

விசயமங்கலத்துக்கு ஈரோட்டிலுள்ள சிக்கைய கல்லூரி மாணவர்களும், கலைமகள் கல்வி நிலையம் மாணவிகளும் வந்து சேவை செய்யும்போது, அங்கிருந்த காசுகளைச் சேகரித்து, தங்கள் கல்வி நிலையங்களில் கண்காட்சியில் வைத்துள்ளனர். விஜயமங்கலத்திலிருந்து கிடைத்த காசுகளில் தெளிவாக இருப்பது ஈழப்பூச்சியுடன் இருக்கும் காசுகளே. மற்ற காசுகள் தெளிவாகத் தெரியவில்லை.

⌘⌘⌘

கல்வெட்டுச் செய்திகள்

கல்வெட்டு என்பது கல்லில் பொறிக்கப்பட்ட எழுத்துக்களையும் அதன் செய்திகளையும் குறிக்கும். தமிழகத்தில் கி.மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. தமிழகத்தில் உள்ள கல்வெட்டுகளின் எண்ணிக்கைக்கு ஒப்பாகவும், அவை சிதைத்தது போலவும் வேறு எங்கும் காண முடியாது. கல்லில் எழுத்துக்களைப் பொறிக்கும் வழக்கம் மிகப் பழங்காலந்தொட்டே தமிழகத்தில் நிலவி வந்துள்ளது. தொல்காப்பியம், புறநானூறு, அகநானூறு போன்ற நூல்களில் இருந்து போரில் வீரமரணம் அடைந்த வீரர்களுக்கு நடுகல் நட்டு வழிபடும் வழக்கமும், அந்நடுகற்களில் அவர்களுடைய வீரச்செயல்களைப் பொறிக்கும் பழக்கமும் தமிழகத்தில் தொன்றுதொட்டு இருந்து வந்துள்ளது என்பது தெரிகிறது. கல்வெட்டுகளாயினும், செப்பேடுகளாயினும் ஒவ்வொன்றையும் ஐந்து பகுதிகளாகப் பிரித்துவிடலாம். அவை மங்கலவாசகம், சாசனம் எழுதப்பட்ட காலம், சாசனச் செய்தி, கையெழுத்துக்கள், ஒம்படைக்கிளவி என்பனவாம்.

விஜயமங்கலத்தில் எத்தனைக் கல்வெட்டுகள் இருக்கின்றன என்று உறுதியாகக் கூற முடியாது. கல்வெட்டுகளைச் சரியாக பராமரிக்காமல் இருந்த காரணத்தினால் பாதிக்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் அழிந்து விட்டன. முழுமையாக எஞ்சியுள்ள கல்வெட்டுகள் மிகச் சொற்பமே. கி.பி. 1905-ஆம் ஆண்டு அறிக்கையில் (Annual Report on Epigraphy -1905) மொத்தம் 57 கல்வெட்டுகளின் குறிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம் I-ல் 267 முதல் 276 முடியும் எண்களாக மொத்தம் 10 கல்வெட்டுகளும், பாகம் 3, பகுதி 1-ல் 1091 லிருந்து 1094 முடிய நான்கு கல்வெட்டுகளும், எண் 1157 கொண்ட ஒரு கல்வெட்டும் ஆக மொத்தம் 15 கல்வெட்டுகள் வெளியிடப்பட்டுள்ளன.

விஜயமங்கலத்திலுள்ள கல்வெட்டுகளில் கொங்குச் சோழர், கொங்குப் பாண்டியர், போசளர், விஜயநகரர் முதலிய அரச மரபினர்

குறிக்கப்பட்டுள்ளனர். மற்றும் அரச பரம்பரை இல்லாத கல்வெட்டுகள் சிலவும் உள்ளன. இங்குள்ள கல்வெட்டுகள் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தைச் சேர்ந்தவை.

விஜயமங்கலத்திலுள்ள சிவன் கோயிலில் மொத்தம் 40 கல்வெட்டுகள் உள்ளன என்று கல்வெட்டு ஆண்டு அறிக்கை குறிக்கிறது. கொங்குச் சோழர்களின் கல்வெட்டுகள் 26-ம் கொங்குப் பாண்டியர்களின் கல்வெட்டுகள் 11-ம் போசள மன்னனின் கல்வெட்டு ஒன்றும், அரச குலம் தெரியாத கல்வெட்டுகள் இரண்டும் உள்ளன.

திருமால் கோயிலில் மொத்தம் 12 கல்வெட்டுகள் உள்ளன. கொங்குச் சோழர்களின் கல்வெட்டுகள் இரண்டும், கொங்குப் பாண்டியர்களின் கல்வெட்டுகள் ஒன்பதும், போசள அரசனின் கல்வெட்டு ஒன்றும் உள்ளன.

சமணர் கோயிலில் மொத்தம் 5 கல்வெட்டுகள் உள்ளன. கொங்குச் சோழரின் கல்வெட்டு ஒன்றும், விஜயநகரர் கல்வெட்டு ஒன்றும், அரசனின் பெயரில்லாததும், பரம்பரையின் பெயரில்லாததுமான கல்வெட்டுகள் மூன்றும் உள்ளன.

இங்குள்ள கல்வெட்டுகளிலேயே மிகப் பழமையானக் கல்வெட்டு சமணர் கோயிலிலுள்ள புளியம்மை என்ற பெண் சல்லேகனை விரதமிருந்து உயிர் நீத்ததைக் குறிப்பது ஆகும். இக்கல்வெட்டு கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று கோவை மாவட்ட பதிவு அலுவலரும், ஈரோடு புலவர் திரு. செ. இராசு அவர்களும் குறிக்கின்றனர். இப்பொழுது அக்கல்வெட்டில் பல இடங்களில் சிதறுண்டுக் காணப்படுவதால் சரியான காலத்தை அறிய முடியவில்லை. இதற்கு அடுத்ததாக கொங்குச் சோழன் அபிமான இராசாதிராச சோழனின் கல்வெட்டைக் குறிக்கலாம். சிவன் கோயிலிலுள்ள இவனது கல்வெட்டு இரண்டாவது ஆட்சியாண்டைக் குறிக்கிறது. இவன் காலம் கி.பி 1090 முதல் 1110 வரை என்று திரு. கே. வி. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் கூறியுள்ளார். எனவே இக்கல்வெட்டு கி. பி. 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. கடைசியான காலத்தைக் குறிக்கும் கல்வெட்டு விஜயநகர அரசைச் சேர்ந்த வீரஹரிஹரராய உடையார் கல்வெட்டாகும். இக்கல்வெட்டின் ஆண்டு கி.பி. 1412 ஆகும். எனவே இது கி.பி. 15-ஆம் நூற்றாண்டினதாகும்.

அரசன் பெயர் (கோங்குச் சோழர்)	மொத்தக் கல்வெட்டுகள்
1. அபிமான இராசாதிராச சோழன்	3
2. இராசாதிராச வீரசோழன்	1
3. குலோத்துங்க சோழன்	3
4. வீரராசேந்திர சோழன்	15
5. இரண்டாம் விக்ரம சோழன்	2
6. மூன்றாம் விக்ரம சோழன்	3
7. அரசன் பெயரில்லாத கல்வெட்டுகள்	2

மொத்தம் 27 கல்வெட்டுகள் கொங்குச் சோழர் வம்சத்தைச் சேர்ந்தவை.

கொங்குப் பாண்டியன் :

1. வீரபாண்டியன்	11
2. சுந்தரபாண்டியன்	4
3. ஜடாவர்மன் சுந்தரபாண்டியன்	5

மொத்தம் 20 கல்வெட்டுக்கள் கொங்குப் பாண்டியர்களைச் சேர்ந்தது.

போசள அரசன் :

1. வீரவல்லாள தேவன்	2

விஜயநகரர் அரசன் :

1. வீரஹரிஹரராய உடையார் அரச பரம்பரை தெரியாத கல்வெட்டுக்கள்	1 5

மொத்தம் 8 கல்வெட்டுக்கள்.

⌘⌘⌘

கல்வெட்டுகளில் மன்னர்கள்

அபிமான சோழ இராசாதிராசன் :

கொங்குச் சோழர் பரம்பரையில் இவன் மூன்றாவது அரசன் ஆவான். இவனுடைய கல்வெட்டுகள் மூன்று உள்ளன. சோழர்கள் எப்படி தங்களை பரகேசரி, இராசகேசரி என்று மாறிமாறி அழைத்துக் கொண்டார்களோ அது போலவே கொங்குச் சோழர்களும் தங்களை பரகேசரி என்று அழைத்துக் கொண்டனர். இவனுக்குப் பரகேசரி என்ற பட்டப் பெயர் இருந்தது. இவனுடைய கல்வெட்டுகளில் சக வருடம் 1022 எனக் குறிக்கப்பட்டிருக்கின்றது. (கி.பி. 1100).

இராசாதிராச வீரசோழன் :

இவனுடைய கல்வெட்டுகள், சிவன் கோயிலில் மேற்கு மதிற்சுவர் ஓரமாக ஒரு குத்துக் கல்லில் இருபுறமும் எழுதப்பட்டுள்ளது. அதில் சகர வருடம் 1044-ம் திருநல்லியாண்டு அஞ்சாவது என்று ஆட்சியாண்டும் குறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டின் காலம் கி.பி. 1122 என்றும், இவன் ஆட்சிக்கு கி.பி.1117-இல் வந்ததையும் அறியலாம்.

குலோத்துங்கச் சோழன் :

சமணர் கோயிலிலுள்ள இவனது கல்வெட்டில் சகர ஆண்டு 1085-ம், ஆட்சியாண்டு 14-ம் குறிக்கப்பட்டுள்ளதால், இவனது ஆட்சி கி.பி. 1149 முதல் ஆரம்பமானது என்று அறியலாம். மற்ற இருகல்வெட்டுகளில் 8-ஆவது ஆட்சியாண்டும், 13-ஆவது ஆட்சியாண்டும் குறிக்கப்பட்டுள்ளன.

வீர ராசேந்திரன் :

இவன் ராசகேசரி என்று கல்வெட்டுகளில் குறிக்கப்படுகிறான். இவனுக்கு 'திரிபுவனசக்கரவர்த்தி' என்ற பட்டப் பெயர் இருந்ததை கல்வெட்டுகளின் மூலம் அறியலாம். மேலுமிவன் இரு கொங்குகளையும் ஆண்டவன் எனச் சிறப்பிக்கப்படுகிறான். இவனுடைய கல்வெட்டுகள் 15 உள்ளன. 3-ஆவது ஆட்சியாண்டு முதல் 42-ஆவது ஆட்சியாண்டு வரை இவனது கல்வெட்டுகள் காணப்படுகின்றன. ஆனால் ஒரு கல்வெட்டில் கூட சகர ஆண்டு குறிக்கப்படவில்லை.

விக்கிரம சோழன் II :

இவனுடைய இரு கல்வெட்டுகளிலும் சகர யாண்டும், ஆட்சியாண்டும் குறிக்கப்பட்டுள்ளன. முதல் கல்வெட்டில் சகர ஆண்டு 1177-ம் 2-ஆவது ஆட்சியாண்டும் உள்ளது. இரண்டாவது கல்வெட்டில் சகர ஆண்டு 1185-ம், 7-ஆவது ஆட்சியாண்டும் குறிக்கப்பட்டுள்ளது. இவைகளிலிருந்து இவன் கி.பி. 1258-இல் அரசுக்கு வந்தான் எனக் கூறலாம்.

விக்கிரம சோழன் III :

சகர ஆண்டு குறிக்கப்படாத ஆட்சியாண்டை மட்டும் குறித்த விக்ரம சோழன் என்ற அரசனின் பெயருடன் காணப்படும் இரு கல்வெட்டுகள் உள்ளன. இக்கல்வெட்டுகள் இவனுடையதா அல்லது கி.பி. 1004 முதல் 1045 முடிய ஆட்சிபுரிந்த விக்கிரம சோழனுடையதா என்பது தெரியவில்லை 4-ஆவது ஆட்சியாண்டைக் குறிக்கும் கல்வெட்டும், 13-ஆவது ஆட்சியாண்டைக் குறிக்கும் கல்வெட்டும் ஆகும்.

அரசனின் பெயர் இல்லாத கல்வெட்டுகள் இரண்டு உண்டு. இந்த இரு கல்வெட்டுகளிலும் 8-ஆவது ஆட்சியாண்டுக் குறிக்கப்பட்டுள்ளது.

கொங்கு பாண்டியர்கள் :

வீரபாண்டியன் :

இவன்தான் முதல் கொங்கு பாண்டியனாக ஆட்சி செய்கிறான். இவனுக்கு முன் வேறொரு அரசன் இருந்ததற்கு இதுவரை சான்றுகள் கிடைக்கவில்லை. இவனுடைய கல்வெட்டுகள் மொத்தம் 11 உள்ளன. ஒரு கல்வெட்டில் சகர ஆண்டு 1202 என்றும், ஆட்சியாண்டு 15 என்றும் உள்ளதால் இவன் கி.பி. 1265-இல் ஆட்சிக்கு வந்தான் எனத் தெரிகிறது. 3-ஆவது ஆட்சியாண்டு முதல் 19-ஆவது ஆட்சியாண்டு வரையுள்ள கல்வெட்டுகள் இருக்கின்றன. இவனுடைய கல்வெட்டுகளிலிருந்து இவனுடைய பட்டப்பெயர்களை அறியலாம். திரிபுவனச்சக்கரவர்த்தி, கோனேரின்மை கொண்டான், கோராசகேசரி வர்மன் முதலியன அவனுடைய பட்டப்பெயர்களாகும். ஒரு மன்னனே

இராசகேசரிவர்மன் என்று சோழரின் பட்டப் பெயரையும், பாண்டியரின் பட்டப் பெயரையும் சேர்த்து வைத்துக்கொண்டது குறிப்பிடத்தக்கதாகும். இவனடைய 20-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஈரோடு தொண்டீசுவரர் கோயிலில் காணப்படுவதால் இவன் கி.பி. 1285 வரை ஆட்சி செய்துள்ளான் என அறியலாம்.

சுந்தரபாண்டியன் :

இவனுடைய கல்வெட்டுகள் நான்கு உள்ளன. ஆனால் எக்கல்வெட்டிலும் சகரயாண்டு காணப்படவில்லை. இரு கல்வெட்டுகள் 27-ஆவது ஆட்சியாண்டையும், ஒரு கல்வெட்டு 28-வது ஆட்சியாண்டையும், நான்காவது கல்வெட்டு ஆட்சியாண்டு இல்லாமல் இருக்கின்றன.

ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் :

இவனுடைய கல்வெட்டுகளிலிருந்து இவனுக்கும் திரிபுவனச்சக்கரவர்த்தி என்ற விருதுப் பெயர் இருந்ததை அறியலாம். விஜயமங்கலத்தில் இவனுடைய கல்வெட்டுகள் ஐந்து உள்ளன. சகர ஆண்டை குறிக்கும் கல்வெட்டு ஒன்றுகூட இல்லை. இங்குள்ள கல்வெட்டுகள் 2, 17, 23, 24, 28 ஆகிய ஆட்சியாண்டுகளைக் குறிக்கின்றன. ஆராய்ச்சியாளர்கள் இவனொரு கொங்கு பாண்டியனோ அல்லது கி.பி. 1251 முதல் 1264 வரை ஆண்ட மதுரைப் பேரரசனோ என்று கூற இயலாதென்று கருதுகிறார்கள்.

போசள அரசன் :

மூன்றாம் வீர வல்லாள தேவரின் கல்வெட்டுகள் அதிகமாக கொங்கு நாட்டில் கிடைக்கின்றன. விஜயமங்கலத்தில் இவனுடைய கல்வெட்டுகள் இரண்டு உள்ளன. (கி.பி. 1323 முதல் கி.பி. 1327 வரை) ஆட்சியாண்டு குறிக்கப்படவில்லை. சகர ஆண்டு 1249 குறிக்கப்பட்ட கல்வெட்டில் பிரபவ வருடம் என உள்ளது.

விஜயநகர அரசன் :

தமிழகத்தில் பாண்டியப் பேரரசு நலிவுற்ற போது விஜயநகர மன்னர்களது ஆளுகைக்குத் தமிழகம் இலக்காகியது. இவர்கள் தென்னகத்தின் இந்துமதக் காவலர்கள் எனப்படுவார்கள். துக்ளக்

வம்சத்திற்கு அடிமையாக இருந்த ஹரிஹரர், புக்கர் என்ற இருவர் தாங்கள் கட்டாயத்தின் பேரில் தழுவியிருந்த இஸ்லாம் மதத்தை விடுத்துத் தங்களது இந்து மதத்திற்கு திரும்பி வந்து இந்து ராஜ்யத்தை ஏற்படுத்தினர். இவ்விருவரால் தோற்றுவிக்கப்பட்டதே விஜயநகரப் பேரரசாகும். விஜயநகர மன்னர்கள் வீரஹரிஹரராய உடையார் கல்வெட்டு ஒன்று விஜயமங்கலத்தில் உள்ளது. அக்கல்வெட்டில் சக வருடம் 1334 என்று குறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு கி.பி.1412-ஐ சார்ந்தது என சக வருடம் கொண்டு அறியலாம்.

மன்னனின் பெயரையோ அல்லது அரச வம்சத்தைப் பற்றியோ இல்லாமல் சக வருடத்தை மட்டும் குறிக்கின்ற கல்வெட்டுக்கள் இரண்டு உள்ளன. சமணர் கோயிலிலுள்ள ஒரு கல்வெட்டு சக வருடம் 1189-ம் 46-வது ஆட்சியாண்டையும் குறிக்கின்றது. எனவே இது கி.பி. 1267-ம் ஆண்டைச் சேர்ந்தது. கி.பி. 1221-ல் அரசுக்கு வந்த ஒரு அரசனின் கல்வெட்டாகும். இரண்டாவது கல்வெட்டில் சக வருடம் 1265 குறிக்கப்பட்டுள்ளது. இது சிவன் கோயிலில் உள்ளது. கி.பி. 1343-ஐ சேர்ந்தது. மூன்றாம் வல்லாள தேவன் கி.பி. 1342-43 வரை ஆட்சி செய்தான் என்பதை கோவை மாவட்டம் வெள்ளலூர் என்ற இடத்தில் உள்ள இவனுடைய கடைசி ஆட்சியாண்டுக் கல்வெட்டைக் கொண்டு கூறலாம். விஜயமங்கலத்திலுள்ள இக்கல்வெட்டும் அவனுடையதாக இருக்கலாம். இவன் இறந்ததும் கி.பி. 1343-44ல் முதலாம் புக்கன் என்பவன் விஜயநகர அரசனாக வருகிறான். அல்லது இவ்விரு அரசர்களும் இல்லாமல் வேறு அரசனின் கல்வெட்டாகவும் இருக்கலாம்.

அரசனின் பெயரோ அல்லது அரச வம்சமோ அல்லது வருடமோ குறிக்காத கல்வெட்டுகள் மூன்று உள்ளன. இவை பிற்காலத்தில் அழிந்து போனதாக உள்ளது. இரண்டு கல்வெட்டுகள் சமணர் கோயிலிலுள்ளன. மூன்றாவது கல்வெட்டு சிவன் கோயிலிலுள்ளது. சமணர் கோயிலில் உள்ள இரு கல்வெட்டுகளில் ஒன்றில் சாமுண்டராயனின் தங்கை புளியம்மை என்ற பெண் நிசீதிகை விரதமிருந்து உயிர் நீத்ததைக் குறிக்கின்றது. மேலும் அக்கல்வெட்டு குறிக்கும் சாமுண்டராயன் என்பவன் மைசூர் நாட்டு இரண்டாம் மாறசிம்மன், நான்காம் இராசமல்லன் என்ற அரசர்களுக்கு

அமைச்சனாக இருந்தவன். அங்கு கோமட்டேஸ்வர (Gommatesvara) என்ற சிலையை எழுப்புவித்தான். இதைக் குறிக்கும் கல்வெட்டு கி.பி.10-ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்தது. எனவே அவனுடைய காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு எனத் தெரியவருகிறது. அக்காலத்தில்தான் புளியம்மையும் விஜயமங்கலம் வந்து விரதம் இருந்து உயிர் நீத்திருக்கலாம். எனவே இக்கல்வெட்டும் சுமார் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனக் கருதலாம். மற்ற இரு கல்வெட்டுகள் கொடைகளைப் பற்றிக் குறிக்கின்றன.

அரசியல் தலைவர்கள் அல்லது படைத் தலைவர்கள் :

சமணர் கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டில் சக வருடம் 1179-ம், 46-வது ஆட்சியாண்டும் குறிக்கப்பட்டுள்ளது. அரசனின் பெயர் இல்லை. அக்கல்வெட்டு குறுப்பு நாட்டு விஜயமங்கலத்தில் இருந்த வேளாளன் படைத்தலைவர்களில் ஒருவனான திருவானைக்காவுடையான் சொக்கன் என்பவன் சமணக் கோயிலில் திருநிலைக்கால் செய்து கொடுத்தான் என்று குறிக்கிறது.

கொங்குச் சோழன் வீரராசேந்திரனின் 2-ஆவது ஆட்சியாண்டில் விஜயமங்கலத்து வேளாளன் படைத்தலைவர்களில் ஒருவன் புதுச்சலாகை அச்சு என்ற காசு ஒன்றைக் கொடுத்ததாகக் குறிக்கின்றது.

இதே மன்னனின் 3-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு பாட்டாலி வேட்டுவன் சொக்ககூறன் என்பவனைப் பற்றிக் குறிக்கின்றது.

கொங்குப் பாண்டியன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டு ஒன்றில் விஜயமங்கலத்து வேளாளன் படைத்தலைவர்களில் தலைவன் நம்பி உலகுடையான் என்பவனைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இவனைப் பற்றி கொங்கு மண்டலச் சதகம் என்ற நூலிலும் குறிப்பு வருகிறது.

"சொல்லிக் களைய வகத்துறைக் கோவை சொனபுலவன்
பல்லக்கு கொடுத்துக் கழனியும் பொன்னும் பரிசளித்த
வெல்லப் படைத்தலை வீர னுலகுடை வீரனமர்
மல்லர்க் கினிய குறுப்பனை நீள் கொங்கு மண்டலமே."

கல்வெட்டில் நாடுகள் :

ஒரு அரசு சிறப்பாக ஆட்சி புரிகிறது, மக்களுக்குப் பலவிதத்திலும் நன்மைகள் புரிகிறது எனின், அந்த நாடு பல்வேறு

பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு பல அதிகாரிகளைக் கொண்டு நிர்வகிக்கப்படுகிறது என்று பொருள். இப்படி நாட்டைப் பல்வேறு பிரிவுகளாகப் பிரிப்பதால் நிர்வாக யந்திரம் எளிதாகவும், சிறப்பாகவும் இயக்க இயலும்.

கோட்டம், கூற்றம் அல்லது வளநாடு என்பவை ஒரு பெரிய பிரிவு இதனுள் பல நாடுகள் அடங்கின. ஒவ்வொரு நாட்டிலும் பல ஊர்கள் அடங்கின. இவை தவிர சதுர்வேதிமங்கலம் என்ற அமைப்பு அந்தணர்களுக்கு வழங்கிய பகுதிகளாக விளங்கின. கோயிலுக்குச் சொந்தமானவை தேவதானம் என்றழைக்கப்பட்டு விளங்கின. வணிகர்கள் வாழ்ந்த பகுதிகள் நகரங்கள் என்றழைக்கப்பட்டன. ஒரு ஊரினுள் அடங்கிய சிறு ஊர்கள் பிடாகை எனப்பட்டன.

கொங்கு நாடு 24 சிறு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அந்நாடுகளில் ஒன்றான குறுப்பு நாட்டில்தான் விஜயமங்கலம் இருக்கின்றது. கல்வெட்டுகள் குறுப்பு நாட்டு விஜயமங்கலம் என்றே குறிக்கின்றன. வீரபாண்டியனின் 3-ஆவது ஆட்சியாண்டைக் கல்வெட்டு விசையன்மங்கலம் என்று குறிக்கின்றது.

பிற பிரிவுகளும், ஊர்களும் :

திரிபுவனச்சக்கவர்த்தி வீரபாண்டியனின் 15-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் வீர சோழ வளநாட்டிலுள்ள வீரசோழ சதுர்வேதிமங்கலம் என்றே குறிக்கப்படுகின்றது. மற்றொரு கல்வெட்டில் அரசனின் பெயர் இல்லை, வீரசோழ வளநாட்டிலுள்ள உத்தம சோழ சதுர்வேதிமங்கலத்தைக் குறிக்கின்றது.

இராசாதிராச வீரசோழனின் 5-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் காங்கயநாடு குறிக்கப்படுகின்றது.

வீரராசேந்திரச் சோழனின் 20-ஆவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டில் பூவானிய நாடு குறிக்கப்படுகிறது.

வீரபாண்டிய தேவன் என்ற கொங்கு பாண்டியனின் 17-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் காங்கய நாடும், மற்றொரு கல்வெட்டில் வடகரை நாடும் குறிக்கப்பட்டுள்ளன.

வீரஹரிஹர உடையார் என்ற விஜய நகர மன்னனின் கல்வெட்டில் வடபரிசார நாடு முதலியன குறிக்கப்பட்டுள்ளன.

அம்மன் கோயிலிலுள்ள வெண்பா பாட்டில் அமைந்துள்ள கல்வெட்டில் வடபரிசார நாடு குறிக்கப்படுகின்றது.

ஊர்கள் :

இராசாதிராச வீரசோழனின் கல்வெட்டில் தென்னூர், உகப்பாடி, பரஞ்சேர்பள்ளி முதலிய ஊர்கள் குறிக்கப்படுகின்றன.

வீரராசேந்திரச் சோழனின் 4-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் காங்கயம் என்ற ஊரும், 5-ஆவது ஆட்சியாண்டில் உகப்பாடி, இராசராசபுரம் முதலிய ஊர்களும், 41-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் பிடாரியூர் என்ற ஊரும் குறிக்கப்படுகின்றன.

வீரவல்வாள தேவன் என்ற போசள மன்னனின் கல்வெட்டில் ஆமூர் என்கிற இராகுத்தராயநல்லூர் குறிக்கப்படுகிறது.

வீரஹரிஹரராய உடையார் என்ற அரசனின் கல்வெட்டில் செங்கப்பள்ளி என்ற ஊர் குறிக்கப்படுகின்றது.

பிற கல்வெட்டுகளில் விஜயமங்கலம் :

தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம் 1-2 சாசன எண் 271 கொண்ட கல்வெட்டு சத்தியமங்கலம் தாலுக்காவிலுள்ள உத்தமப்பாளையம் என்ற ஊரில் உள்ளது. அவ்வூரின் குளத்துக்கருகில் நடப்பட்டுள்ள கல்லில் அக்கல்வெட்டு உள்ளது. அக்கல்லில் சங்கு, சக்கரம் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அக்கல்வெட்டில் குறும்பு நாட்டு விஜயமங்கலத்திலுள்ள சித்திரமேழி விண்ணகரப் பெருமான் கரியமாணிக்க மூலர் கோயில் என்று குறிக்கப்பட்டுள்ளது.

ஈரோடு தாலுக்கா துடுப்பதி என்ற ஊரிலுள்ள விசுவநாதர் கோயிலில் கிருஷ்ணராஜ உடையார் காலத்திய கல்வெட்டு ஒன்று உள்ளது. அக்கல்வெட்டில் சாலிவாகன சகாப்தம் 1666 கலியுக சகாப்தம் 4845 என்று வருடங்கள் குறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டின் காலம் கி.பி.1744 ஆகும். அதில் துடுப்பூதி குறுப்பு நாட்டில் விஜயமங்கைக்குச் சேர்ந்தது என்றுள்ளது.

மக்கட்பெயர் :

இராசாதிராசன் வீரசோழனின் 5-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் வெள்ளாளன் சிலம்பன்நீலன் என்பவனும் அவன் மனைவி சிட்டன்காவி என்பவளும் குறிக்கப்படுகின்றனர்.

திரிபுவனச்சக்கரவர்த்தி இராசேந்திர சோழனின் 10-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் சிறியன் தேவனான முடிகொண்ட சோழமாளுயினன் என குறிக்கப்படுகின்றான்.

பாண்டிய அரசன் வீரபாண்டியனின் 17-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் வீரகாமிண்டன் உடையான் மனைவி வாமதேவர் என்பவளும், மகள் பிள்ளை அம்மை என்பவளின் பெயரும் குறிக்கப்படுகின்றன.

சுந்தரபாண்டியனின் 27-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு அம்பலபெருமாள் என்ற பெயரைக் குறிக்கின்றது.

இடங்கை பிரிவு :

கல்வெட்டுகள் மக்கட் பெயர்களைக் குறிக்கும்போது, இடங்கை என்ற பிரிவைப் பற்றியும் ஒரு கல்வெட்டு குறிக்கின்றது. இராசகேசரிவர்மரான திரிபுவனச்சக்கரவர்த்தி வீரராசேந்திர தேவனின் 10-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் திருமேற்கோயில் சித்திரமேழி விண்ணகராழ்வார் கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட கொடை 99 சாதிகளைக் கொண்ட இடங்கை பிரிவினரின் பாதுகாப்பில் இருந்தது என்று குறிக்கின்றது. (A.R.E. No. 546/1905). கனடா நாட்டிலுள்ள பிரிட்டீஷ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த செல்வி பிரெண்டா என்பவர், பல நூற்றாண்டு காலமாக தென்னிந்தியா சமூகத்தில் ஏற்பட்டு வழக்கத்தில் வந்த வலங்கை இடங்கை என்ற இருபெரும் பிரிவுகள் பற்றி கொங்கு நாட்டில் 17-ம் நூற்றாண்டிலிருந்துதான் வரலாற்று ஆதாரங்கள் கிடைக்கின்றன என்றும், வலங்கை இடங்கை என்ற பிரிவுகளின் தோற்றம் கொங்கு நாட்டின் பல சாதிகளின் மாறுபட்ட பழக்க வழக்கங்களுக்கு காரணமாய் உள்ளது புலப்படும் என்றும் கூறியுள்ளார். ஆனால் இக்கல்வெட்டு 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

கல்வெட்டுகளில் இறைவன் பெயர் :

கல்வெட்டுகளில் விஜயமங்கலத்து சிவபெருமானின் பெயர் குறுப்பு நாட்டு விசையமங்கலத்து ஆளுடையார் திருநாகீஸ்வரமுடைய நாயனார் என்றும், விசையமங்கலத்து மகாதேவர் ஸ்ரீநாகபுரமுடையார் என்றும் குறிப்பிடப்படுகின்றன.

அம்மன் பெயர் கல்வெட்டுகளில் திருக்காமக்கோட்டத்து ஆளுடைய நாச்சியார் என்று குறிப்பிடப்பட்டுள்ளன.

இதுவரை கி.பி. 11-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காமக் கோட்டத்தைப் பற்றிய கல்வெட்டுக் குறிப்பு ஏதும் காணக் கிடைக்கவில்லை. ஆதலின் சிவாலயங்களில் உமையம்மைக்கு த்னியாகக் கோயில்கள் எப்போது எடுக்கப்பட்டன என்பது குறித்து அறிஞர்கள் இடையே கருத்து வேறுபாடு உண்டு. மேலும் கி.பி. 11-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தைச் சார்ந்தது என்று குறிப்பிடும்படி அம்மன் கோயில்கள் எதுவும் காணப்படவில்லை. கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகக் கருதப்படும் சுந்தரமூர்த்தி சுவாமிகள், காமக்கோட்டம் என்னும் பெயருடைய உமையம்மையின் கோயிலைப் பற்றி,

"காரி ரும்பொழிற் கச்சி மூதூர்க்
காமக் கோட்டம் உண்டாக நீர்போய்
ஊரி டும்பிச்சை கொள்வ தென்னே
ஓண காந்தன் தளியு ளீரே"

(தேவாரம், திருஓணகாந்தன்தளி, பத்தி 6)

என்று கூறியுள்ளார். சாத்தமங்கலத்திலுள்ள நந்திவர்மனின் (பல்லவன்) 14-ஆவது ஆட்சியாண்டைச் சார்ந்த கல்வெட்டு ஒன்று (கி.பி. 746) காமக்கோட்டத்தைக் கூறுவதால், இது மிகவும் வரலாற்றுச் சிறப்புள்ளதாகும். காமக்கோட்டத்தைக் குறிக்கும் மிகவும் தொன்மையான கல்வெட்டு இதுவே.

கல்வெட்டுகளில் பெருமாள் சித்திரமேழி விண்ணகரெம்பெருமான் கரியமாணிக்காழ்வார் என்று குறிப்பிடப்படுகின்றார்.

சித்திரமேழி என்பது வேளான் குடியைச் சேர்ந்த மக்கள் சபையைக் குறிப்பதாகும். அவர்கள் சித்திரமேழி பெரியநாட்டவர் என்று குறிக்கப்பட்டனர்.

தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் அவர்கள் சித்ரமேழி பெரியநாட்டவரைப் பற்றிக் குறித்துள்ளார். உழவையே தங்கள் தொழிலாகக் கொண்டு வாழ்ந்த ஒரு குடிமக்கள், நாட்டில் பல

பகுதிகளில் பரவி வாழ்ந்த போதிலும் ஒரே இனத்தவராக சமயத்தவராக தங்களைக் கருதி வாழ்ந்தனர். இவர்கள் ஏரையே தெய்வமாகக் கொண்டவர் என்றும் அதனால் சித்ரமேழி பெரிய நாட்டவர் என்று பெயர் பெற்றனர் என்றும் அறிகிறோம். இவர்கள் தங்களை பூமிதேவியின் மக்கள் என்று கூறிக் கொண்டனர். செல்வம் நிறைந்தவர் ஆதலின் திருமகளின் மக்கள் என்றும் தங்களைக் கூறிக் கொண்டனர். 'தெங்கும், பலாவும், தேமாஞ்சோலையும், வாழையும், கமுகும், வளர்கொடி முல்லையும், பூவையும், கிள்ளையும், பொலிவோடும் கெடும் வாட்டம் இன்றி கூட்டம் பெருக' வாழ்ந்தனர் என்று கல்வெட்டுக் கூறுகிறது. 'சித்ரமேழியே தெய்வமாகவும் செம்பொற்பசும்பையே வேலியாகவும்' கொண்டவர் என்றும் இவர்கள் தங்களைக் கூறிக் கொண்டனர். இச்சித்ரமேழி நாட்டார் என்ற பெயரில் வெள்ளாளர் சமுதாயம் பல நூற்றாண்டுகள் தமிழகத்தில் சீரும் சிறப்புமாகத் திகழ்ந்தது என்று அறிகிறோம். இவர்களுக்கென தனிப்பட்ட மெய்க்கீர்த்தியே இருப்பதிலிருந்து இவர்கள் சமுதாயத்தாலும், அரசாலும் பெரிதும் போற்றப்பட்டனர் என்று அறிகிறோம்.

விஷ்ணு கோயிலிலுள்ள கல்வெட்டுகள் வேளான் குடியைச் சேர்ந்த மக்கள் கொடை கொடுத்ததைக் குறிக்கின்றன.

சமணக் கோயிலிலுள்ள இறைவனை கல்வெட்டுகள் சந்திரநாத சுவாமி என்று குறிக்கின்றன. 'அணிவன அணியா அழகா செயசெய' என்று திருப்பாமாலை குறிப்பதைப் போல அங்குள்ள ஒரு கல்வெட்டு விஜயமங்கலத்து நாயனார் அணியாதழகியார் என்று குறிப்பிடுகிறது. (தெ.இ.கோ. சா. எண்.272) மற்றொரு கல்வெட்டு விஜயமங்கலத்து நாயனார் வீர சங்காதப் பெரும்பள்ளி ஆழ்வார் என்று குறிக்கிறது. (தெ. இ. கோ. சா. எண். 274)

⌘⌘⌘

கோயிலும் சமயமும்

கோயில் என்றதும் நமது நினைவிற்கு தீபம், திருவிளக்குகள், பூஜை, அலங்காரம் முதலியவை வருகின்றன. விஜயமங்கலத்துக் கல்வெட்டுகளில் பெரும்பகுதி கொடைகளைப் பற்றியே குறிக்கின்றன.

நிவந்தம் :

அமுதுபடி, சாத்துபடி :

அமுதுபடி என்பது நைவேத்தியம் செய்தலாகும், சாத்துபடி என்பது கோயில் விக்கிரகங்களுக்குச் செய்யும் அலங்காரத்தைக் குறிக்கும்.

வீரராசேந்திர சோழனின் 10-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் சித்ரமேழி விண்ணகராழ்வாருக்கு அரிசி அமுதுபடி செய்வதாக கல்வெட்டியல் செய்தி உள்ளது. வீரபாண்டியனின் கல்வெட்டில் விஜயமங்கலத்திலிருந்த ஏரி வீரபாண்டிய பேரேரி எனவும், இதிலிருந்து கிடைக்கும் வருவாய் திருநாகீஸ்வரமுடையார் திருக்காமக்கோட்டத் தாளுடைய நாச்சியார்க்கு அமுதுபடி சாத்துபடி செய்யப்பட்டது என்றும் உள்ளது. அரசனின் பெயர் காணப்படாத ஒரு கல்வெட்டில் ஊர் மக்கள் கோயிலுக்கு தயிரமுது, நெய்யமுது படைத்தனர் என்று குறிக்கிறது. சமணர் கோயிலிலுள்ள ஒரு கல்வெட்டில் சங்கராந்தி அன்று கறியமுது செய்த குறிப்பு உள்ளது.

நந்தா விளக்கு :

இது என்றென்றும் குறையாது எரியும் விளக்கு. இதை தூண்டா விளக்கு என்றும் சொல்வர்.

வீரராசேந்திரச்சோழனின் 14-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் சிவராத்திரியன்று 90 விளக்குகள் கொடுக்கப்பட்டதாகச் செய்தி உள்ளது (A.R.E. 584/1905). இதே அரசனின் 41-ஆவது ஆட்சியாண்டில் நந்தா தீபம் எரிப்பதற்காக பழஞ்சலாகை அச்சு என்ற நாணயம் ஒன்று

கோயிலில் கொடுத்ததாகக் கல்வெட்டுக் கூறுகிறது. வீரபாண்டிய தேவனின் 3-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு நந்தா தீபம் ஒன்று வியாபாரி ஒருவரால் கொடுக்கப்பட்டது என்று குறிக்கிறது. சுந்தரபாண்டியனின் 27-ஆவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டில் திருநந்தா விளக்கு என்று குறிக்கப்படுகிறது. ஊர் மக்கள் அம்மன் கோயிலைச் சேர்ந்த நிலத்தை விற்றுக் கிடைத்த காசில் நந்தா விளக்கு ஒன்றை வாங்கிக் கொடுத்ததாகக் கல்வெட்டுச் செய்தி கூறுகிறது. இதே காலத்திய மற்றொரு கல்வெட்டில் அம்பலபெருமாள் என்பவன் அம்மன் கோயிலில் ஒரு நந்தா விளக்கு வைத்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்தியா தீபம் :

பகலும் இரவும் கூடும் வேளையில் கோயிலிலே ஏற்றப்பெறும் விளக்கு, பெரும்பாலும் மாலையிலேதான் ஏற்றப்படுவது, காலையில் போடுவதும் உண்டு.

கொங்கு சோழன் குலோத்துங்க சோழனின் 13-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் திருநாகீஸ்வரமுடையார் கோயிலுக்குச் சந்தியா தீபமொன்று கொடுத்ததைக் குறிக்கின்றது. வீரபாண்டியனின் 5-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு அதே கோயிலுக்கு சந்தியா தீபம் ஒன்றுக்கு ஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சு ஒன்று கொடுத்ததாகக் குறிப்பிடுகிறது. இதே மன்னனின் 10-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு வடகரை நாடு குறிச்சி வேளாண் மக்கள் விஜயமங்கலத்திலுள்ள விஷ்ணு கோயிலுக்கு சந்தியா தீபம் வைப்பதற்காக அச்சுஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சு என்ற நாணயம் கொடுத்ததாகத் தெரிவிக்கின்றது. 17-ஆவது ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டில் பிள்ளை அம்மை என்பவள் விஷ்ணு கோயிலில் சந்தியா தீபம் ஒன்றை வைத்ததாக குறிப்பு உள்ளது. சுந்தரபாண்டியன் கல்வெட்டு ஒன்று விஜயமங்கலத்து குமரன் என்பவன் விஷ்ணு கோயிலுக்கு ஒரு சந்தியா விளக்குக்கு பணம் பன்னிரெண்டு கொடுத்ததாகக் குறிப்பிடுகிறது.

தேவதானம் :

கோயிலுக்குச் சொந்தமான பகுதிகள் தேவதானம் என்று அழைக்கப்பட்டன.

கங்கேய நாட்டில் வாழும் சிலம்பன்நீலனின் மனைவி சிட்டன்காவி என்பவள் நங்கைநீலி கோயிலுள்ள தென்னூரில் குடியிருப்புக்கான நிலத்தில் சிறு நிலத்திற்கு கிழக்கு வெள்ளைகள் தோட்டத்திற்கு மேற்கு வடக்கு சாலைக் கரை பாதைக்கு தெற்கு என எல்லைகள் வகுத்து சிவன் கோயிலுக்கு திருவிழாவின்போது நைவேத்தியம் செய்வதற்காகக் கொடுத்தாள். இச்செய்தி கொங்குச் சோழ அரசன் வீரசோழனின் 5-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் வருகிறது.

அடுத்து வீரபாண்டியனின் கல்வெட்டில் விஜயமங்கலத்திலிருந்த குளம் வீரபாண்டிய பேரேரி எனவும், அதிலிருந்து நீர் பாய்கின்ற நிலங்கள் யாவும் வரியில்லாமல் திருக்காமக் கோட்டத்தாளுடைய நாச்சியாருக்கு நைவேத்தியம், கோயில் விக்கிரகங்களுக்கு அலங்காரம் செய்தல் முதலிய பல நிவந்தங்களுக்குத் தரப்பட்டன என்று உள்ளது. விஷ்ணு கோயிலுக்கு பூந்தோட்டம் ஒன்று தரப்பட்டது என்று மற்றொரு கல்வெட்டுக் கூறுகிறது.

போசள மன்னன் புஜபல வீரவல்லாள தேவனின் கல்வெட்டு கரியமாணிக்க மூலவருக்கு பல நிவந்தத்திற்கு புன்செய் நிலமும், குளமும், குளத்து நீர் பாய்கின்ற வயல்கள் யாவும் கொடுக்கப்பட்டன என்று குறிக்கின்றது. இதே அரசனின் மற்றொரு கல்வெட்டில் சிவன் கோயில் திருப்பணிக்காக ஆமூர் என்ற இராகுந்தராயநல்லூரை திருநாகீஸ்வரமுடைய நாயனார்க்கு தேவதானமாக தந்து, அணை, குளம், புன்செய் நிலம், கிணறு, மரம் முதலிய அனைத்தும் எந்த வரியும் இல்லாமல் கொடுக்கப்பட்டது என்ற செய்தி உள்ளது. (தெ. இ. கோ. சா. எண். 268, பாகம்-1)

திருச்சூலதானம் :

இவ்வாறு அனைத்தும் எவ்விதமான வரியும் இல்லாமல் இறைவனுக்கு குறுப்பு நாட்டு மக்கள் கொடுக்கும்போது கோயிலில் திருச்சூலத்தை பங்குனி மாதத்தில் ஸ்தாபிதம் பண்ணினார்கள் என்று வீரவல்லாளனின் கல்வெட்டு கூறுகிறது.

திருப்பணிகள் :

சக வருடம் 1185, (கி.பி. 1263) 7-ஆவது ஆட்சியாண்டு விக்கிரம சோழ தேவரின் கல்வெட்டு, விஜயமங்கலத்து திருநாகீஸ்வரசுவாமி கோயிலின் முன் மண்டபத்தையும், பிரகாரத்தையும் பழுது பார்த்து மீண்டும் திருப்பிக் கட்டினான் என்று குறிப்பிடுகிறது. மேலும் பழுது பார்க்கும் வேலை ஆரம்பிப்பதற்கு முன் சுவரிலிருந்த விளக்குத் தானத்தைப் பற்றிக் குறிக்கும் கல்வெட்டுகளை எழுதிக் கொண்டு வேலை முடிந்ததும் மறுபடியும் சுவரில் எழுதி வைத்துவிட்டதாக அக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. குலோத்துங்க சோழனின் இரு கல்வெட்டுகள், வீரராசேந்திர சோழனின் 5 கல்வெட்டுகள் மறுபடியும் திருப்பி எழுதப்பட்டவைகளாகும். (A.R.E. No. 578/1905)

போசள அரசன் புஜபல வீரவல்லாள தேவனின் கல்வெட்டுகளில் ஒன்றில் சிவன் கோயிலில் திருப்பணி செய்வதற்காக கொடை கொடுத்ததையும், மற்றொன்றில் விஷ்ணு கோயிலில் திருப்பணி செய்வதற்கு நிலம் தந்ததையும் குறிக்கின்றன.

குளம் பழுது பார்த்தல் :

கொங்குப் பாண்டியன் வீரபாண்டியனின் சக வருடம் 1202, 5-ஆவது ஆட்சியாண்டு குறிக்கப்பட்ட கல்வெட்டு விஜயமங்கலத்திலுள்ள குளத்தைப் பழுது பார்த்ததைப் பற்றி குறிக்கிறது.

விஜயமங்கலத்துக்கருகில் வாகைப்புத்தூரில் வடக்குப் பகுதியிலிருந்த வாகைக்குளம் என்ற பெயர் கொண்ட குளம் நெடுநாளாக கவனிப்பாரற்று அழிவுற்று இருந்தது. இக்குளம் பழுது பார்க்கப்பட்டு பிறகு மன்னனின் பெயரையே அதாவது வீரபாண்டிய பேரேரி என அதற்கு வைத்தனர். பிறகு இந்தக் குளமும், நீர் பாயும் நிலங்களும் திருக்காமக்கோட்டமுடைய நாச்சியார்க்கு தேவதானமாகக் கொடுக்கப்பட்டது. அக்குளத்தை விஜயமங்கலத்து மக்களே கவனித்து வரும்படி ஏற்பாடு செய்யப்பட்டது.

தானியப் பெயர்கள் :

கம்பு, பாக்கு, எள், பயிறு முதலிய தானியங்களை சிவன் கோயில் அர்த்தமண்டப வடக்குச் சுவரில் இருக்கும் கல்வெட்டுக் குறிக்கின்றது.

காசுகள் :

இங்குள்ள கல்வெட்டுகள், சந்தியா தீபம் மற்றும் கொடைகளுக்காகக் கொடுக்கப்படும் காசுகளை ஆனையச்சு ழரீயக்கி பழஞ்சலாகை அச்சு என்றும் சீயக்கி புதுச் சலாகை அச்சு என்றும் குறிப்பிடுகின்றன. ஆனையச்சு ழரீயக்கி பழஞ்சலாகை அச்சு என்பது ஆனை யச்சு என்று வழங்கப்பெறும் ழரீயகூஷி உருவம் பொறித்த பழஞ்சலாகை அச்சு என்ற நாணயம் என்றும், சீயக்கி புதுச்சலாகை அச்சு என்பது ழரீயகூஷியின் உருவம் பொறித்த புதுச்சலாகை என்னும் நாணயம் என்றும், திரு. நடன. காசிநாதன் அவர்கள் குறித்துள்ளார்.

குலோத்துங்க சோழனின் 13-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு சந்தியா தீபம் ஒன்றுக்காக அச்சு பழஞ்சலாகையும், புதுச்சலாகை அச்சும் கொடுத்ததாகக் குறிக்கின்றது. இதே அரசனின் 14-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் திருநாகீஸ்வரமுடையாருக்கு சந்தியா தீபத்திற்காக புதுச்சலாகை அச்சு ஒன்று தந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. இதே ஆட்சி ஆண்டைச் சேர்ந்த மற்றொரு கல்வெட்டு கைக்கோளர் குலத்தைச் சேர்ந்தவன் சந்தியா தீபம் ஒன்றை சிவன் கோயிலில் வைத்ததற்காக புதுச்சலாகை அச்சு ஒன்றை தந்ததாகக் கூறுகிறது.

வீரராசேந்திர சோழனின் 2-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் சிவன் கோயிலில் சந்தியா தீபம் வைத்ததற்கு புதுச்சலாகை நாணயம் ஒன்று கொடுத்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இம்மன்னனின் 10-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு சித்ரமேழி விண்ணகராழ்வார் கோயிலுக்கு அச்சு என்கின்ற 29 நாணயங்களை கொடுத்ததைக் குறிக்கின்றது. இவனின் 41-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் சிவன் கோயிலுக்கு நந்தா தீபம் ஒன்றுக்காக பழஞ்சலாகை அச்சு என்ற நாணயமொன்றை அக்கோயிலைச் சார்ந்த ஆளவந்தீமாணிக்கன் முதலியவர்களிடம் கொடுக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

வீரபாண்டிய தேவனின் 5-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டில் சிவன் கோயிலில் சந்தியா தீபத்திற்காக ழரீயக்கி பழஞ்சலாகை என்ற நாணயம் ஒன்று கொடுக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இம்மன்னனின் 10-ஆவது ஆட்சியாண்டில் வடகரை நாடு வெள்ளாளன் குலத்தைச் சேர்ந்தவன் விஜயமங்கலத்திலிருக்கின்ற திருமால்

கோயிலில் வைத்த சந்தியா தீபமொன்றுக்காக ஸ்ரீயக்கி பழங்சலாகை அச்சு என்ற நாணயம் கொடுத்தான் என்று கல்வெட்டுக் கூறுகின்றது. இவனின் 17-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு காங்கய நாட்டு வாமதேவர் மகள் பிள்ளை அம்மை என்பவள் விஷ்ணு கோயிலில் வைத்த சந்தியா தீபத்திற்கு ஸ்ரீயக்கி பழங்சலாகை அச்சு என்ற நாணயத்தை கொடுத்ததாகக் கூறுகிறது.

சமணர் கோயிலுள்ள ஒரு கல்வெட்டில் திருவிளக்கு இரண்டு, அமுதுபடி முதலியவற்றிக்கு அக்கோயிலில் பரம்பரை உரிமையுடைய ஸ்ரீவத்ச கோத்திரத்தைச் சேர்ந்த பண்டிதப் பெருமாள் கெங்காழ்வான் ஆனை அச்சு ஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சு என்ற நாணயம் இரண்டு உபயமாகக் கொடுத்ததைக் குறிக்கின்றது. (தெ. இ. கோ. சா. எண். 275, பாகம். 1).

வரிகள் :

விஜயமங்கலத்துக் கல்வெட்டுகள் கடமை, எலவை, உகவை, ஒட்டச்சு, ஈழம் புஞ்சை, தட்டாரப் பாட்டம், தறியிறை, தண்ணீர் காணம் முதலிய வரிகளைக் குறிக்கின்றன.

கடமை	-	அரசு நிர்வாகத்திற்குக் கொடுக்கும் வரி
எலவை	-	சாவு வரி
ஒட்டச்சு	-	திருமணம் போன்ற மகிழ்ச்சியான காரியங்களின் பொருட்டு செலுத்தும் வரி
ஈழம் புஞ்சை	-	கள் இறக்குவோர் வரி
தட்டாரப் பாட்டம்	-	(பொற்கொல்லர்கள்) தட்டார்கள் இறுக்கும் வரி.
தறியிறை	-	துணிநெய்வோர் தறிக்காக இறுக்கும் வரி
தண்ணீர்காணம்	-	தண்ணீர் வரி என்பதேயாகும்.

மேற்க்கண்டவாறு தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம் - 3, பகுதி - 2-இல் விளக்கம் தரப்பட்டுள்ளது.

போசள மன்னன் வீரவல்லாள தேவனின் சக வருடம் 1245 (கி.பி. 1323) குறிக்கப்பட்ட கல்வெட்டு, திருநாகீஸ்வரமுடைய

நாயனார்க்கு திருப்பணி மற்றும் பல நிவந்தத்திற்கு மேற்கண்ட வரிகள் நீக்கப்பட்ட நிலம் தேவதானமாகக் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிடுகிறது. இதே மன்னின் சக வருடம் 1249 (கி.பி. 1327) குறிக்கப்பட்ட மற்றொரு கல்வெட்டும் குறுப்பு நாட்டு நாட்டவர் திருமேற்கோயில் நாயனார் சித்ரமேழி விண்ணகரப் பெருமாள் கரியமாணிக்க மூலவர்க்கு திருப்பணிக்கு மேற்கண்ட வரிகள் நீக்கப்பட்ட நிலத்தைக் கொடுத்ததாகக் குறிப்பிடுகின்றது.

சபை :

வீரபாண்டியனின் சக வருடம் 1202 (கி.பி. 1280) 15-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டில் ஸ்ரீவீரசோழச் சதுர்வேதிமங்கலத்துச் சபை குறிக்கப்படுகின்றது. இந்தச் சதுர்வேதிமங்கலம், பிரம்மதேயம் என்ற அமைப்புகள் அந்தணர்களுக்கு வழங்கும் பகுதிகளாக விளங்கின.

பிற குறிப்புகள் :

கல்வெட்டுகளில் மாடல கோத்ரம், ஆத்ரய கோத்ரம், காசிப கோத்ரம், ஸ்ரீவத்ச கோத்ரம் முதலிய கோத்திரப் பெயர்கள் காணப்படுகின்றன. மாடல கோத்ரத்து பிள்ளையாழ்வி ஆள்வன், ஆத்ரய கோத்ரத்து சங்காதினம்பி மன்னியப்பன், காசிப கோத்ரத்து அழகிய மணவாள வானமாளன் முதலியோர்களும், ஸ்ரீவத்ச கோத்ரத்து சிலவர் பிள்ளை பெரிய நாட்டிற் பண்டித பெருமாள் கெங்காழ்வான் என்பவரும் குறிக்கப்படுகின்றனர்.

அளவை கல்வெட்டுகள் பற்றிக் குறிக்கும் போது குறுப்பு நாழி என்றே குறிக்கின்றன. குறுப்பு நாழி என்பது கொங்கு நாட்டிலுள்ள குறுப்பு நாட்டில் தனி அளவைக் குறிக்கின்றன போலும்.

வீரராசேந்திர சோழனின் 20-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் அம்மனுக்கு பொன் ஆபரணம் கொடையாகக் கொடுக்கப்பட்டிருந்ததைக் குறிப்பிடுகின்றது. (A.R.E. No. 563/1905)

அம்மன் கோயிலிலுள்ள ஒரு கல்வெட்டில் குறுப்பு நாட்டிலுள்ள அனைத்துக் கோயில்களுக்கும், வருகின்ற வருமானத்தைப் பிரித்துக் கொடுக்கும்படி உள்ளது. (A.R.E. No. 585/1905)

சிவன் கோயிலில் உள்ள கல்வெட்டுகளின் முடிவில் பன்மாகேஸ்வர ரகூஷி என்றும், விஷ்ணு கோயிலிலுள்ள கல்வெட்டுகளின் முடிவில் வைஷ்ணவ ரகூஷி என்றும், சமணர் கோயிலில் காணப்படும் கல்வெட்டுகளின் முடிவில் ஸ்ரீமன் ஜைன ரகூஷி என்றும் உள்ளன. மேலும் கல்வெட்டுகளில் தர்மம் முதலியவைகள் சந்திரன் சூரியன் உள்ளவரையில் நடப்பதாக என்றுள்ளன. இத்தர்மத்துக்கு தீங்கு நினைப்பவன் வம்சம் அற்று போகும் என்று குறிக்கின்றன.

⌘⌘⌘

இலக்கியத்தில் விஜயமங்கலம்

கொங்கு நாட்டில் சங்க கால இலக்கியப் புலவர்கள் பலர் இருந்தனர். புறநானூறில் பல பாடல்கள் மறைந்து விட்டன. எஞ்சியவை 398 பாடல்களே. இவற்றைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 156 ஆகும். இவர்களுள் பொன்முடியார், பெருந்தலைச் சாத்தனார், கருவூர்க்கிழப்பிள்ளை, கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார், அந்திகீரனார், கோசனார், உரோடகத்துக் கந்தரத்தனார் ஆகியோர் குறிக்கத்தக்க சங்க காலக் கொங்கு புலவர்கள் ஆவார்கள். சங்க கால இலக்கியங்களில் விஜயமங்கலத்தைப் பற்றி குறிப்புகள் காணப்படவில்லை.

கொங்கு நாட்டில் தேவாரம் பாடப்பெற்ற ஏழு சிவாலயங்களும், வைப்புத்தலங்களாக ஆறு இடங்களும் உள்ளன. சுந்தரர் மூன்று முறை கொங்கு நாட்டிற்கு வந்துள்ளார். அவர் சென்ற இடங்கள் திருப்பாண்டிக் கொடுமுடி, திருப்பேரூர், திருமுருகன்பூண்டி, அவிநாசி, வெஞ்சமாக்கூடல் முதலியவைகளாகும். ஆனால் விஜயமங்கலத்தைப் பற்றிய குறிப்பு தேவாரத்தில் காணக் கிடைக்கவில்லை. ஆனால் விஜயமங்கலத்தைத் தன்னுள் கொண்ட குறுப்பு நாட்டைப் பற்றி சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'கொங்கிற் குறும்பிற் குரக்குத் தளியாய்' என்று பாடியுள்ளார்

அருணகிரிநாதர் முருகனின் தலங்களையெல்லாம் பாடி வரும்போது, விஜயமங்கலத்திற்கும் வந்து பாடியுள்ளார்.

"விறல் சுரும்புநற் க்ரீதேசி பாடிய
விரைசெய் பங்கயப் பூவோடை மேவிய
விஜயமங்கலத் தேவாதி தேவர்கள் பெருமாளே."

கொங்கு மண்டலச் சதகம் என்ற நூலை எழுதியவர் வாலசுந்தரக் கவிஞர் "வடித்தமிழ் நூலையாசான் வாலசுந்தரம் யான் சொன்னேன்" என்பதால் அறியலாம். இவருடைய காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு ஆகும். விஜயமங்கலத்திலுள்ள சமணக் கோயிலில் காணப்படும் கி.பி. 10-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்று புளியம்மை என்ற பெண்

சல்லேகனை விரதமிருந்து உயிர்நீத்ததைக் குறிக்கின்றது. வாலசுந்தரக் கவிஞரும் விஜயமங்கலத்தை "விளைவயல் சூழ் மங்கைப் பத்தினிக் கோட்டத்தில்" என்று குறிப்பிடுகின்றார்.

விஜயமங்கலத்தை மங்கை என்று குறிப்பிட்டும் புலவர்கள் பாடியுள்ளனர். 'நீ எந்த ஊர்' எனக் கேட்ட தோயக் குலத்தானுக்கு விடையாக விஜயமங்கைச் சாமிநாதப் புலவன் பாடியதாக,

"தந்திர மாய்வந்து வெள்ளோட்டில் வாலசுப்புலவன்
முந்திய தோயக்குலத்தானை வெல்லென்றென மொழியச்
செந்தமிழ் மங்கையில் வாழ்சாமி நாதன் செயிந்தவனை
வந்த வழியினி லோட்டி யதுங்கொங்கு மண்டலமே."

என்று கொங்கு மண்டல சதகத்தில் விஜயமங்கலம் பற்றிய குறிப்பு ருகின்றது.

"கூடுவர் கம்பளர் சோணகர் வீரர் குருகுலத்தோர்
ஆடுவர் வெம்பரி வீரரெல் லாம்புக ழைவர்மங்கை
நீடிய வாரணன் சீரங்கன் வடமலை நீண்மைபெற
வாடியல் வேடுவர் நம்மைவென்றார் கொங்குமண்டலமே"

என்ற பாடலில், வேளாளன் அச்சுதராயனும், வேட்டுவன் வேங்கடராயனும் விஜயமங்கலத்தில் போரிட்டதாக, விஜயமங்கலம் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது.

கார்மேகம் கவிஞர் என்று அழைக்கப்படும் ஜினேந்திரன் என்பவரும் மற்றொரு கொங்கு மண்டல சதகத்தை இயற்றியுள்ளார். இவரும் விஜயமங்கலம் பற்றிய குறிப்புகளைத் தரும் பாடல்களை இயற்றியுள்ளார்.

"போயா நரவுட னெற்போரில் கிடந்திடப் புற்றிரைச்சற்
றீயார வெந்து பொடிபட வென்றன்று செந்தமிழால்
ஓயாத வாக்கிதென் மங்கைச் சுவாமியென் றோர்புலவர்
வாயார வங்கதம் பாடின துங்கொங்கு மண்டலமே"

என்ற இப்பாடலில், விஜயமங்கலத்தைச் சேர்ந்த சுவாமிப் புலவன் புற்றிரைச்சலுக்குப் போய் அங்கிருந்த நெற்போர் சாம்பலாகுமாறு வசை பாடினான் என்று குறிப்பு காணப்படுகின்றது.

"சொல்லிக் கணைய வகத்துறைக் கோவை சொனபுலவன்"
பல்லக் கெடுத்துக் கழனியும் பொன்னும் பரிசளித்த
வெல்லப் படைத்தலை வீர னுலகுடை வீரனமர்
மல்லர்க் கினிய குறுப்பினை நீள்கொங்கு மண்டலமே"

இதில் குறிப்பிடும் அகத்துறைக் கோவைச் செய்யுள் கிடைக்கவில்லை. புலவன் பெயரும் தெரியவில்லை. ஆனால் அக்கோவையைக் கேட்டுப் புலவனது பல்லக்கைச் சுமந்து வயலும் பொருளும் உதவியவனான உலகுடையான் என்னும் பெயர் உள்ள ஒரு கல்வெட்டு விஜயமங்கலம் நாகீஸ்வரமுடையார் கோயிலில் உள்ளது.

விஜயமங்கலத்துக்கருகில் அரசண்ணாமலை என்ற ஒரு மலை உள்ளது. இம்மலையைப் பற்றிய அதிசயமலை விருத்தம் என்ற பாடல் ஒன்று உண்டு. அதில் விஜயமங்கலத்தை மங்கை என்றும், அம் மலையிலுள்ள அம்மனை விஜயமங்கலத்துப் பகுதியில் வாழ்கின்ற அம்மன் என்றும் குறிப்பிடுகின்றது.

"அளவிலா மகிமையும் மங்கையம் பதியில்வாழ்
அதிசெய மலை யம்மனே"

என்று பாடலின் கடைசி இரு அடிகள் குறிக்கின்றன.

⌘⌘⌘

வழிபாடும் விழாக்களும்

சிவன் கோயில்

நித்திய பூசைகள் :

ஆகம முறைப்படி வழிபாடுகள் நடந்து வருகின்றன. தினசரி இரு வேளைகள் காலை 9 மணிக்கும், இரவு 7 மணிக்கும் நைவேத்தியம் படைத்து பூசை செய்யப்படுகின்றன.

மாதந்தோறும் கிருத்திகை தினத்தில் முருகனுக்கு மட்டும் சிறப்பான பூசை நடைபெற்று வருகின்றது.

நவராத்திரி உற்சவப் பூசை :

புரட்டாசி மாதம் அமாவாசைக்கு மறு நாளிலிருந்து நவராத்திரி உற்சவம் ஆரம்பமாகின்றது. மொத்தம் ஒன்பது நாட்கள் நடைபெறுகின்றன. அந்நாட்களில் சிறப்பான பூசைகள் செய்வர். சந்திரசேகரர் திருமேனியும் சௌந்தர நாயகியும் ஊரில் திருவுலாக் காட்சியாக அந்நாட்களில் எடுத்துச் செல்வர்.

மார்கழி மாதப் பூசை :

மார்கழி மாதத்தில் திருவாதிரை நட்சத்திரத்து அன்று ஆருத்தரா தரிசனமும் பூசையும் நடைபெறுகின்றன. நடராஜர் திருமேனி இல்லாத காரணத்தினால் சந்திரசேகரர் செப்புத் திருமேனியை ஊரில் திருவுலாவாக எடுத்துச் செல்வர். அந்நாளில் தேவஸ்தானத்தின் விசேடங்கள் நடைபெறுகின்றன.

சிவராத்திரி :

மாசி மாதம் சிவராத்திரி அன்று இரவில் சிவபெருமானுக்கு நான்கு காலம் பூசைகள் நடைபெறகின்றன.

குரு பூசை :

அறுபத்துமூவர் நாயன்மார்களுக்கும் விஜயமங்கலத்தைச் சேர்ந்த சில குடும்பத்தினரும், அருகிலுள்ள கிராமங்களைச் சேர்ந்த சில குடும்பத்தினரும் நிரந்தரமாகக் கட்டளைகள் ஏற்படுத்தி குரு பூசைகள் நடத்தி வருகின்றனர்.

பூசைப் பொருட்கள் :

தினசரி பூசைக்கு தேங்காய், வெற்றிலை, வாழைப்பழம், சூடம் முதலியனவும், சிறப்புப் பூசைகளுக்கு மஞ்சள், குங்குமம், சந்தனம், விபூதி, சூடம், இளநீர், எலுமிச்சம் பழம், பால், தயிர், நல்லெண்ணெய் இவைகளுடன் தேங்காய், வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் முதலியனவும் பயன்படுத்தப்படுகின்றன.

தீபாரதனையின் போது தினசரி பூசைக்கு கற்பூரத் தட்டை மட்டும் பயன்படுத்துகின்றனர். சிறப்புப் பூசைகளின் போது அடுக்கு தீபம், பஞ்சமுக தீபம், காயத்திரி தீபம், ஏகமுக தீபம், பூரண கும்ப தீபம், கற்பூர தீபம் முதலிய தீப பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

ஒவ்வொரு புரட்டாசி மாதம் மூன்றாவது சனிக்கிழமையன்று சேலம் மாவட்டத்துச் செட்டியார்கள் இக்கோயிலுக்கு வந்து பஜனை பாடி சிறப்பான வழிபாடுகளை நடத்துவர். அச்சமயத்தில் விசேட பூசைகள் இக்கோயிலில் நடைபெறும்.

விழாக்கள்

விஜயமங்கலத்தில் மேற்கண்ட மூன்று கோயில்களிலும் குறிப்பிட்டுச் சொல்லும்படி விழாக்கள் ஏதுமில்லை. ஆனால் கிராமத் தெய்வமாகக் கருதப்படும் மாரியம்மனுக்கு நடைபெறும் விழா மிகவும் கோலாகலத்துடன் நடைபெறும்.

மாரியம்மன் விழா :

ஊரிலுள்ள மக்கள் அனைவரும் ஒன்று கூடி மாரியம்மன் விழா நடத்துவதைப் பற்றி பேசி முடிவெடுப்பார்கள். இச்செயல் சித்திரை மாதம் நடைபெறும். அமாவாசை அன்று சாமியிடம் பூ

கேட்டல். அதாவது விழா நடத்த அம்மனுக்கு விருப்பமுண்டா என்று அறிந்து கொள்ள, தாங்கள் நினைத்த பூவை பூசாரி கொடுத்தால் விழா நடத்த ஆரம்பிப்பார்கள். மாறாக வேறொரு பூ வந்து விட்டால் ஏதாவது பரிகாரம் செய்து பிறகு விழாவுக்கு வேண்டிய வேலைகளைச் செய்வார்கள். பிறகு வரும் புதன்கிழமை அன்று பூச்சாட்டுவார்கள். ஊரிலுள்ள வீடுகளில் விழா நடத்துவதற்காக வரி வசூல் செய்வார்கள். பூச்சாட்டுக்கு அடுத்த புதன்கிழமை கம்பம் நடுதல் நடைபெறும். அச்சமயம் பூசாரிக்குக் காப்புக் கட்டல் நடைபெறும் பதினைந்து நாட்களுக்கு அம்மனுக்கு பூசைகள் நடக்கும். இந்தப் பதினைந்து நாட்களும் பூசாரி நோன்பு இருப்பார்.

வியாழக்கிழமை இரவு கம்பத்திற்குப் பூ போடுதல் நடைபெறும். கால்களில் சலங்கை கட்டி விருத்தம் சொல்லிக் கொண்டு கம்பத்தைச் சுற்றி ஆடுவார்கள். அடுத்த நாள் காலையில் பண்டாரம் (பூசாரி) அக்னி சட்டியை எடுத்துக் கொண்டு கோயிலைச் சுற்றி வருவார். ஊர் மக்கள் தண்ணீர், கற்பூரம் முதலியவைகளை எடுத்துச் செல்வர்.

திங்கட்கிழமை இரவு மாகாளி அம்மன் கோயிலுக்கு கும்பம் தாளிச்சு வைப்பார்கள். அன்று அம்மனுக்கு பூசை நடைபெறும். அம்மனைக் கிராமத்திற்கு, வெளியிலிருந்து ஊருக்குள் அழைத்துவர குதிரை பிடித்துச் செல்வர். இவ்வாறு அழைத்து வருவதை மக்கள் சாமி குடி புகுதல் என்று சொல்கின்றனர். அன்று இரவு விடியும் வரை ஆடுவார்கள். செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் ஊர் மக்கள் மாரியம்மன் கோயிலுக்குப் பூசைக்காகச் செல்வார்கள். புதன்கிழமை இரவு கரக ஆட்டம், மயில் ஆட்டம், அம்மன் ஊர்வலம் வருதல் முதலியன நடைபெறும். வியாழக்கிழமை அதிகாலை நான்கு மணிக்கு மாவிளக்கு மாரியம்மன் கோயிலுக்கு மக்களால் எடுத்து வரப்படும். கிராம மக்கள் அனைவரும் வருவார்கள். காலையில் பொங்கல் வைப்பார்கள். அப்போது கிடாவும் வெட்டுவார்கள். மாலை வரை விசேஷங்கள் நடைபெறும். மாலையில் பூவோடு எடுப்பார்கள். விருத்தம் சொல்லி .கம்பம் எடுத்து ஆடிக் கொண்டு வருவார்கள். ஊர் மக்கள் கம்பத்தின் மீது நீர் ஊற்றுவார்கள். கம்பத்தை வரியிலோ அல்லது கிணற்றிலோ விடுவர். இதை கங்கையில் விடுதல்

என்று மக்கள் கூறுகின்றனர். திரும்பி வரும்போது மேளம் கொட்ட மாட்டார்கள். கோயிலுக்கு வந்ததும் பூசை நடைபெறும். வெள்ளிக் கிழமை காலை மஞ்சள் நீர் தெளித்து விளையாடுவர். பிறகு மறு பூசை நடைபெற்று, ஊரில் பிரசாதம் கொடுப்பர்.

விஜயமங்கலத்தில் சுமார் 75 ஆண்டுகளுக்கு முன்பு வரை தேர்த்திருவிழா நடைபெற்று வந்ததாக அவ்வூர் மக்கள் கூறினர். இப்பொழுது அத்தேர் பழுதடைந்த நிலையில் உள்ளது. தேர் வீதி என்ற பெயர் கொண்ட ஒரு வீதி விஜயமங்கலத்தில் இருக்கின்றது.

⌘⌘⌘

விஜயமங்கலம் கிராமமும் மக்களும்

கிராமம் :

கோவை நகரிலிருந்து ஈரோடு செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் 70 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது விஜயமங்கலம். அட்சரேகை 11° க்கு சற்று மேலாகவும், தீர்க்க ரேகை 70° 30° என்ற அளவிலும் உள்ள கோடுகளில் அமைந்துள்ளது. விஜயமங்கலம் மூன்று கோயில்களுக்கும் நடுவில் அமைந்துள்ளது.

மக்கள் :

விஜயமங்கலத்தில் வாழுகின்ற மக்களில் பெரும்பகுதியினர் விவசாயத் தொழிலையும், துணி நெய்யும் தொழிலையும் (நெசவுத் தொழில்) செய்கின்றனர். விவசாயம் அவ்வூரில் அனைவராலும் செய்யாததற்குக் காரணம், அங்கு ஆறோ, குளமோ, வாய்க்காலோ இல்லை. இருக்கின்ற ஒரு ஏரியிலும் தண்ணீர் இல்லை. இப்பொழுது அங்கு தறி நெய்யும் தொழில்தான் மிகச்சிறப்புற்று விளங்குகின்றது. ஏராளமான ஆடைகள் பல வண்ணங்களில் இங்கு தயாரிக்கப்படுகின்றன. கோவை மாவட்டமே பருத்திக்கும் துணிவகைகளுக்கும் பெயர் பெற்ற இடமல்லவா. பவணந்தி முனிவர் தான் காணும் நூற்புப் பணியை புலவர்கள் தொண்டோடு ஒப்பிட்டு "பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச்

செஞ்சொற் புலவனே சேயிழையா - எஞ்சாத
கையே வாயாகக் கதிரே மதியாக
மையிலா நூன் முடியுமாது"

என்று கூறுகின்றார்.

பனுவல் என்ற சொல் பஞ்சு கொண்டு நூற்கும் நூலுக்கும் பாடல் கொண்டு யாக்கும் நூலுக்கும் பொதுவானதே. பனுவல் என்ற சொல் பஞ்சு என்ற பொருளிலும் 'பருத்திப் பெண்டிர் பனுவல்' (புறம் 125) என வழங்குகிறது.

பெருங்கதையை இயற்றிய கொங்கு வேளிர், தன்நூலில் தறியைப் பற்றிக் கூறியுள்ளார்.

"உருமண்ணு வாவும் யூகியுந் தறியா
கரும மேற்கோ பெரிநூல் ஆக
பாண்டு குழலின் ஆயிடைத் திரிதர"

பலவகை ஆடைகளைப் பற்றி, "புதுநூல் பூந்துகில் அருமடியுடீ இ என்று குறிப்பிட்டுள்ளார். பல்வேறு வண்ணங்களைப் பற்றி,

"பைங்கன் பாதிரி போது பிரித்தன்ன
அங் கோசிகமும் வங்க சதாளும்
கொங்கோர் கொங்கின் கொய்ம மலரென்ன
பைங்கேழ் கலிங்கமும் பட்டும் தூதும்
நீலமும் அரத்தமும் வாலிழை வட்டமும்
கோலமோடு புணர்ந்த வேறுவேறு இயற்கை
நூலினும் உலண்டினும் நாரினும் இயற்றன்ன"

என்று பெருங்கதையில் குறிப்பிட்டுள்ளார். தொன்றுதொட்டு துணி நெய்யும் தொழில் விஜயமங்கலத்தில் இருந்து வருகின்றன என்பதை மேற்கண்ட பாடல்களால் அறியலாம்.

கொங்கு வேளாளர் திருமண முறை :

கொங்கு வேளாளர் வீட்டுத் திருமணம் மிகவும் நீண்ட பல சடங்குகளையும் உடையது. பரம்பரையாக நடந்து வரும் பழக்கத்தை இன்றும் கடைப்பிடித்து வருகிறார்கள்.

நிச்சயதாம்பூலம் :

பெண் வீட்டில், மாப்பிள்ளை வீட்டுப் பெரியவரும், பெண் வீட்டுப் பெரியவரும் எதிரெதிரே அமர்ந்த பிறகு மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டாரிடம் உங்கள் பெண்ணை எங்கள் மகனுக்கு இந்த மாதம் இந்த தேதியில் மணம் செய்து கொள்கிறோம் என்று சொல்வார். பெண் வீட்டார் சம்மதம் தெரிவித்து மாப்பிள்ளை வீட்டுப் பெரியவருக்கும் மற்றவர்களுக்கும் தாம்பூலம் வழங்குவார். பிறகு 'அருமைக்காரர்' என்று அழைக்கப்படுபவர் சீர் தட்டுக்களை மணப்பெண்ணிடம் கொடுப்பார். மணப்பெண் புதிய சேலை, மற்றும் நகைகளை அணிந்து பெரியவர்களை

வணங்கிய பிறகு, ஒரு தட்டில் தேங்காய், வெற்றிலை பாக்கு முதலியவற்றுடன் மாங்கல்யத்திற்கு வேண்டிய பவுனையும் வைத்து பொன் நகை செய்யும் ஆசாரியிடம் பொன் தாலி செய்யும்படி சொல்லி அருமைக்காரர் கொடுப்பார். இந்த தாலிக்கு முப்பிரிவு தாலி என்று பெயர்.

இந்த அருமைக்காரர் என்பவர் கொங்கு வேளாளர் திருமணங்களில் முதலிடம் வகிப்பவர். நிச்சய தாம்பூலம் முதற் கொண்டு திருமணம் முடியும் வரை நடக்கும் பல சடங்குகளிலும் முதன்மையாக நின்று அவற்றினை செய்து வைப்பார். இந்த அருமைக் காரராக அனைவரும் இருக்க முடியாது. அதற்கென உள்ள சடங்கை செய்து கொண்ட பிறகு தான் அருமைக்காரராக இருக்க முடியும்.

⌘⌘⌘

குறிப்பு: 1977-78-ஆம் ஆண்டு இவ்வாய்வேடு சமர்ப்பிக்கப்பட்டது. எனவே அந்நாளைய நிலையில் மாவட்டம், வட்டம் ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளது. விஜயமங்கலம் தற்சமயம் ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டத்தில் அமைந்துள்ளது

துணைநின்ற நூல்கள்

1. S.I.I. Volumes
2. A.R.E. Volumes
3. South Indian Temple Inscriptions
4. Epi. Indica
5. Epi. Carnatica
6. Corpus of Tamil Brahmi Inscriptions - I. Mahadevan
7. தருமபுரி கல்வெட்டுகள் - நடன. காசிநாதன்
8. சோழன் பூர்வ பட்டயம் - கி. நாச்சிமுத்து
9. Gazetters of Coimbatore District 1966
10. Coimbatore District Census 1971, Vol. I
11. தமிழக் கோயிற்கலைகள் - இரா. நாகசாமி, மா. சந்திரமூர்த்தி,
12. கல்வெட்டியல் - நால்வர்
13. கொங்கு இதழ்
14. ஆய்வுக் கொத்து
15. ஆய்வுத் தேன்
16. தேனோலை
17. திருவையாறு - சு. இராசகோபால்
18. கோவை மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு
19. கொங்கு நாட்டுக் கவுண்டர்கள் - வி. இராமமூர்த்தி
20. தமிழர் வரலாறு - தேவநேயன்
21. ஊரும் பேரும் - ரா.பி. சேதுப்பிள்ளை

22. கோயம்புத்தூர் மாவட்டம் - சோமலெ

23. தமிழ் இலக்கிய வரலாறு - மு. அருணாசலம்

24. யாவரும் கேளீர் - டாக்டர் இரா. நாகசாமி

25. பாண்டியர் வரலாறு - சதாசிவப் பண்டாரத்தார்

26. தென்னிந்தியா வரலாறு - கே. கே. பிள்ளை

27. கொங்கு நாட்டு வரலாறு - மயிலை சீனி. வெங்கடசாமி

28. South Indian Polity - T.V. Mahalingam

29. The Pandiyan Kingdom - Prof. K. A. N. Sastri


30. The Kongu Country - Dr. M. Arokiasamy

31. South Indian Studies - Dr. R. Nagasamy

⌘⌘⌘

நிழற் படங்கள்

முன் அட்டை :
கோபுரம்
சந்திர பிரபா கோயில்
காலம் கி.பி. 14-15 ஆம் நூற்றாண்டு




இராமானுஜர் சித்திரமேழி விண்ணகர் ஆழ்வார் கோயில்
விஜயமங்கலம் காலம் : கி.பி.

கி.பி. 15ஆம் நூற்றாண்டு




திருமங்கை ஆழ்வார்
விஜயமங்கலம்

கி.பி. 16ஆம் நூற்றாண்டு



விஜயாபுரி அம்மன் கோயில்
விஜயமங்கலம்
கி.பி. 18ஆம் நூற்றாண்டு




கோயில் கட்டடக்கலை சித்திரமேழி ஆழ்வார் கோயில்
விஜயமங்கலம்
கி.பி. 12ஆம் நூற்றாண்டு




விஷ்ணு / விசுவக்சேனர்
சித்திரமேழி விண்ணகர் ஆழ்வார் கோயில்
விஜயமங்கலம்
கி.பி. 14-15 ஆம் நூற்றாண்டு




யோக தக்ஷ்ணாமூர்த்தி நாகேசுவரர் கோயில்
விஜயமங்கலம்
கி.பி. 9-10 ஆம் நூற்றாண்டு



முருகன்-நாகேசுவரர் கோயில்
விஜயமங்கலம்
கி.பி. 10 ஆம் நூற்றாண்டு




சூரியன்-நாகேசுவரர் கோயில்
விஜயமங்கலம்
கி.பி. 10ஆம் நூற்றாண்டு



சண்டிகேசுவரர் நாகேசுவரர் கோயில்
விஜயமங்கலம்
கி.பி. 10ஆம் நூற்றாண்டு




ஜேஷ்டா நாகேசுவரர் கோயில்
விஜயமங்கலம்



சப்தமாதர் நாகேசுவரர் கோயில் விஜயமங்கலம்

கி.பி. 8-9ஆம் நூற்றாண்டு



நம்மாழ்வார் சித்திரமேழி விண்ணகர் ஆழ்வார் கோயில்
விஜயமங்கலம்

கி.பி. 16 ஆம் நூற்றாண்டு



நவகண்டம் விஜயாபுரி அம்மன் கோயில்
விஜயமங்கலம்
காலம் : கி.பி. 11-12ஆம் நூற்றாண்டு